# தவப்போர்



(தவக்காலச் சிந்தனைகள் - 2013)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் : தவப்போர்
(தவக்காலச் சிந்தனைகள் - 2013)

பதிப்பு : 13.02.2013

வெளியீட்டாசிரியர் : அருள்பணி என்.ஜே.ஞானப்பொன்ராஜா

பதிப்பாசிரியர் : அருள்பணி வி.பி.தனேந்திரா

வெளியீடு : கிறிஸ்தவக் கற்கைநெறி அலகு,
சென்.ஜோன்ஸ் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

சிந்தனைகள் எழுதியோர் :

அருள்பணி யோசுவா இரத்தினம்
(கொழும்பு)

அருள்பணி வி.பி.தனேந்திரா
யாழ்ப்பாணம்.

## தொடர்புகளுக்கு

Christian Study Unit
St.John's College
Jaffna.

கிறிஸ்தவக் கற்கைநெறி அலகு,
சென்.ஜோன்ஸ் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

e.mail : stjohns@sltnet.lk

T.P.No : 0212222432

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டுரை

*மோசே மலையில் நாற்பது பகலும், நாற்பது இரவும் தங்கியிருந்தார்" (வி.ப. 24:18).*

இந்த நாற்பது இரவும் நாற்பது பகலும் எமக்கு ஞாபகம் ஊட்டுவது தவக்காலத்தை. மோசே மலைமேல் ஏறி கடவுளின் மாட்சியைக் கண்டார். நாம் ஏறவேண்டிய மலை கொல்கொத மலை. அந்த மலையின் காட்சிகள் எமது பிரார்த்தனையின் மலையாக, தியான மலையாக மாறவேண்டும். அதற்குத்தான் தவக்காலம். மேகத்தின் நடுவில் இறைவன் மோசேயை அழைத்தார். பிரார்த்தனை என்பது கவுளின் குரலை நாம் கேட்பது. நாம் மௌனித்து கடவுளுடன் கதைப்பது. அப்போது கவுளின் குரல் எம்மை உருமாற்றும்.

இயேசு நாற்பது நாள் பாலைநிலத்தில் கழித்தார். கொடிய மிருகங்கள், பிசாசுகள் நிறைந்த இடம் பாலைநிலம். அங்கு பிசாசின் சோதனைகளை விரட்டினார். வெற்றி கொண்டார். இத்தவக்காலம் எமக்குள் இருக்கும் பிசாசுகளை விரட்டித் துரத்தும் காலம். இன்னொருவகையில் சொன்னால் பிசாசுக்கு எதிராக நடக்கும் யுத்தம். அந்த ஆன்மீகயுத்தத்தைப் புரிய 'இறைவார்த்தை' என்னும் ஆயுதம் தேவை. "ஆண்டவரே நாங்கள் யாரிடம் போவோம்? நிலைவாழ்வு அளிக்கும் வார்த்தைகள் உம்மிடம் தானே உள்ளன" (யோவான் 6:68) என்று பேதுரு கூறினார். எனவே நிலைவாழ்வு அளிக்கும் வார்த்தைகளை தினமும் தியானிப்போம். அதற்கு 'தவப்போர்' துணைபுரியும் என்பது எமது நம்பிக்கை.

அன்பு வாசகர்களே! அந்த அந்த நாளுக்குரிய திருமறைப் பகுதிகளை வாசியுங்கள். நாள் தியானங்களையும் வாசியுங்கள். இறைவன் உங்கள் மௌனத்தில் பேசுவதை கேளுங்கள். பிசாசுகளை எதிர்த்து 'தவப்போர்' புரியுங்கள். உயிர்த்த கிறிஸ்துவுக்கு சாட்சியாக வாழுங்கள். இத்தியானங்களை எழுதியோருக்கு எம் நன்றிகள். உங்கள் விமர்சனங்களை எமக்கு எழுதுங்கள். எமது வெளியீட்டுப் பணிக்கு கைகொடுத்து உதவுங்கள்.

**அருள்பணி என்.ஜே.ஞானப்பொன்ராஜா**
**முதல்வர்,**
**சென்.ஜோண்ஸ் கல்லூரி,**
**யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

மீண்டும் தவப்போர் புரியும் காலம் நெருங்கிவிட்டது. இரண்டாவது முறையாக 'தவப்போர்' மூலம் உங்களுடன் தொடர்புகொள்வதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம். கடந்த ஆண்டு எமது 'தவப்போர்' சிந்தனைகளுக்கு நல்ல வரவேற்பிருந்தது. அதுவே இம்முறை தொடர்ந்தும் எழுதுவதற்கும், பதிப்பிப்பதற்கும் எமது தூண்டுகோலாய் அமைந்தது.

தவப்போர் புரிவதற்கு நாம் களம் அமைக்கவேண்டும். அக்களம் 'அமைதிக்களமே' பரபரப்பான உலகில், அவசர உலகில், சப்தமயமான உலகில் அமைதியைத் தேடுவது என்பது முயற்கொம்பாகிவிட்டது. ஆனால் இயேசு அமைதியை நாடிப்போனார் என்ற திருமறையின் காட்சி எங்களை நின்று சிந்திக்க வைக்கவேண்டும். அமைதியே இறைவனுடனான உறவை இறுக்கமாக்கும். அமைதியே இறைவன் திருவுளத்தை எமக்குத் தெளிவுபடுத்தும். அமைதியே ஆன்மாவை ஆழப்படுத்தும். அமைதியே உள்ளத்தில் அமைதி தரும்.

மனக்கண்ணாடியில் தம்மைப் பார்ப்பவர்தான் தமது உண்மை நிலை உணரமுடியும். தூய்மை வழியில் நடைபோடமுடியும். திருமறை நம்மை நமக்குக் காட்டும் கண்ணாடி. இறைவனை நமக்குக் காட்டும் கண்ணாடி. எனவே திருமறையில் மூழ்குவதே இந்தத் தவப்போருக்கு எம்மை ஆயத்தப்படுத்தும். எனவே திருமறைக் குறிப்புக்களை அவசரப்படாமல் உன்னிப்போடு வாசிப்பது அவசியம். அடுத்து தியானக் குறிப்பை வாசித்தல் வேண்டும். மீண்டும் திருமறைப் பகுதியை அசைபோடல் (வாசித்தல்) வேண்டும். அது நம்மை பிரார்த்தனைக்கு இட்டுச்செல்ல வேண்டும். இதுவே முழுமையான தியானம். இதனை இந்தத் தவக்காலத்தின் போது அமைதிநேரம் ஒதுக்க எத்தனிப்பீர்கள் என்பதே எமது நம்பிக்கை. எமது பிரார்த்தனை.

இத் தவக்காலச் சிந்தனைகள் தனித்தியானத்திற்கும் குழுத்தியானத்திற்கும் உகந்தவையே. உங்கள் திருச்சபைகளில் தவக்கால சிந்தனைக் குழுக்களை உருவாக்கிப் பயன்பெற வேண்டுகின்றோம்.

எல்லாம் வல்ல இறைவனின் உயிர்ப்பு உங்கள் வாழ்வில் துளிர்ப்பதாக.

**வி. பி. தனேந்திரா**
**இணைப்பாளர்,**
**கிறிஸ்தவ கற்கைநெறி அலகு,**
**சென். ஜோண்ஸ் கல்லூரி,**
**யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பெப்ரவரி - 13**

யோவேல் 2:12- 18
மத்தேயு 6:1 – 6, 16 – 18

# மனமாற்றத்தின் காலம்

"நீங்கள் உங்கள் உடைகளைக் கிழித்துக்கொள்ள வேண்டாம். இதயத்தைக் கிழித்துக்கொண்டு உங்கள் கடவுளாகிய ஆண்டவரிடம் திரும்பி வாருங்கள்" (யோவேல் 2:13).

தவக்காலம் மனமாற்றத்தின் காலம். எமது ஆன்மீகத்தைப் புடமிடும் காலம். உலகப்பற்றைத் துறந்து ஆண்டவரின், பாதச் சுவடுகளைப் பின்பற்றும் காலம். எமது சுயத்தை சுயநலத்தை இழக்கும் காலம். எமது விருப்புக்குரியதைத் துறந்து ஏகாந்தம் புரியும காலம்.

இந்தத் தவக்காலம் விசேடவிதமாக இயேசுவின் பாடுகள் மரணம் உயிர்ப்பை நினைத்துத் தியானிக்கும் காலம். அதனை எமது வாழ்க்கைக்கு முன்மாதிரியாகக் கொள்ளும் காலம். இயேசுவைக் குருவாகவும் எம்மைச் சீடர்களாகவும் கொண்டு கற்றுக்கொள்ளும் காலம்.

'தபசு' என்றால் இலைதுளிர் காலம் என்பது பொருள். இக்காலத்தில் மரத்தில் உள்ள இலைகள் எல்லாம் வீழ்ந்து மரம் இறந்துபோன தோறறத்தினைக் கொடுக்கும். ஆனால் தோற்றத்தில் அப்படி காணப்பட்டாலும மரம் இறக்கவில்லை. அதில் உயிர் இருக்கின்றது. அந்த உயிர் துளிர் விடும். மாட்சியுடன் செழிக்கும். இதுதான் 'தபசு' காலத்தில் நினைவு கூறும் விடயம்.

இயேசுவின் பாடுகள் மரணம் என்பன வெறும் இறப்பு அல்ல. அதற்கு அப்பால் ஓர் உயிர்ப்பின் மாட்சி உண்டு என்பதை அனுபவிக்க ஆயத்தமாகும் காலம் தபசு காலம்.

கோதுமை மணி மண்ணில் வீழ்ந்து மடியாவிட்டால் பலன் கொடுக்க முடியாது என்பதுபோல இறப்பு உயிர்ப்பின் அடையாளம், மாட்சியின் குறியீடு.

தவக்காலம் 40 நாட்கள் அனுசரிக்கப்படுகின்றது.

திருமறையில் 40 என்ற எண் முதன்மை பெறுகின்றது.

நோவாவின் காலத்தில் 40 நாட்கள் மழை பொழிந்தது. பாவத்தை அகற்றி புதுப்பிக்க 40 நாட்கள் தேவைப்பட்டது.

இஸ்ராயேல் மக்கள் எகிப்தில் இருந்து விடுதலை பெற்று கானான் நாட்டை அடைவதற்கு 40 வருடங்கள் பாலைநிலத்தில் அலைந்து திரிந்தனர். இஸ்ராயேல் மக்கள் தங்களை மீட்டுப்பார்க்க 40 வருடங்கள் தேவைப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினிவே நகர் 40 நாட்களில் அழியும் என்று அறிவிக்கப்பட்டபோது அரசன் முதல் கால்நடைகள் வரை அனைவரும் நோன்பு இருந்தனர். மனமாற்றம் பெற்றனர். அழிவில் இருந்து நினிவே நகரை காப்பாற்றினர்.

இயேசு தனது பணியை ஆரம்பிக்கும் முன்பு பாலைநிலத்தில் 40 நாட்கள் நோன்பு இருந்தார். தனது பணிக்கு ஆயத்தம் செய்தார்.

சாம்பல் புதனாகிய இன்று "மனிதனே நீ மண்ணாக இருக்கிறாய் மண்ணுக்கே திரும்புவாய்" அல்லது "மனம் திரும்பி நற்செய்தியை நம்புங்கள்" என்று சொல்லியே குருவானவர் நெற்றியில் சாம்பலால் சிலுவை அடையாளத்தைப் போடுவார். 'மண்' அல்லது 'சாம்பல்' என பது எமது மரணம், இயலாமை, நிலையற்ற வாழ்வு என்பவற்றை நினைவூட்டுகின்றன.

இதை உணராத போதுதான் உலகில் தீமை தாண்டவம் ஆடுகின் றது. கடவுள் முன்னிலையில் நான் ஒன்றுமில்லை. வெறுமை. என்கின்ற நிலை தோன்றவேண்டும்.

நினிவே மக்கள் தங்களை அழிவில் இருந்து காப்பாற்றச் சாம்பல் மீது உட்கார்ந்து நோன்பு இருந்து செபித்தனர். செபம் கேட்கப்பட்டது. அழிவில் இருந்து காப்பாற்றப்பட்டனர். சாம்பல் தாழ்மையின் அடையாளம். கடவுள் முன்னிலையில் தாழ்மையாக இருக்கும் போது செபம் கேட்கப்படும். அகந்தை, ஆணவம், பெருமை முற்றாக ஒழிந்த நிலைதான் சாம்பல். தீயகுணங்கள் சாம்பலாக்கப்படும் போது கடவுள் எம் உள்ளத்தில் குடிகொள்வார்.

எனவே நாம் 'மண்', 'சாம்பல்' என்பதை எப்போதும் நினைக்க வேண்டும்.

"புனிதமான உண்ணா நோன்புக்கென நாள் குறியுங்கள்..." (யோவேல் 2:15).

புனிதமான உண்ணாநோன்பு என்பது ஆடம்பரம் இல்லாத நோன்பு. மற்றவர் பார்க்கவேண்டும் என்கிற தன்னலமில்லாத நோன்பு.

நோன்பு வெறும் சடங்கு சார்ந்த தன்மையில் அனுசரித்தல் கூடாது. இக்காலத்தில் மற்றவர்களுக்குத் தானதர்மங்களைச் செய்வதும், எனக்கு எது அதிகம் விருப்பம் என்று கருதுகின்றேனோ அதனைத் துறத்தலும் முக்கியம் பெறுதல்வேண்டும். செபத்திற்கு சிறப்பிடம் கொடுத்து மௌன வாழ்வை முன்னெடுத்தல் வேண்டும். அதாவது உளமௌனம் முதன்மை பெறுதல் வேண்டும்.

இன்று ஊடகத்தின் தாக்கம் அனைவரையும் அதிரவைக்கின்றது. இந்த அதிர்வலைகளில் இருந்து விலகுவது நோன்பின் தாற்பரியத்தை வலுப்படுத்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலகையின் ஆளுகை ஊடகத்தின் ஊடாக எங்கும் வியாபித்து மனிதத்தை மரணிக்கச் செய்துள்ளது. இழந்துபோன மனிதத்தை மீள புதுப்பிக்க நோன்பு இருப்போம். மனம் திரும்பி இறைவனை நோக்கிப் பார்ப்போம்.

**பிரார்த்தனை : இறைவா! உன் முன்நிலையில் நான் ஒன்றுமில்லை, வெறுமை என்ற உள்ளுணர்வை எப்போதும் எனக்குத் தா! எனக்குள் குடிகொண்ட பெருமை, அகந்தை, ஆணவம் எல்லாம் சாம்பலாகட அருள்தா. ஆமென்.**

OOO

**பெப்ரவரி - 14**

**இணைச் சட்டம் 30:15 – 20**
**லூக்கா 9:22–25**

# தன்னலம் துறத்தல்

"என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையை நாள்தோறும் தூக்கிக்கொண்டு என்னைப் பின்பற்றட்டும்" (லூக்கா 9:23).

சீடன் என்ற ஒருவன் இருந்தால் குரு என்ற ஒருவர் இருக்கவேண் டும். கிறிஸ்தவத்தில் நாம் சீடர்கள். இயேசு எம் குரு. அவரது போத னைகளையும், படிப்பினைகளையும், அவரது பாதத்தில் அமர்ந்து கற்றுக கொள்ளவேண்டும். குரு சொல்வதைக் கேட்க எம் செவி திறக்கப்பட வேண்டும், மனம் தூய்மையாக்கப்பட வேண்டும்.

இயேசு எமக்குக் கற்றுத்தரும் படிப்பினை 'தன்னலம்' துறத்தல். பிறருக்காக வாழ்தல். மற்றர் வாழ்வுபெற எம்மை அர்ப்பணித்தல்.

உலகப்பற்றுக்கொண்டு சுயநலத்துடன் வாழும் ஒருவர், பிறநலனை ஒருபோதும் கருத்தில் கொள்வதில்லை.

"ஒருவர் உலகம் முழுவதையும் தமதாக்கிக் கொண்டாலும் வாழ் வையே இழப்பாரெனில் அவருக்குக் கிடைக்கும் பயன் என்ன?" (லூக்கா 9:25).

'வாழ்வு' பெறவேண்டும் என்றால் உலகத்தை உடைமையாக்குவது அல்ல; இயேசுவின் போதனையை உடைமையாக்க வேண்டும். அவரது வழியில் செல்லுதல் வேண்டும்.

"உன் கடவுளாகிய ஆண்டவர் மீது அன்பு பாராட்டு. அவரைப் பின்பற்றி அவரது வழியில் நட. அவரது கட்டளைகளையும், நியமங்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைமைகளையும் கடைப்பிடி. அப்போது நீ வாழ்வாய். நீ பலுகுவாய்" (இ.சா.30:16).

"உன் கடவுளாகிய ஆண்டவர் மீது அன்பு பாராட்டு; அவரது குரலுக்குச் செவிகொடு, அவரையே பற்றிக்கொள். ஏனெனில் அவரே உனது வாழ்வு; அவரே உன் நீடிய வாழ்வு" (இ.ச.30:20).

இயேசுவின் வழி சிலுவை வழி. துன்பத்தின் ஊடாகப் பயணிக்கும் வழி. இதனால்தான் இயேசு ஒவ்வொரு கட்டத்திலும் தம் சீடர்களுக்கு எருசலேமில் தனக்கு நிகழப்போகும் துன்பங்களையும் மரணத்தையும் குறித்து எடுத்துச் சொல்கின்றார்.

இயேசு துன்பப்படுவதை சீடர்கள் விரும்பவில்லை. இயேசுவை மெசியாவாகப் பார்த்தனர். அருள்பொழிவு பெற்ற அரசனாக ஏற்றுக் கொண்டனர். உலகப் பிரகாரமான அரசனாகப் பார்க்க விரும்பினர். அதனால் துன்பத்தின் ஊடாக பயணிக்கும் மெசியாவை அடியோடு வெறுத்தனர்.

இதனால் தான் பேதுரு இயேசுவைப் பார்த்து "ஆண்டவரே! இது வேண்டாம். இப்படி உமக்கு நடக்கக்கூடாது" (லூக் 16:22) என்றார். இயேசு பேதுருவைப் பார்த்து "என் கண்முன் நில்லாதே சாத்தானே, நீ எனக்குத் தடையாய் இருக்கிறாய்; ஏனெனில் நீ கடவுளுக்கு ஏற்றவை பற்றி எண்ணாமல் மனிதருக்கு ஏற்றவை பற்றியே எண்ணுகிறாய்" (லூக் 16:23).

பிறருக்காகத் துன்பத்தை அனுபவிக்கத் தடையாக இருப்பது உலகப்பற்று. இந்த உலகப் பற்றைத் தருவது அலகை. கடவுளுக்கு உரிய வழி துன்பத்தின் வழி. இடுக்கமான வழி. துன்பத்தின் ஊடாக கடந்து செல்லும்போதுதான் உயிர்ப்பின் மகிமையை அனுபவிக்க முடியும்.

இன்று உலகம் முழுவதும் என்னுடையதாக வேண்டும் என்ற நோக்கில் தனி மனிதன் முதல் உலக நாடுகள் வரை அசுர வேகத்தில் தொழிற்படுகின்றன. மற்றவருக்கு ஏற்படும் பாதிப்பைப் பெரிதாக நோக்காது எனது மகிழ்ச்சி ஒன்றே முதன்மை எனும் இழிநிலை உண்டு.

நுகர்வு கலாசாரம் தன்னலத்தை உருவாக்கியுள்ளது. பொருள் குவிப்பு மனிதத்தை அழித்துள்ளது. பிறருக்காக வாழ, துன்பம் அனுபவிக்க, இரக்கச் செயல்களைச் செய்ய முடியாதுள்ளது. இந்த அலைக்குள் நாமும் இழுபட்டுச் செல்லாது இயேசுவை குருவாகக்கொண்டு சீடத்துவப் பண்புடன் வாழ்வோம்.

**பிரார்த்தனை : இறைவா! நீ என் குருவாக இருந்து கற்றுத்தா. உன் குரலுக்குச் செவி கொடுத்து அதனை என் வாழ்வில் முன்னெடுத்துச் செல்ல அருள்தா! துன்பத்தைக் கண்டு துவண்டுபோகாது உன்துணையோடு வெற்றி கொள்ள அருள்தா! ஆமென்.**

OOO



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பெப்ரவரி - 15**

எசாயா 58:1 – 9
மத்தேயு9:14 – 17

# பழமைக்குள் முடங்கிப்போன மனிதம்

கலாசாரங்களை, அரசியல் கலாசாரம் - பொருளாதாரக் கலாசாரம் - சமயக் கலாசாரம் எனப் பிரிக்கலாம்.

அரசியல் கலாசாரம் - அதிகாரச் சதிராட்டம்

பொருளாதாரக் கலாசாரம் - பணச் சதிராட்டம்

சமயக் கலாசாரம் - கொள்கைச் சதிராட்டம்

மூன்றுமே ஏதோவகை வன்முறையில் தான் கட்டியெழுப்பப்படுகின்றன. கட்டிக் காக்கப்படுகின்றன. மூன்றும் புறம் தள்ளப்படுகிறவர்களை உருவாக்கின்றன.

அரசியல் - அதிகாரப் பலமில்லாதவர்களை உருவாக்குகின்றன. பொருளாதாரம் - பணம் பலம் இல்லாத ஏழைகளை உருவாக்குகிறது. சமயம் - தீண்டப்படாதவர்கள், சடங்கு ரீதியாய் சுத்தமில்லாதவர்கள், கடவுள் அருளுக்கு அருகதையில்லாத பாவிகள் என்று புறம் தள்ளப்பட வேண்டியவர்களை உருவாக்குகின்றது.

இயேசு இந்த மூன்று கலாசாரங்களையும் ஆட்டம் காணச் செய்ய வந்தவர். இந்தக் கலாசாரங்களின் ஆணிவேரைப் பிடுங்க வந்தவர். ஏழைகளும், பலமில்லாதவர்களும், பாவிகளும் ஏற்றுக்கொள்ளப்படும் புது உலகைத்தான் அவர் 'கடவுளின் அரசு', 'கடவுளின் ஆட்சி' என்றழைத்தார்.

கடவுளின் ஆட்சியில் அரசியல் அதிகாரம், பண அதிகாரம், சமய அதிகாரம் என்பதற்கு இடமில்லை.

கடவுள் ஆட்சி என்பது அரசியல் அதிகாரம், பண அதிகாரம், சமய அதிகாரம் என்பவற்றை அழிக்க வந்த 'விஷக்கிருமி'

இந்த விஷக்கிருமியை உலகில் கட்டவிழ்க்கத்தான் இயேசு இயக்கம் அழைக்கப்பட்டிருக்கிறது.

ஆனால், இந்த 'இயேசு இயக்கம்' இன்று 'திருச்சபை' ஆகிவிட்டது; நிறுவனமாகிவிட்டது.

பலமில்லாதவர் பக்கம் சாந்திருக்கவேண்டிய திருச்சபை பலமுள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளோர் பக்கம் சார்ந்து நிற்கிறது.

பாவிகள் பக்கம் சார்ந்திருக்க வேண்டிய திருச்சபை, இன்று பரிசேயர், மறைநூல் அறிஞர் பக்கம் சார்ந்து நிற்கிறது.

கொன்ஸ்தந்தீன் காலம்வரை திருச்சபை கீழ்மட்ட வர்க்க திருச்சபையாகத்தான் இருந்தது. அது ஒடுக்கப்படுவோரோடும் ஏழைகளோடும் தன்னை ஒன்றித்து நின்றது. அது தானே ஒடுக்கப்படும் ஒரு திருச்சபையாகத்தான் இருந்தது. அதன் பக்தர்கள் சிங்கங்களுக்கு இரையாக எறியப்பட்டார்கள். குகைளில் ஒன்றுகூடித்தான் அது தன் வரலாற்றைப் படித்தது மாளிகைகளில் அல்ல.

கொன்ஸ்தந்தீன் காலத்தோடு நாம் இடமாறிக்கொண்டோம். அடிமட்டத்திலிருந்து மேல் மட்டத்திற்கு இடம்மாறினோம். அதற்குப் பிறகு இயேசுவிற்கும் நிறுவனத்திற்கும் இடையில் போராட்டம் என்பதை எங்களால் படிக்கவும் முடியவில்லை; விளங்கிக்கொள்ளவும் முடியவில்லை. ஏனென்றால் நாமே நிறுவனமாகிவிட்டோம்.

பணத்தாசையைத் துறத்தல், அதிகார ஆசையைத் துறத்தல், வன்முறையைத் துறத்தல் எளிமையைத் தழுவுதல் இதையெல்லாம் நாம் மூட்டைகட்டி வைத்துவிட்டோம்.

அது மட்டுமல்ல இந்த நல்ல இயேசுவின் தர்மங்களுக்கு எதிராகக் கூட நாம் போதிக்கின்றோம், வாழ்கிறோம்.

திருச்சபை தனது அதிகார மோகத்தை, அதிகார ஆசையைக் களைய வேண்டும் - கைவிடவேண்டும். அதிகாரமின்மையைத் தன்னுள் இனம்காண வேண்டும். தங்கள் பெயருக்குப் பின்னால் முன்னால் இருக்கும் பட்டங்களை நீக்கவேண்டும்.

பணம், பதவி, அமைப்பு என்பவற்றில் தங்கியிருக்கும் தன் தன்மையைத் திருச்சபை கைவிட வேண்டும், அதுதன் சுதந்திரத்தை உணர.

திருச்சபையாக நாங்கள் எங்கள் தனியாள் தன்மையைக் கைவிட வேண்டும்; கூட்டுறவை நாம் கண்டடைய. இந்தப் புதிய சிந்தனை - புதிய நடத்தை - புதிய தரிசனம் தான் இயேசு சொன்ன "புதிய திராட்சை மது"

"புதிய மதுவைப் புதிய தோற்பைகளில் தான் ஊற்றி வைப்பர்" (மத் 9:17) என்று சொன்னார் இயேசு. எங்களுடைய புதிய மனப் போக்கைப் புதிய தரிசனத்தை, புதிய அமைப்புக்கள் உருவாக்காவிட்டால் எந்தப் பிரயோசனமும் இருக்காது. பழைய அமைப்புக்களுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குள் புதிய சிந்தனையும் கெட்டுப்போகும், தொலைந்துபோகும்.

மத்தேயு 24 அத்தியாயத்திலே சோகத்தையும் நகைப்பையும் ஒன்று கூட்டித்தரும் ஒரு முரண்சுவையான வசனம் ஒன்று வருகிறது.

"இயேசு கோவிலைவிட்டு வெளியே சென்றுகொண்டிருந்த போது அவருடைய சீடர்கள் கோவில் கட்டடங்களை அவருக்குக் காட்ட அவரை அணுகி வந்தார்கள்" (மத் 24:1) என்கிறது அந்த வசனம்.

இயேசு கோவில் அமைப்பைத் தூக்கி எறிந்து வெளியில் செல்லும் போது சீடர்கள் கோவில் அமைப்புக்குள்ளே இன்னும் மதிமயங்கிப் போயிருக்கிறார்கள் ஆகா, ஓகோ, பிரமாதம் என்கிறார்கள்.

"இவற்றையெல்லாம் பார்க்கிறீர்கள் அல்லவா! இங்கே, கற்கள் ஒன்றின்மேல் ஒன்று இராதபடி எல்லாம் இடிக்கப்படும் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்" (மத் 24:2).

இந்த அமைப்பில் உங்கள் நம்பிக்கையை நீங்கள் வைத்தது போதும நிறுத்துங்கள் என்றுதான் இயேசு கூறுகிறார்.

திருச்சபை அமைப்புக்குள்ளே பழைய மதுவை பழைய தோற்பை களில் அப்படியே பாதுகாக்கும் 'பழமைவாதிகள்', 'பிற்போக்கு வாதி கள்' இருந்துகொண்டுதான் இருக்கிறார்கள்.

அதுபோல, புதிய மதுவை பழைய தோற்பைகளில் ஊற்றிக்கொண் டிருக்கும் 'இறையியல் சிந்தனை அறிஞர்கள்', 'முற்போக்கு வாதிகள்' இருந்துகொண்டுதான் இருக்கிறார்கள்.

இயேசுவின் பார்வையில் இரண்டுமே பிரயோசனமற்றது.

புதுய மதுவை புதிய தோற்பைகளில் வார்த்து வைக்கும் திருச்சபை உருவாகும் வரை; அதாவது இயேசுவின் இறையாட்சி விழுமியங் களை பிரதிபலிக்கும் அமைப்புக்கள் தோன்று வரை எல்லா மதுவுமே சிந்திப்போகின்ற மதுதான் - வீணாய்ப் போகின்ற மதுதான்.

**பிரார்த்தனை : இறைவா! என்னிடம் உள்ள பிற்போக்கு சிந்தனையால் பிறரை அடக்கி ஒடுக்காது இருக்க அருள்தா! ஆமென்.**

OOO



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பெப்ரவரி - 16**

எசாயா 58:9 - 14
லூக்கா 5:27 - 32

# உண்மையான நோன்பு எது?

நோன்பு தேவையான ஒன்று. அது ஆழமான அர்த்தம் பெறவேண்டும் என்றால் வெளிவேடம் தவிர்க்கப்பட வேண்டும்.

நோன்பின் வெளியடையாளங்கள் தான் சாம்பலில் உட்காருதல். உணவை ஒறுத்தல், மாமிசம் தவிர்த்தல், சாக்கு உடை அணிதல். ஆலய வழிபாடுகளில் கலந்துகொள்ளுதல், செபங்களில் ஈடுபடுதல், தான தர்மங்கள் செய்தல் என நீளும்...

இவற்றை மட்டும் செய்வதால் அது உண்மையான நோன்பு ஆகிவிடுமா?

பரிசேயர்களும், மறைநூல் அறிஞர்களும் இத்தகைய செயல்களை வெளிப்படையாகச் செய்தார்கள். தங்களை நீதிமான்களாகக் காட்டினார்கள். பரிசுத்தவான்களாக நினைத்தார்கள். ஏனையவர்களைப் பாவிகளாகக் கருதினார்கள்.

அவர்கள் வெளிவேடமாக நோன்பு இருந்தனர். ஆனால் மற்றவர்களைத் துன்புறுத்தினார்கள். மற்றவர்கள் சுமக்க முடியாத சுமைகளை மோசேயின் சட்டம் என்று சொல்லி அழுத்தினார்கள்.

மற்றவர்களின் கழுத்தில் இருக்கும் நுகத்தை இலகுவாக்கி வழ்வு அளிக்க வேண்டியவர்கள்; மேலும் அழுத்தம் கொடுத்து வாழ்வை சிதைத்தனர். இவ்வாறு செய்வதைத் தூய்மையான வாழ்வு என்று கருதினர். ஆன்மீக வாழ்வு என்றால் இப்படித்தான் இருத்தல் வேண்டும் என்று புது விளக்கம் கொடுத்தனர்.

இதனால்தான் இயேசு பரிசேயரையும் மறைநூல் அறிஞர்களையும் வெளிவேடக்காரர் என்று வன்மையாகக் கண்டிக்கின்றார். வெள்ளை அடித்த கல்லறைகளுக்கு ஒப்பிடுகின்றார். நேர்மையாளர் என்று தோற்றம் அளிக்கின்றீர்கள் ஆனால் போலித்தனமும் நெறிகேடும் நிறைந்தவர்கள் என்கின்றார். குருட்டு வழிகாட்டிகளே என்று கேலி செய்கின்றார்.

உண்மையான நோன்பு பற்றியும் இறைவன் விரும்புகின்ற நோன்பு பற்றியும் எசாயா தரும் செய்தி, இந்தத் தவக்காலத்தில் எமக்குச் சவால் நிறைந்த ஒன்றாக அமைகின்றது.

“கொடுமைத் தளைகளை அவிழ்ப்பதும், நுகத்தின் பிணையல்களை அறுப்பதும் ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்புவதும், எவ்வகை நுகத்தையும் உடைப்பதும் அன்றோ நான் தேர்ந்துகொள்ளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோன்பு! பசித்தோருக்கு உங்கள் உணவைப் பகிர்ந்து கொடுப்பதும் தங்க இடமில்லாத வறியோரை உங்கள் இல்லத்திற்கு அழைத்து வருவதும், உடையற்றோரைக் காணும்போது அவர்களுக்கு உடுக்கக் கொடுப்பதும் உங்கள் இனத்தாருக்கு உங்களை மறைத்துக்கொள்ளா திருப்பதும் அன்றோ நான் விரும்பும் நோன்பு" (எசாயா 58:6-7).

இன்றைய நற்செய்தி வாசகத்தில் இயேசு சுங்கச் சாவடியில் அமர்ந்திருந்த லேவி என்னும் வரி தண்டுபவரை அழைக்கின்றார். வரி தண்டுபவர்களைப் பரிசேயரும், மறைநூல் அறிஞர்களும் அடியோடு வெறுத்தனர். பாவிகளாக நோக்கினார்கள். ஆனால் இயேசு சமுதாயத் தில் யாரெல்லாம் புறக்கணிக்கப்பட்டார்களோ அவர்களை நேசித்தார். அவர்களுக்கு சமூக அந்தஸ்தைக் கொடுக்கத் தன்னை அவர்களோடு அடையாளப்படுத்திக் கொண்டார். தோழமை உணர்வை வெளிப்படுத்த சமபந்தியில் அமர்ந்து உண்டார். எசாயா சொன்ன இறைவன் விரும்பும் நோன்பை வாழ்ந்துகாட்டினார்.

"வரி தண்டுபவர்களோடும் பாவிகளோடும் சேர்ந்து நீங்கள் உண்ப தும் குடிப்பதும் ஏன்?" (லூக் 5:30).

என்ற கேள்விகள் அன்று பரிசேயரும் மறைநூல் அறிஞர்களின் கேள்வி மட்டுமல்ல இன்று எம்மத்தியில் எழுப்பப்படும் கேள்விகள். எமது உறவுக்கு தடைக்கற்களாக அமையும் கேள்விகள், எமது ஆன் மீகத்தின் உச்சத்தைக் காட்டுவதைப் போல் மற்றவர்களை நியாயம் தீர்க்கும் கேள்விகள். குடும்ப வாழ்வில் சமுதாய வாழ்வில் திருச்சபை வாழ்வில் மற்றவர்களைப் புறம்தள்ளுவதற்காக எழுப்பப்படும் கேள்வி கள் வாழ்வின் ஓரத்திற்குத் தள்ளப்பட்டவர்களை ஒடுக்கும் கேள்விகள். ஆனால் இயேசு கொடுக்கும் பதில் அதிரடியானது.

"நோயற்றவர்களுக்கு அல்ல; நோயுற்றவர்க்கே மருத்துவர் தேவை. நேர்மையாளர்களை அல்ல பாவிகளையே மனம்மாற அழைக்க வந் தேன்..." (லூக்கா 5:31,32). எனவே நான் மற்றவர்களைவிட மேலானவன் நீதிமான் என்ற அகந்தையை அகற்றி கொள்ளுதல் அவசியம்.

"என் நுகம் அழுத்தாது, என் சுமை எளிதாயுள்ளது" (மத் 11:30) என்று இயேசு கூறியதுபோல் மற்றவர்கள் நுகத்தை எளிதாக்குவோம். பெரும் சுமைகளுடன் இருப்பவர்களுக்கு ஆறுதல் கொடுப்போம். நோன்புக்கு அர்த்தம் கொடுத்து இறைவனுக்கு ஏற்புடையவராகுவோம்.

**பிரார்த்தனை : இறைவா! என் வெளிவேடத் தன்மைகளை அகற்றி, உண்மையான உள்ளார்ந்த வழிபாடு செய்யவும், நோன்பின் மேன்மையாக மற்றவர்களுக்கு இரக்கச் செயல்களை முன்னெடுக்கவும் அருள் தா! ஆமென்.**

ooo



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பெப்ரவரி - 17**

**இணைச்சட்டம் 26:4 – 10**
**உரோமையர் 10:8–13**
**லூக்கா 4:1 – 13**

# பாலைவன அனுபவம் ஆன்மீகத்தை வலுப்படுத்தும்

இயேசு திருமுழுக்குப் பெற்று முதல் செல்கின்ற இடம் பாலை நிலம். அங்கு தன்னை மீளாய்வு செய்து பார்க்கவும், சோதனைகளை வெற்றிகொள்ளவும், தனது பணியை ஆயத்தம் செய்யவும் ஏற்ற இடமாக்கினார்.

பாலைநிலம் இறைவனைக் கண்டு அனுபவிக்கும் இடம். திருமறையில் பாலைநில அனுபவம் விசுவாசத்தின் ஊற்று எனக் காட்டுகின்றது.

விசுவாசத்தின் தந்தை எனப் போற்றப்படும் ஆபிரகாம் கடவுளின் அழைப்பைப் பெற்று நாடோடியாக பாலைநிலங்கள் எல்லாம் அலைந்து திரிந்தார்.

மோசே ஆட்டுமந்தைகளைப் பாலை நிலத்தில் மேய்த்து அலைந்து திரிந்த காலத்தில் தான் கடவுளின் அழைப்பைப் பெற்றார். எகிப்தில் அடிமையாக இருந்த இஸ்ராயேல் மக்களுக்கு விடுதலை கொடுக்கும் தலைமைப் பொறுப்பை பெற்றார். “இருக்கின்றவராக இருக்கின்றேன்” என்று தன்னை வெளிப்படுத்திய கடவுளை அனுபவித்தார்.

இஸ்ராயேல் மக்கள் எகிப்தில் இருந்து விடுதலை பெற்று செங்கடலைக் கடந்து பாலை நிலத்தில் 40 வருடங்கள் அலைந்து திரிந்தனர். இறைவனின் வல்ல செயல்களைக் கண்டுகொண்டனர். சீனாய் மலையில் கடவுளின் கட்டளைகளையும் வாழ்வியல் நியமங்களையும் பெற்றுக் கொண்டனர்.

எலியா என்னும் தீர்க்கதரி ஈசபேலுக்கு பயந்து பாலை நிலத்தில் ஒருநாள் முழுவதும் நடந்து சூரைச்செடியின் கீழ் படுத்து உறங்கும் போது தான் கடவுளின் அழைப்புக் கிடைத்தது; “நீ நீண்ட தூரம் பயணிக்க வேண்டும் எழுந்து சாப்பிடு” எலியா எழுந்து சாப்பிட்டு 40 நாள் இரவும் 40 நாள் பகலும் நடந்து அலைந்து ஒரேபு மலையை அடைந்தார். அங்கே மெல்லிய ஒலியில் இறைவனின் குரலைக் கேட்டார்.

திருமுழுக்கு யோவான் பாலை நிலத்தில் வாழ்ந்து வந்தார். “பாவ மன்னிப்பு அடைய மனம் மாறித் திருமுழுக்குப் பெறுங்கள்” என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறைகூவலை விடுத்தவர். தவறுகளைச் சுட்டிக்காட்டி மனமாற்றத்தை வேண்டி நின்றவர். வரவிருக்கும் மெசியாவின் முன்னோடியாய் வழியை ஆயத்தம் செய்தவர்.

துறவறத்தின் ஆரம்ப வரலாற்றில் துறவறத்தை மேற்கொண்டவர்கள் உலகப் பற்றைத் துறந்து, பாலை நிலத்திற்குச் சென்றனர். இறையனுபூதி அனுபவத்தைப் பெற்றனர்.

பாலைநில அனுபவம் எமக்கும் வேண்டும். பாலைநிலம் வெறுமை பற்றற்ற தன்மை என்பவற்றைக் குறிக்கும். பாலைநில அனுபவத்தைப் பெறத்துடிக்கும் போது, பல சோதனைகள் எம்மை சூழ்ந்துகொள்ளும். இயேசுவும் பாலை நிலத்தில் சோதிக்கப்பட்டார்.

அலகை பாலை நிலத்தை விரும்புவதில்லை, பற்றற்ற வெறுமை தன்மையை விரும்புவதில்லை. ஏகாந்த வாழ்வை விரும்புவதில்லை.

**01 உணவு சோதனை**

மனித வாழ்வுக்கு உணவு முக்கியம். ஆனால் அந்த உணவு மனித தனித்துவத்தை இழக்கவைத்தல் கூடாது. "வறுமை போகும் வறுமையில்பட்ட வடு போகாது" என்பர் எம் முன்னோர்.

ஏசா பசிவந்த போதுதான் தன்னுடைய தலைமைப் பதவியை இழந்து போனான்.

இஸ்ராயேல் மக்கள் பசி வந்தபோது கடவுளைச் சோதித்தனர். விடுதலை வாழ்வு என்பதிலும் பார்க்க அடிமை வாழ்வு உயர்ந்தது என்று மோசேக்கும் இறைவனுக்கும் எதிராக முணுமுணுத்தனர்.

இயேசு தனக்கு பசி வந்தபோதிலும் தனது தனித்துவத்தை அலகை முன் இழக்கவில்லை.

உணவுக்காக எம்மை இழக்கும் இழிநிலை எம்மிடம் உண்டா?

**02. அலகையை வணங்குதல்**

உல அரசுகள் மீது அதிகாரம் கொண்டவன் அலகை. மேலுலகு மீது அதிகாரம் கொண்டவர் இயேசு.

உலகப் பிரகாரம் அதிகாரம் கொண்டவர்களுக்கு அடிபணிந்து தாழ்ந்து போகும் தன்மை எம் மத்தியில் மேலோங்கியுள்ளது. எமது பதவிகளைத் தக்கவைக்க எடுக்கும் பிரயத்தனங்கள் ஏராளம்.

உலகப் பற்று அலகையை வணங்கச் செய்யும். இறைவனை உதறித்தள்ளும். இஸ்ராயேல் மக்கள் இறைவன் கொடுத்த விடுதலை வாழ்வை மறந்துபோயினர். இறைவன் தனது அடியவர் மூலம் மீளவும் தன்னிடம் அழைத்து வந்தார். எனினும் வேற்றுத் தெய்வங்களை வழிபட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனை மறந்து போயினர்.

எம் வாழ்வியல் பயணத்தில் யாரை வணங்கி பூசை செய்கின்றோம்.

### 03 கடவுளைச் சோதித்தல்

எமது வாழ்வில் துன்பங்கள் வருகின்றபோது இறைவனைச் சோதிக்கின்றோம். இறை நாமத்தை தூசிக்கின்றோம். 'இறைவா நீ இருந்தால், இந்த அழிவு வராது', 'இந்த மரணம் நிகழாது' என்று கேள்வி எழுப்பி இறைவனை சோதிக்கின்றோம்.

மாய ஜால வித்தை செய்யும் இறைவனைத் தான் எதிர்பார்க்கின்றோம். உடனே அற்புதம் நடக்கவேண்டும். உடனே செபத்திற்குப் பதில் கிடைக்க வேண்டும் என்று விரும்புகின்றோம்.

இதனால் மந்திரம், மாயம், சாத்திரம், குறியீடு, எண்சோதிடம் என்பவற்றில் நம்பிக்கைகொண்டு அலைந்து திரிகின்றோம். இறைவன் மீது நம்பிக்கை வைப்பதிலும் பார்க்க இவற்றில் நம்பிக்கை கொள்வதில் நாம் முதன்மை பெறுகின்றோம். இறைவனை ஒவ்வொரு கணப்பொழுதும் சோதிக்கின்றோம்.

இறைவனுடன் பண்டமாற்றம் செய்வதுபோல் பேரம் பேசுகின்ற இழிநிலையும் எம்மிடம் உண்டு. இறைவா! நீ இதைச் செய்தால் நான் உனக்கு அதைச் செய்வேன் என்கின்றோம். இதனால் இறைவன் சோதிக்கப்படுகின்றான்.

இந்த தவக்காலத்தில் நாம் வாழும் சூழலில் இந்த சோதனைகளைச் சாதனைகளாக மாற்ற பாலைநில அனுபவத்தைப் பெற முயல்வோம்.

இறைவன் குரலை கேட்க எம்மை தயாராக்குவோம்.

உலகில் வாழ்ந்தாலும், பற்றுதுறந்து வாழும் பாலைநில அனுபவம் தான் கிறிஸ்தவத்திற்குத் தேவை.

இறையனுபூதி அனுபவத்திற்குப் பாலைநில அனுபவம் முக்கியம்.

**பிரார்த்தனை : இறைவா! என் வாழ்வில் வருகின்ற அலகையின் சோதனைகளை உன் உதவியுடன் எதிர்கொள்ள வரம் தா! நான் ஒரு போதும் உன்னை சோதிக்காது வாழ அருள்தா! ஆமென்.**

ooo



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பெப்ரவரி - 18**

லேவியர் 19:1- 2, 9-18
மத்தேயு 25:31 - 46

# தூய்மை என்பது என்ன?

லேவியர் 19 ஆம் அதிகாரம் முக்கியத்துவம் வாய்ந்தது. ஏனெனில் "உன் மீது நீ அன்புகூர்வது போல் உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக..." (19:18) என்ற கூற்று அதில்தான் வருகின்றது.

இயேசு லேவியர் 19 ஆம் அதிகாரத்தை மிகவும் நேசித்து இருக்க வேண்டும். அதனால்தான் அவர் அதனை தமது கட்டளையின் சுருக்கத்தில் குறிப்பிடுகின்றார். எனவே, அது எமக்கும் முக்கியமானதோர் அதியாயம்.

அந்த அதிகாரத்தில் இரண்டாம் வாக்கியத்தில் "தூயோராய் இருங்கள். ஏனெனில் உங்கள் கடவுளும் ஆண்டவருமாகிய நான் தூயவர்..." என்று வரும் கூற்று நம்மை முகத்தில் அறைகின்றது. கடவுளின் தூய்மையை வாழ்ந்துகாட்ட நாம் அழைக்கப்படுகின்றோம்.

தூய்மை என்பது என்ன, எமது தலையைச் சுற்றி ஓர் ஒளிவட்டம் காணப்படுவதா அது; அல்லது ஒழுங்காக ஆலயத்திற்குப் போகும் - திருமறையை வாசிக்கும் - செபிக்கும் நபர் என்று அர்த்தமா?

தூய்மை என்பது அதிலும் மேலானது அந்த அதிகாரம் சொல்கின்றது. தூய்மை என்பது நமது வாழ்க்கை முறை; தூய்மை என்பது நமது உறவுமுறை; தூய்மை என்பது பிறரை எவ்வாறு மதிக்கின்றோம் என்பதைப் பொறுத்தது.

குறிப்பாக வசனங்கள் 9,10 என்னைக் கவர்கின்றது.

"உங்கள் நாட்டில் நீங்கள் பயிரிட்டதை அறுவடை செய்யும்போது வரப்பு ஓரக் கதிரை அறுக்கவேண்டாம். சிந்திக்கிடக்கும் கதிரையும் பொறுக்கவேண்டாம். திராட்சைத் தோட்டத்தில் பின்னறுப்பு வேண்டாம்; சிந்திக் கிடக்கும் பழங்களைப் பொறுக்கவேண்டாம். அவற்றை எளியோருக்கும் அன்னியருக்கும் விட்டுவிட வேண்டும்..." (19:9-10).

அறுவடை செய்யும்போது, திராட்சைப் பழங்களைப் பொறுக்கும் போதும் நாம் என்ன செய்கின்றோம் என்பதைப் பொறுத்தது தான் தூய்மை.

இந்த வசனங்கள் எமது சுயநலத்தைக் கேள்வி கேட்டு நிற்கும் வசனங்கள் ஆகும். ஏழைகளையும், அன்னியர்களையும், புறக்கணிக்கும் வாழ்வுப்பாங்கா எங்கள் வாழ்வு. மீள் பார்வை செய்து பார்ப்போம்.

கண்ணை உறுத்தும் மற்றுமொரு வசனம் 15;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தீர்ப்பிடுகையில், அநீதி இழைக்காதே; சிறியோர் பெரியோர் என முகம்பாராது உனக்கு அடுத்து வாழ்வோர்க்கு நேர்மையுடன் நீதி வழங்கு"

தூய்மை என்பது வானத்தில் மிதப்பது அல்ல; நம் கால் பூமியில் பதித்திருக்க வேண்டும். தூய்மை என்பது நீதி, நேர்மை, இரக்கம்.

நாம் பணககாரப் பெரும்புள்ளிகளை எப்படி நடத்துகின்றோம். அதேவேளை ஏழைகளை எப்படி நடத்துகின்றோம் என்பதைப் பொறுத்தே தூய்மை.

அடுத்து வருகின்றது 18 ஆம் வசனம். "உன் மீது நீ அன்புகூர்வது போல் உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக" நாம் அயலானை எப்படி நடத்துகின்றோம் என்பதே தூய்மை.

இயேசு இந்தக் கட்டளையை யூதர்களின் கட்டளையோடு இணைக்கிறார் அதாவது;

"இஸ்ரயேலே, செவிகொடு! நம் கடவுளாகிய ஆண்டவர் ஒருவரே ஆண்டவர். உன் முழு இதயத்தோடும், உன் முழு உள்ளத்தோடும் உன் முழு ஆற்றலோடும் உன் கடவுளாகிய ஆண்டவரிடம் அன்பு கூர்வாயாக!" (இணைச் சட்டம் 6:4-5).

இந்தச் சட்டத்திற்கு இணையான சட்டத்தை இயேசு எமக்குச் சொல்லித் தருகின்றார். அதாவது,

"உன்மீது நீ அன்பு கூர்வதுபோல உனக்கு அடுத்திருப்பவர் மீது அன்பு கூர்வாயாக" (மத்தேயு 22:39).

திருச்சட்ட நூல் முழுமைக்கும் இறைவாக்கு நூல்களுக்கும் இவ்விரு கட்டளைகளே அடிப்படையாக அமைகின்றன என்று இயேசு கூறுகின்றார். தூய்மை என்பது கடவுளுடனான எங்கள் நிலைக்குத்து உறவும், அயலவருடனான எங்கள் சமாந்திர உறவும் ஆகும்.

"உங்கள் விண்ணகத் தந்தை நிறைவுள்ளவராய் இருப்பது போல நீங்களும் நிறைவுள்ளவர்களாய் இருங்கள்..." (மத் 5:48) என்றார் இயேசு.

இயேசுவைப் பொறுத்தளவில் நிறைவுள்ளவராய் இருத்தல் என்பது சமாந்தர உறவு ஆகும். அதாவது நம் அயலாரை நேசித்தல் ஆகும். எனினும் இயேசு இதற்கு அப்பாலும் சென்று "உங்கள் பகைவரிடம் அன்பு கூருங்கள்..." (மத் 5:44) என்றார்.

அயலவரை நேசிப்பது என்பது யூதர்களைப் பொறுத்த மட்டில் தமது சொந்த மக்களையும் - உற்றார் உறவினர்களையும் - இரத்த உறவுகளையும் நேசிப்பது என்று அர்த்தம் கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களைப் பொறுத்த மட்டில், "உன் இனத்தாருக்குள் புறங்கூறித் திரியாதே. உனக்கு அடுத்து வாழ்பவரின் குருதிப் பழிக்குக் காரணம் ஆகாதே! நான் ஆண்டவர்! உன் சகோதரரை உன் உள்ளத்தில் பகைக்காதே! உனக்கு அடுத்தவர் பாவம் செய்யாதபடி அவரைக் கடிந்துகொள். பழிக்குப் பழியென உன் இனத்தார் மேல் காழ்ப்புக் கொள்ளாதே..." (லேவியர் 19:16-18) என்பது கட்டளை.

இதைத்தான் நமது கலாசாரமும், பெற்றோரும், குடும்பமும், நமக்குச் சொல்லித் தருகின்றார்கள். இயேசு இதையெல்லாம் கடந்த புதிய கட்டளையைத் தருகின்றார்.

"நான் உங்களுக்குச் சொல்லுகின்றேன்..." என்ற அதிகாரத்துடன் தருகின்றார். இயேசுவின் இந்த அதிகாரத்திற்கு அடிபணிய வேண்டுமே ஒழிய; நமது கலாசாரமும், சமுதாயமும் என்ற எந்த அதிகாரத்திற்கும் நாம் அடிபணியக்கூடாது.

நேசிப்பவர்களையே நேசிப்பது; சொந்த சகோதரர்களையே வாழ்த்துவது இதைத்தான் கலாசாரம் ஊக்குவிக்கின்றது.

ஆனால் இயேசு சொல்கின்றார் இது பிற இனத்தவருக்கு உரியது என்று... (மத் 5:46 - 48). அன்பு செலுத்துதல் எல்லா வரையறையும் கடந்த ஒன்றாக அமைதல் வேண்டும், இதுதான் இறையன்பு.

"உனக்கு அடுத்திருப்பவரிடம் அன்பு கூர்வாயாக..." (லேவியர் 19:18, மத் 5:43).

**பிரார்த்தனை : இறைவா! உன் சாயலாகிய மானிடத்தில் முழுமையாக அன்புகூர அருள்தா. ஆமென்.**

OOO

**பெப்ரவரி - 19**

**எசாயா 55:10 - 11**
**மத்தேயு 6:7-15**

## செபிப்பது எப்படி?

"கடவுள் ஆவியானவர்; ஆதலால் அவரைத் தொழுபவர்கள் ஆவியிலும் உண்மையிலும் தான் அவரைத் தொழுதல் வேண்டும்"(யோவான் 4:24).

"நினைவின்றி இருத்தலே மிக உயர்தியானம்" சுவாமி சங்கரர்.

"மௌனமாயிரு; உன்னையே அறிவாய; அதையே அறிந்திரு; மனதை அதில் கரைத்திடு; மெய்ம்மை தூய்மையானது; எளிமையானது"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமி சிவானந்தா.

"செபம் ஓர் அகப்பயணம், இதயத்தை மையப்படுத்தி அவன்தன் விழிப்புணர்வில் இறை உணர்வுகொள்ளல்" சுவாமி அபிசித்தானந்தா.

"செபம்' என்பது வாழ்க்கை முறை. ஒருவரின் வாழ்க்கை எப்படி காணப்படுகின்றதோ, அப்படியே செபமும் காணப்படும். அக - புற சூழல்கள் செபத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றது.

உலகப்பற்றுத் துறந்து அகஒளி பெற்றவரே செபத்தில் உயர்வை அனுபவிப்பார்.

அகத்தில் தூய்மை பெற்றவரே தூய்மையான இறைவனை அனுபவிக்க முடியும். எல்லாவற்றையும் கடந்த இறைவனை அகத்தில் இருத்த அகத்தூய்மை தேவை. அப்போது இறைவன் பேசுவதைக் கேட்க முடியும்.

'செபம்' என்பது நாம் பேசுவதை இறைவன் கேட்பது என்பதிலும் பார்க்க, இறைவன் பேசுவதை நாம் கேட்பதில் தான் அடங்கியுள்ளது அதன் சிறப்பு. சுயகட்டுப்பாடு இல்லாத மனம் இறைவனிடம் பிதட்டுகின்றது; சொற்களை அடுக்கிக்கொண்டே போகின்றது.

'செபம்' வாழ்வுக்கு செயல் வடிவம் கொடுக்கும்; தன்னலமற்ற வாழ்வை நோக்கி பயணிக்கும்; அன்பால் அனைவரையும் ஒன்றிணைக்கும். இயேசுவின் வாழ்வில் ஒவ்வொரு கட்டத்திலும் செபம் முதன்மை பெற்றது.

தனது திருப்பணியின் ஆயத்தமான திருமுழுக்கு வேளையில் செபித்தார் (லூக் 3:21).

உருமாற்ற நிகழ்ச்சியில் செபித்தார் (லூக் 9:29).

சீடர்களுக்கு இறைவேண்டல் செய்யக்கற்றுக் கொடுக்கும் முன் செபித்தார் (லூக் 11:1).

கிரேக்கர் சிலர் அவரைப் பார்க்க வந்தவேளையில் செபித்தார் (யோவான் 12:27). குணமாக்கும் பணி செய்கையில் செபித்தார் (மாற்கு 1:35, 7:34). லாசருவை உயிரோடெழுப்புகையில் செபித்தார் (யோவான் 11:41). கெத்சமனே தோட்டத்தில் செபித்தார் (லூக் 22:39-46). சிலுவையில் செபித்தார் (லூக் 23:46).

இயேசு எதற்காக செபித்தார்; விளம்பர வாழ்வை வெல்ல (லூக் 5:16), பெருமையை வெல்ல (மாற் 6:46), பதவி ஆசையை வெல்ல (யோவா 6:15), இறை உறவை உறுதிப்படுத்த (யோ 11:41), கடவுளுக்கு மாண்பினைக் கொடுக்க (யோ12:28), தனது சீடர்களின் பற்றுறுதி வளர (லூக் 22:31,32), இறைவிருப்பம் அறிய (மத் 26:42,43) பிறரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னிக்க (லூக் 23:34), முழு திருச்சபைக்காக (யோ17).

இன்று எமது செபம் எப்படி அமைகின்றது. எல்லாம் எமக்கு நிறைவாகக் கிடைக்கவேண்டும் என்ற தன்னிலை போக்கில் அமைகின்றதா? பிறநிலை நோக்கியதாக அமைகின்றதா?

"நீங்கள் கேட்கும் முன்னரே உங்கள் தேவையை உங்கள் தந்தை அறிந்திருக்கிறார் (மத் 6:8). எனவே எங்கள் தேவையை இறைவனிடம் பட்டியல் இடுவதிலும் பார்க்க மற்றவர்களுக்காகச் செபிப்பது முக்கியம்.

இயேசு எமக்குக் கற்றுத்தந்த செபத்தின் முற்பகுதியில் இறைவன் அனைவருக்கும் தந்தை, இறைவன் ஒருவரே தூயவர், இறைவனின் பெயர் என்றும் போற்றுதலுக்குரியது. இறைவனின் ஆட்சி இவ்வுலகில் நிலைபெற யாசிப்பதாக அமைகின்றது.

இரண்டாம் பகுதியில் அன்றாடம் தேவைக்கு வேண்டி நிற்பது. மேலதிகமான தேவையைக் கருத்தில் கொள்வது பொருத்தமற்றது. இஸ்ராயேல் மக்கள் பாலை நிலத்தில் அலைந்து திரிந்த நாட்களில் மன்னா வானத்தில் இருந்து பொழியப்பட்டது. மேலதிகமாக சேகரித்தவருக்கு எதுவும் மிஞ்சவும் இல்லை. குறைவாக சேகரித்தவருக்கு எதுவும் குறைவுபடவும் இல்லை. அந்த அந்த நாளுக்குரிய தேவை நிறைவுசெய்வது முக்கியம்.

பிறர் குற்றங்களை மன்னிப்பது போல எங்கள் குற்றங்களை மன்னியும்; மற்றவர்கள் குற்றங்களை மன்னிக்க மறுப்பது எமது குற்றங்களை மூடி மறைக்க எடுக்கும் பிரத்தனம்.

அலகை எம்மை சோதிக்க வகை தேடிக்கொண்டே இருக்கின்றான். அவனின் வலைக்குள் வீழ்ந்திடாதபடி இறைவன் துணை வேண்டிநிற்பது அவசியம்.

மூன்றாம் பகுதியில் ஆட்சியும் ஆற்றலும் உம்முடையவைகளே! இது யூதர்களின் மன்றாட்டுக்களில் உள்ள மகிமைப்பாடல். இறைவனே அனைத்துக்கும் அடித்தளம். அவரே வாழ்வின் ஊற்று.

எனவே, இயேசு கற்பித்த செபத்தை தினமும் சொல்வோம். வாழ்வை செபம் ஆக்குவோம்.

**பிரார்த்தனை : இறைவா! செபிக்க கற்றுத்தந்தவரே! உனது குரலை அதிகமாக கேட்கவும், எனது பிதட்டலை அதிகமாக குறைக்கவும் அருள்தா!**

ooo



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பெப்ரவரி - 20**

யோனா 3:1 – 10
லூக்கா 11:29 – 32

# என் மனமாற்றம் கடவுளின் மனதை மாற்றும்

யோனாவின் கதை வியப்பானது வேடிக்கையானது.

யோனா நினிவே பட்டணத்திற்குள் சென்று, "இன்னும் நாற்பது நாளில் நினிவே அழிக்கப்படும்" என்று அறிவித்தார் (யோனா 3:4).

இன்னும் நாற்பது நாள் மட்டுமே என்ற சொற்கள் என் மனதில் தைத்து நிற்கின்றன. எமது பாவங்களில் இருந்து மனம் திரும்ப இன்னும நாற்பது நாள் மட்டுமே. இந்த நாளில் ஒன்றில் நாம் பாவத்தை அழிக்க வேண்டும; அல்லது பாவம் நம்மை அழித்துவிடும். இதுதான் யோனா இன்று எமக்குத் தரும் செய்தி.

கடவுள் எம்மை அழிக்க காத்திருக்கும் ஒரு பயங்கரவாதி அல்ல. கடவுள் அன்பே மயமானவர். மனம் திரும்புதலுக்கான அவரின் அழைப்பு, அவரது அன்பின் அழைப்பு.

ஊதாரி மகன் உவமை சொல்வதுபோல் தன் மகன் திரும்ப வருவதை எதிர்பார்த்துக் காத்திருக்கும் தந்தை அவர். அவரது இந்த அழைப்புக்கு நாம் பதில் தராவிட்டால் பாவம் நமது கலகத்தன்மையைக்கொண்டே நம்மை அழித்துவிடும்.

நாற்பது நாள் என்பதை நாம் மற்றுமொரு கிருபையின் காலம்; அருளின் காலம் என்றே கொள்ளவேண்டும்.

இங்கே நாம் காய்க்காத அத்திமரம் பற்றிய உவமையை நினைவு கொள்ளுதல் நன்று (லூக்கா 13:6 - 9). தோட்டச் சொந்தக்காரன் கனி தராத அத்திமரத்தை வெட்டிப்போடு என்று கூறுகின்றான். ஆனால் தோட்டத்தொழிலாளி அது இன்னும் ஒரு வருடம் இருக்கட்டும் என்கின்றான். கடவுளிடம் எங்களுக்காய் மன்றாடும் தொழிலாளி கிறிஸ்துவே.

"எமது கடவுள் இன்னொரு தருணத்தின் கடவுள்"

இந்தத் தவக்காலம் அருளின் காலம் என்பதை நாம் மறந்துவிட வேண்டாம். எங்கள் வழிகளில் இருந்து விடுபட இது மற்றுமொரு தருணம் என்பதை நாம் மறந்துவிட வேண்டாம்.

இது கடவுள் எமக்கு கடனாய் தரும் காலம்.

நினிவே மனம் திரும்பிய விதத்தைக் கண்டு நான் வியக்கின்றேன்.

நினிவே அசீரியாவின் தலைநகரம். அசீரியர்கள் யூதாவை சாம்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாய் எரித்தவர்கள் இத்தகைய மூர்க்கமான கொடிய நகரம் மனம் திரும்புமா?

ஆம் திரும்பும்.

பெரியோர் சிறியோர் அனைவரும் சாக்கு உடை உடுத்திக் கொண்டனர்.

அரசன் தன் அரியணையை விட்டிறங்கி, சாக்கு உடை உடுத்திக் கொண்டு சாம்பல் மீது உட்கார்ந்தான். ஆடு, மாடு முதலிய விலங்குகளும் சாக்கு உடை உடுத்திக்கொண்டன.

ஒவ்வொருவரும் கடவுளை நோக்கி மன்றாடினர். தம் தீயவழிகளையும், தாம் செய்துவரும் கொடுஞ்செயல்களையும் விட்டொழிந்து மனம மாறினார்கள்.

இதெல்லாம் கதையில் வரும் கற்பனைபோல் தொனிக்கின்றது. ஆனால், அவை சொல்லவரும் செய்தி நினிவே மனம் திரும்பியது என்பதைத்தான்.

யோனா நூல் எமக்குச் சொல்வது என்ன? கொடும் பாவிகளானாலும் சரி, கொடும் தேசமானாலும் சரி, மனம் திரும்புதல் என்ற அற்புதம் நிகழலாம்.

எனவே, நாம் எந்த ஒரு நபரையோ, எந்த ஒரு தேசத்தையோ மனம் திரும்ப முடியாதவர்கள் என்று புறக்கணிக்கக்கூடாது. அவர்கள் மனம் திரும்பமாட்டார்கள் என்ற எங்கள் மனப்பான்மைக்குத் தான் மனம் திரும்புதல் அவசியம்.

மேலும், வியப்புக்குரிய விடயம் என்னவென்றால் கடவுளே மனம் திரும்புகின்றார் என்பதுதான்.

"கடவுள் அவர்கள் செய்தது அனைத்தையும் பார்த்தார். அவர்கள் தீய வழிகளின்று விலகியதை அவர் கண்டு தம் மனத்தை மாற்றிக் கொண்டார். தாம் அவர்கள் மீது அனுப்புவதாகச் சொல்லியிருந்த தண்டனையை அனுப்பவில்லை" *(யோனா 3:10).*

எம்மில் மனம் மாற்றம் கடவுளில் மனமாற்றத்தைக் கொண்டு வருகின்றது என்பது தான் இது தரும் பாடம். இது சாத்தியம் என்பதை நீங்கள் நம்புகின்றீர்களா?

இந்த யோனா கதையில் என்னைப் பயமுறுத்தும் ஓர் அச்சமும் உண்டு.

பெரியவரும் சிறியவரும் மனம் திரும்பினார்கள். அரசன் மனம் திரும்பினான்; மிருகங்கள் மனம் திரும்பின; கடவுள் மனம் திரும்பினார்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் ஒரே ஒருவன் மட்டும் மனம் திரும்பவில்லை. அவன்தான் யோனா. யோனா - பிற சமயங்கள், பிற இனங்கள், பிற தேசங்கள் என்பவற்றின் மீது வைத்திருந்த பழிவாங்கும் மனப்பான்மை - காழ்ப் புணர்வு - கோபம் - ஆணவம் என்பவற்றில் இருந்து மனம் திரும்பவில்லை.

யோனா மனம் திரும்பமறுக்கும் பிடிவாதத்தன்மை கொண்டவன். அவனின் இருதயக் கடினம் கற்பாறையிலும் கடினமானது.

யோனாவின் கதை மனம் திரும்புதல் நடைபெறக்கூடியதொன்று என்பதையும், அதேநேரம் மனந்திரும்புதல் நடைபெற முடியாது என்ப தையும் கூறும் ஒரு கதை. இந்தக் கதை என்னைக் கவரும் ஒரு கதை. இதேவேளை என்னைப் பயமுறுத்தும் ஒரு கதை. இந்த நாற்பதுநாள் முடிவில் உங்கள் கதை என்னவாக இருக்கும். என்கதை என்னவாக இருக்கும்.

**பிரார்த்தனை : இரக்கமுள்ள ஆண்டவரே! என் மனதில் மாற்றம் உண டாக அருள்செய். மற்றவர்கள் மனதிலும் மாற்றத்தை உண்டாக்கும். ஆமென்.**

ooo

**பெப்ரவரி - 21**

**எஸ்தர் 12:14-16, 23-25**
**மத்தேயு 7:7 - 12**

# நன்மைகள் அளிப்பார்

இறைவனிடம் விண்ணப்பிக்கும் போது நிச்சயம் கிடைக்கும் என்ற நம்பிக்கை அவசியம். ஆனால் எதைக் கேட்க வேண்டும் என்பதுதான் இங்கு முக்கியம்.

இறைவன் நன்மைகளை வாரி வழங்குபவராக இருக்கின்றார்.

தீயோர்கள் கூட தம்பிள்ளைகளுக்கு நன்மை செய்ய முயலும்போது, எம்மை தன் சாயலாகப் படைத்து பராமரித்து வரும் இறைவன் நன்மை செய்யாமல் இருப்பாரா!

இறைவனிடம் எதைக்கேட்டாலும் கிடைக்கும் என்ற மறையான சிந்தனை முதலில் மறைய வேண்டும். மற்றவர்களை வாழ்விக்கும் காரியங்களை விண்ணப்பிக்கும் போது அது கிடைக்கும்.

எனக்கு தெரிந்த ஒரு குடும்பத்தில் பாடசாலை செல்லும் மாணவன் ஒருவன் இருந்தான். அவன் பள்ளியில் மிகுந்த கெட்டிக்காரன். அந்த பள்ளியில் அவனுக்கும் இன்னொரு பிள்ளைக்கும் தான் படிப்பில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டி. பாடங்களுக்கு அதிக புள்ளி பெறுவதற்கும், விளையாட்டில் வெற்றியீட்டுவதற்கும் போட்டி. ஒருநாள் அந்த பையன் சொன்னான். அங்கிள் மூன்றாம் தவணை பரீட்சையில் நான் முதலாம் இடத்தைப் பெறவேண்டும். எனது நண்பன் என்னைவிட குறைய வேண்டும் என்று செபித்தேன். ஆனால் கடவுள் என்ர செபத்தைக் கேட்கவில்லை. என்ர நண்பன் முதலாம் பிள்ளையாக வந்துவிட்டான். நான் இரண்டாம் இடத்தைப் பெற்றுவிட்டேன்.

செபத்தில் மற்றவர்கள் குறைந்து தாழ்ந்துபோக வேண்டும் என்று கேட்பது தவறு. மற்றவர்கள் அழிவுக்காக செபிப்பது தவறு.

எமது வாழ்வு செழிப்பதற்காக செபிப்பது போல, மற்றவர் வாழ்வும் செழிக்க செபிக்கவேண்டும்.

"விண்ணுலகில் உள்ள உங்கள் தந்தை தம்மிடம் கேட்போருக்கு இன்னும் மிகுதியாக நன்மைகள் அளிப்பார்..." (மத் 7:11). 'நன்மைகள் அளிப்பார்' என்ற மத்தேயுவின் வார்த்தைகளை லூக்கா நற்செய்தியாளர் குறிப்பிடும்போது 'தூய ஆவியர்' (லூக் 11:13) என்கின்றார்.

நாம் தெளிந்த பார்வை உள்ளவர்களாக, உலகப் பொருள்களுக்குச் சேவை செய்வதை விட்டவர்களாக, இறையரசின் வருகைக்கான உழைப்பிற்கு அர்ப்பணிக்கப்பட்டவர்களாக வாழ்வதற்கு நமக்குத் தேவையானவர், இன்றியமையாதவர் அருள்மிகு தூய ஆவியர். அவரது துணையை நாம் தேடினால் நாம் கேட்பது தரப்படும் இது உறுதி.

தூய ஆவியரை வருந்தி கேட்கவேண்டும். எமக்குள்ளே தூய அவியர் வரும்போது எமது கோழைத்தனம் அகன்று போகும். 'இயேசுவே ஆண்டவர்' என்று சொல்வதில் துணிச்சல் கிடைக்கும். பெந்தக்கோஸ்தே அனுபவம் இதைத்தான் வெளிப்படுத்தி நிற்கின்றது. பயந்து ஒழிந்துகொண்ட சீடர்கள் மேல் தூய ஆவியர் இறங்கியபோது அவர்கள புதுப்பெலன் அடைந்தார்கள். துணிச்சல் கொண்டார்கள்.

தூய ஆவியரைப் பெற்ற பேதுரு ஆற்றிய முதலாவது உரையில் 3000 பேர் மனம் மாற்றம் பெற்றனர். இரண்டாவது உரையில் 5000 பேர் மனம் மாற்றம் பெற்றனர்.

தூய ஆவியரைக் காசு கொடுத்து பெறமுடியாது. காசு கொடுத்து தூய ஆவியரை பெற முயன்றான் சீமோன்.

"நான் யார் மீது கைகளை வைப்பேனோ அவரும் தூய ஆவியைப் பெற்றுக்கொள்ளும்படி எனக்கும் இந்த அதிகாரத்தைக் கொடுங்கள்" என்று பணம் கொடுக்க முன்வந்தான் மந்திரவாதி சீமோன். பேதுரு அவனிடம் "கடவுளது கொடையைப் பணம் கொடுத்து வாங்க எண்ணியதால் நீயும் உன் பணத்தோடு நாசமாய்ப் போ..." (தி.ப. 8:18-22).


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூய ஆவியரை இலவசமாகப் பெறமுடியும். பிறர் நன்மைக்காகப் பயன்படுத்த முடியும். பேர் புகழ் நிலைநாட்டவோ, மாயஜால வித்தை காட்டவோ தூய ஆவியரைப் பயன்படுத்த முடியாது.

தூய ஆவியரை வருந்திக்கேட்போம். பிறருக்கு நன்மைகள் செய்வோம்.

**பிரார்த்தனை : இறைவா! எனது தேவைகளை நீ அறிந்திருக்கிறாய். எனக்கு தூய ஆவியாகிய கொடையைத் தா! பிறர் நன்மைக்காக வாழ அருள்தா! ஆமென்.**

OOO

**பெப்ரவரி - 22**

**I பேதுரு 5:1 – 4**
**மத்தேயு 16:13– 19**

# பேதுரு போன்ற உன்னையும் அழைக்கின்றார்

"உன் பெயர் பேதுரு; இந்தப் பாறையின் மேல் என் திருச்சபையைக் கட்டுவேன்" (மத் 16:18).

பேதுரு யோனாவின் மகன்; பெத்சாயதா ஊரைச் சேர்ந்தவர்; அடிப்படை அறிவை மட்டும்கொண்டு இருந்தவர்; மீன் பிடித்தொழிலை செய்துவந்தவர். கலிலேயர் என்பதை அவரது பேச்சு காட்டிக்கொடுத்தது. நற்செய்திகளில் மற்ற சீடர்களிலும் பார்க்கப் பேதுரு அடிக்கடி குறிப்பிடப்படுகின்றார்.

பேதுரு என்ற கதாபாத்திரம் ஒரு கலகம் நிறைந்த பாத்திரம். எடுத்ததிற்கு எல்லாம் முந்திக்கொள்ளும் பாத்திரம். அவசரத் தன்மை கொண்ட பாத்திரம். பின்விளைவுகளை யோசிக்காத வீராப்புக்கொண்ட பாத்திரம். இயேசுவால் கண்டிப்புக்குள்ளாகிய பாத்திரம்.

நற்செய்திகளில் இவற்றைக் காணமுடியும்; இயேசு கடல்மீது நடப்பதைக் கண்டு தானும் கடல்மீது நடக்க விரும்பினான். அதனால் நம்பிக்கை குன்றியவனே! என்று அழைக்கப்பட்டான் (மத்14:28-31).

இயேசு தான் எருசலேமில் அனுபவிக்கப் போகும் துன்புறுத்தல்களை எடுத்துச் சொன்னபோது; இயேசுவைப் பார்த்து இது உமக்கு வேண்டாம். இது உமக்கு நடக்கக்கூடாது என்று கூறினான். "என் கண் முன் நில்லாதே சாத்தானே..." என்று கண்டிக்கப்பட்டான் (மத் 16:22,23).

இயேசுவின் உருமாற்றத்தின் போது மலையிலே தங்கியிருக்க ஆசைப்பட்டான் (மத் 17:3,4).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு எதிராகப் பாவம் செய்யும் சகோதர சகோதரிகளை எத்தனை தடவை மன்னிக்கவேண்டும் என்று கேள்வி கேட்டான் (மத் 18:21,22).

யார் மறுதலித்தாலும் நான் உம்மை மறுதலிக்க மாட்டேன். யார் உம்மை விட்டு ஓடிப்போனாலும் நான் ஓடிப்போக மாட்டேன் என்று விராப்பு பேசியவன் (மத் 26:33).

இயேசுவின் அழைப்பை ஏற்றபோது "ஆண்டவரே! நான் பாவி, நீர் என்னை விட்டுப்போய்விடும்" என்று தனது இயல்பு நிலையை உணர்ந்து கொண்டவன் (லூக் 5:8).

ஆண்டவரே நாங்கள் யாரிடம் போவோம்? நிலைவாழ்வு அளிக்கும் வார்த்தைகள் உம்மிடம் தானே உள்ளன! என்ற ஆழ்ந்த நம்பிக்கை கொண்டவன் (யோவான் 6:68).

கால்களை கழுவும்போது 'நீர் என் கால்களை கழுவவிடமாட்டேன்' என்று உறுதியாக மறுப்புத் தெரிவித்தவன் (யோவான் 13:6-9).

இப்படிப்பட்டவரை தான் இயேசு நீ பாறை உன்மேல் என் திருச்சபையைக் கட்டுவேன் என்கின்றார். இறைவன் பலவீனமான மனிதர்களை அழைக்கின்றார். அவர்களை உறுதிப்படுத்துகின்றார்.

இறைவனின் மீட்புத்திட்டத்தில் பாவிகள், உறுதியற்றவர்கள், குழம்பியவர்கள் பயன்படுத்தப்படுகின்றார்கள் என்பதை ஒருபோதும் மறந்து போகக்கூடாது.

இயேசு கேட்ட கேள்விக்கு "நீர் மெசியா, வாழும் கடவுளின் மகன்" (மத் 16:15). என்று அறிக்கை செய்வது, இறையருளால் தான்.

மெசியா - என்றால் அருள்பொழிவு செய்யப்பட்டவர் என்பது பொருள்.

மெசியா என்று மக்கள் எதிர்பார்த்த விதம் விசித்திரமானது.

ஆனால் இயேசு துன்புறும் மெசியாவாக வந்தார்.

அதனை இனம்கண்டு அறிக்கை செய்தபேதுரு தன் சொந்த முயற்சியால் அடையாளம் காணவில்லை. மாறாக தெய்வீக அருளால தான அவருக்கு அப்பேறு கிடைத்தது.

இதனால் தான் இயேசு அவரிடம் பெரிய பொறுப்பை கொடுக்கின்றார் "என் ஆடுகளைப் பேணி வளர்" (யோவான் 21:15-17).

கோழையாக இருந்தவர் திருச்சபைக்குத் தலைவர் ஆகின்றார். திருச்சபையை வழிநடத்தும் முதன்மையாளராகின்றார். அதிகார வர்க்கத்திற்குப் பயந்து இயேசுவைத் தெரியாது என்று துணிந்து சொன்னவர் இப்போது 'இயேசுவே ஆண்டவர்' என்று அறிக்கை செய்கின்றார.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயேசுவை பொய்க்குற்றம் சுமத்தி சிலுவையில் அறைந்து கொன்றது நீங்கள் என்று வெளிப்படையாகக் கண்டிக்கின்றார்.

சாவுக்கும் அஞ்சாது சரித்திரம் படைக்கின்றார். இயேசுவுக்காக தன் உயிரை அர்ப்பணிக்கின்றார். நீரோ மன்னன் காலத்தில் சிலுவையில் தலைகீழாக அறையப்பட்டார்.

அழைத்த இறைவனுக்கு உண்மையுள்ளவராக இருப்பதும், அவருக்காக எம்மை அர்ப்பணிப்பதும் முக்கியம். இறைவன் எம்மை அழைத்துள்ளார். எமது இயல்பு அவருக்குத் தெரியும். அவரிடம் சரணாகதி அடைவோம்.

**பிரார்த்தனை : இறைவா! என் பலவீனத்தை உணர அருள்தா! உனது கண்டிப்பைக் கண்டு உன்னைவிட்டு ஓடாது, உன்னைப் பற்றிப்பிடிக்க அருள்தா! ஆமென்.**

○○○

**பெப்ரவரி - 23**

**இணைச்சட்டம் 26:16 – 19**
**மத்தேயு 5:43– 48**

## பகைவர் மீது அன்பு

திருச்சட்டத்தில் "உனக்கு அடுத்து இருப்பவர் மீது அன்பு கூருவாயாக" (லேவி 19:18) என்று கூறப்பட்டுள்ளது. உனக்கு அடுத்து இருப்பவர் என்றால் தங்கள் இனத்தாரைக் குறிக்கும். இஸ்ராயேல் மக்கள் தங்கள் இனத்தாரை அதிகம் நேசித்தனர். இதனால் பிற இனத்தாரை வெறுத்து காழ்ப்புணர்வு கொண்டனர்.

திருச்சட்டத்தை போதித்த ரபிகள் உங்கள் இனத்தாரை நேசியுங்கள். மற்ற இனத்தாரை வெறுத்து ஒதுக்குங்கள். அவர்களைத் துன்புறுத்துங்கள். வட்டிக்குக் கடன் கொடுங்கள். அடிமைப்படுத்துங்கள். பழிக்கு பழி வாங்குங்கள் என்றெல்லாம் போதித்தனர்.

ஆனால் இயேசு இதற்கு நேர் மாறாகப் போதித்தார். வேற்று இனத்தார் பகைக்கப்பட வேண்டியவர்கள் அல்லர். அவர்களும் அன்புக்கும் நீதிக்கும் உட்பட்டவர்கள் என்று போதித்தார்.

இயேசுவின் போதனை யூதர்கள் மத்தியில் பெரும் அதிர்வை உண்டுபண்ணியது. காரணம் யூதர்கள் உரோம ஆட்சிக்கு உட்பட்டு இருந்தார்கள். அவர்களது ஆட்சியை வெறுத்தார்கள். கொடுங்கோலாட்சி செய்துவந்த உரோமர் என்ற பகைஞர்களை அன்பு செய்யுமாறு வேண்டி நிற்பதை யூதர்கள் பாவம் என்று கருதினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன் அனைவருக்கும் உரியவர். அந்த இறைவனைப் பின்பற்றும் நாம், அனைவரையும் நேசிக்க வேண்டும். இறைவன் ஆள் பார்த்து செயற்படுவர் அல்ல. அவரது அருள் பார்வை அனைவர் மீதும் பட்டுத தெறிக்கும். "அவர் நல்லோர் மேலும் தீயோர் மேலும் தம் கதிரவனை உதித்தெழச் செய்கின்றார். நேர்மையுள்ளோர் மேலும் நேர்மையற்றோர் மேலும் மழை பெய்யச் செய்கிறார்" (மத் 5:45).

அப்படிப்பட்ட இறைவனை எமக்கு மட்டுமே என்று சொந்தம் கொண்டாட முடியாது.

விடுதலை வாழ்வை வேண்டி நிற்பது தவறு அல்ல; மாறாக மற்றவர்களை அடிமையாக்கிப் பகைமை கொள்வது தவறு.

"உங்கள் விண்ணகத் தந்தை நிறைவுள்ளவராய் இருப்பது போல நீங்களும் நிறைவுள்ளவர்களாய் இருங்கள்" (மத் 5:48). இதனை லூக்கா நற்செய்தியாளர் குறிப்பிடும்போது "உங்கள் தந்தை இரக்கமுள்ளவராய் இருப்பது போல நீங்களும் இரக்கம் உள்ளவர்களாய் இருங்கள்" (லூக் 6:36).

இரக்க குணம் படைத்தவர் பகைமை உணர்வை வளர்க்கமாட்டார். அனைவரும் வாழ்வு பெறவேண்டும் என்று சிந்திப்பார். மற்றவரைத் துன்புறுத்தவோ, பழிவாங்கவோ ஒருபோதும் கனவில்கூட சிந்திக்க மாட்டார்.

இரக்க குணம் செத்துப்போனதால் தான் இன்று பழிவாங்கும் மனமுடையோர் பெருகியுள்ளனர். மற்றவர் துன்பத்தைக் கண்டும் காணாமல் போகும் அவலமும் வளர்ந்துள்ளது.

"உங்கள் பகைவரிடம் அன்பு கூருங்கள்; உங்களைத் துன்புறுத்துவோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள்" (மத் 5:44). இவ்வாறு இயேசு கற்றுத்தந்தது மட்டுமல்ல அவர் தனது வாழ்வில் நடைமுறைப்படுத்தியும் காட்டினார்.

இயேசுவை பொய்க்குற்றம் சுமத்தி சிலுவை மரணத்திற்கு ஒப்புக்கொடுத்து அவமானப்படுத்திய யூதர்கள் மீது பகையுணர்வு கொள்ளவில்லை. அவர்களுக்காக சிலுவையில் இருந்து பரிந்து பேசுகின்றார்.

"தந்தையே! இவர்களை மன்னியும், தாங்கள் செய்வது இன்னதென்று அறியாது இருக்கின்றார்கள்"

அதே நேரத்தில் புறவினத்தார் மீதும் வெறுப்புக் கொள்ளவில்லை. புறவினத்தவர்களில் காணப்பட்ட நல்ல பண்புகளையும், விசுவாச உறுதியையும், இறைவனின் அருள் அவர்கள் மீது இருப்பதையும் சுட்டிக் காட்டுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எலியாவின் காலத்தில் மூன்றரை ஆண்டுகள் வானம் பொய்த்தது: பஞ்சம் உண்டானது. சீதோனைச் சேர்ந்த சாரிபாத்தில் வாழ்ந்த ஒரு கைம்பெண்ணின் வாழ்வில் இறைவனின் அருள் பொழிந்ததையும்;

எலிசாவின் காலத்தில் சிரியாவைச் சேர்ந்த நாமானின் தொழுநோய் குணமாக்கப்பட்டதையும்;

நல்ல சமாரியன் உவமையில் பாதிப்புற்ற யூத இனத்தவருக்கு புற வினத்தாராகிய சாமாரியன் உதவி புரிந்ததையும்; போன்ற பல எடுத்துக் காட்டுக்களைச் சொல்ல முடியும்.

எங்கள் இனத்தைச் சாராதவர்களை நாம் எப்படி நோக்குகின்றோம். அவர்களது நல்ல பண்புகளை எடுத்துச் சொல்ல தயாராகவுள்ளோமா? அல்லது அவர்களில் உள்ள தீமைகளை எடுத்துச் சொல்லி பகைமையை வளர்க்கின்றோமா?

எங்களைத் தெரிந்துகொண்ட இறைவன் அனைவரையும் தெரிந்து கொண்டவர். எங்களுக்கு அருள்பொழியும் இறைவன் அனைவருக்கும் அருள்பொழிவார். எங்களைக் குணமாக்கும் இறைவன் அனைவரையும் குணமாக்குவார்.

எனவே, இறைவனை எமக்கு மட்டும் என்று சொந்தம் கொண்டா டாது, அவர் தன் சாயலாகப் படைத்த அனைத்து மானிடர் மீதும் அன்பு செய்வோம். அவர்களுக்காக செபிப்போம்.

**பிரார்த்தனை : இறைவா! எனக்குள்ளே இருக்கின்ற பகைமை உணர்வு செத்துப்போகட்டும். எதிரி என்று யாரை நினைக்கின்றேனோ அவரை அதிக மாக நேசிக்கும் நல்ல மனதை தா! ஆமென்.**

OOO

**பெப்ரவரி - 24**

**தொ.நூல் 15:5-12, 17 - 18**
**பிலிப்பியர் 3:17-4:1**
**லூக்கா 9:28 - 36**

## மறுரூபம் தேவை

மறுரூபம் இயேசுவின் வாழ்வில் நிகழ்ந்தது போல எமது வாழ் விலும் நிகழ்தல் அவசியம். சீடர்களும், திருத்தொண்டர்களும் பிற்காலத் தில் மறுரூபமாக்கப்பட்டார்கள்.

அடிப்படைவாதச் சிந்தனையில் மறுரூபம் தேவை. இனவாதச் சிந தனையில் இருந்து மறுரூபம் தேவை. ஆன்மீக மேலாதிக்க சிந்தனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் இருந்து மறுரூபம் தேவை.

சாதிய, பிரதேச, பாலியல் சார்ந்த மேலாண்மை சிந்தனையில் இருந்து மறுரூபம் தேவை. கடின உள்ளம் கரைந்த உள்ளமாக மாற மறுரூபம் தேவை. பழிவாங்கும் சிந்தனையில் இருந்து பரிவிரக்கம் கொள்ள மறுரூபம் தேவை. இவ்வாறு மறுரூபம் எம் வாழ்வில் ஒவ்வொரு அசைவுகளிலும் தேவை.

இயேசுவோடு சென்ற சீடர்கள் மலையில் தங்கிவிட விரும்பினர். மகிமையில் தொடர்ந்து இருக்க விரும்பினர். துன்பமற்ற அந்த மகிழ்ச் சியை விரும்பினர். ஆனால் இயேசு மறுரூபம் பெற்ற மலையில் இருந்துகொண்டு கொல்கொதா மலையைப் பற்றி சிந்தித்துக்கொண்டு இருந்தார்.

மறுரூப காட்சியில் மோசே எலியா என்பவர்கள் காட்சி கொடுத்தார் கள். மோசே சட்டத்தைக் கொடுத்தவர். எலியா இறைவாக்கினர். சட்டத தையும், இறைவாக்கையும் நிறைவேற்றவே இயேசு வந்தார்.

இந்த இரண்டும் நிறைவேற்ற வேண்டுமானால் இயேசு எருசலேமில் துன்புறவேண்டும். இரத்தத்தில் திருமுழுக்குப் பெறவேண்டும். கொல் கொதா மலையில் சிலுவையில் தொங்கப்பட வேண்டும்.

இதனை உணர்ந்தோ என்னவோ பேதுரு, மோசேக்கு ஒரு கூடாரம், எலியாவிற்கு ஒரு கூடாரம், இயேசுவுக்கு ஒரு கூடாரம் அமைக்க முயல்கின்றார். சட்டத்தையும் இறைவாக்கையும் நிறைவேற்றுபவரை யும் ஒன்றாக்கிப் பார்க்க விரும்பினார்.

கூடாரம் அமைத்தல் என்பது கூடாரத் திருவிழாவைக் குறிக்கும். இஸ்ராயேல் மக்கள் எகிப்தில் இருந்து விடுதலை பெற்றதனை நினைவு கூறுதலைக் குறிக்கும். அக்கூடாரத்தில் மோசே எலியா என்பவர்கள் தங்கியிருப்பார்கள் என்பது யூத நம்பிக்கை.

இவற்றுக்கு மேலாக பாவத்தில் இருந்து விடுதலை தரும் இயேசு கிறிஸ்து கூடாரத்தில் தங்கியிருக்க வேண்டும் என்ற புதிய நம்பிக்கை வெளிப்படுத்தப்படுகின்றது. அவர் தங்கியிருந்தால் தான் கூடாரத்திரு விழா முழுமைபெறும் என்று பேதுரு நம்பினார்.

எகிப்தில் இருந்து விடுதலை பெற்றதனை மட்டும் நினைவு கூருதல் போதாது, பாவத்தில் இருந்து விடுதலை தருகின்ற இயேசுகிறிஸ் துவையும் நினைவு கூருதல் அவசியம்.

திருமுழுக்கின்போது தூய ஆவி இயேசு மீது இறங்கி "என் அன பார்ந்த மகன் நீயே, உன் பொருட்டு நான் பூரிப்படைகின்றேன்" (லூக் 3:22) என்று அக்களித்து தன் மகனை வெளிப்படுத்திய இறைவன் மறுரூப காட்சியில் "இவரே என் மைந்தர்; நான் தேர்ந்துகொண்டவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரே, இவருக்கு செவிசாயுங்கள்" (லூக் 9:35) என்கின்றார்.

தேர்ந்து கொண்டவர் என்கின்றபோது மோசேயின் சட்டத்தையும், எலியா முதலிய இறைவாக்கினர்களின் இறைவாக்கையும் நிறை வேற்றத் தேர்ந்து எடுக்கப்பட்டவர்.

எருசலேமில் நடக்கவிருக்கின்ற வேள்விப் பலியில் பலிப்பொருளா கத் தேர்ந்து எடுக்கப்பட்டவர். உலகப் பாவத்தைச் சுமந்து தீர்க்கும் தேவ ஆட்டுக் குட்டியாகத் தேர்ந்து கொள்ளப்பட்டவர். அவருடைய குரலுக்கு செவிசாய்க்குமாறு வேண்டப்படுகின்றது.

இயேசுவை நல்ல ஆயனாகக்கொண்டு அவரது குரலைக் கேட்கும் போது; பசுமை நிறைந்த பாதையில், நீரூற்றுள்ள ஓடையில் பயணிக்க முடியும். எவ்வித குறையும் எம்மை அணுகாது. தீயோனின் கண்ணியில் இருந்து தப்பிக்கமுடியும்.

மறுரூபக் காட்சியில் இயேசுவின் 'முகத்தோற்றம் மாறியது; அவ ருடைய ஆடையும் வெண்மையாய் மின்னியது" (லூக் 9:29). இந்த மாற்றம் உயிர்ப்பைக் குறிக்கும். சாவுக்குப் பின் அனுபவிக்கப் போகும் உயிர்ப்பின் மாட்சியைச் சுட்டி நிற்கின்றது.

உயிர்ப்பின் முன்குறியாக மறுரூபக் காட்சி துலங்குகின்றது. ஆபிர காம் இறைவன் மீது விசுவாசம் கொண்டார். விசுவாசத்தின் தந்தை எனப் போற்றப்படும் அளவுக்கு இறைவனின் குரலுக்கு செவிசாய்த் தார்.

இறைவன் மீது கொண்ட நம்பிக்கை தான் அவருக்கு நீதியாகக் கருதப்பட்டது (தொ.நூ 15:6). அந்த நம்பிக்கை எம்மில் வளரவேண்டும். மறுரூபம் பெற இறைவன் மீது கொள்ளும் நம்பிக்கையும் அவசியம் என்பதை மறந்துவிடக்கூடாது.

இன்று எமது நம்பிக்கை எப்படியுள்ளது.

மறுரூபம் பெற நாம் தயாரா?

**பிரார்த்தனை : இறைவா! என்னிடம் காணப்படும் மறையான குணங் களில் இருந்து நேரான குணங்களுக்கு மறுரூபம் பெற அருள்தா!. ஆமென்.**

ooo



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெப்ரவரி - 25

தானியேல் 9:4 – 10
லூக் 6:36 – 38

# என்னைப் போலவே பிறரும்

இன்றைய நற்செய்தி வாசகத்தில் 'தீர்ப்பளிக்காதீர்கள்', 'கண்டனம் செய்யாதீர்கள்' என்று கூறப்பட்டுள்ளது.

எமது வாழ்வில் இந்த இரண்டும் முன்னணி வகிக்கின்றது. நாம் பிறரை எப்போதும் தீர்ப்பளிக்கின்றவர்களாக! கண்டனம் செய்கின்றவர் களாக! இருக்கின்றோம்.

தீர்ப்பளிப்பதும் கண்டனம் செய்வதும் இறைவன் வேலை. அதனை எமது வேலையாக்கியுள்ளோம். "பிறர் உங்களுக்கு என்ன செய்ய வேண டும் என்று விரும்புகிறீர்களோ அதையே நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்" (லூக் 6:31).

எம்மை பிறர் கண்டிப்பதையும், தீர்ப்பளிப்பதையும் ஒருபோதும் விரும்பமாட்டோம். அதனைப் போல நாமும் மற்றவர்கள் வாழ்வில் அவற்றை மேற்கொள்ளாது இருப்பது சிறப்பு.

நாம் எப்போதும் விரும்புவது எம்மீது மற்றவர் அன்பு செய்ய வேண்டும்; எம்மை மற்றவர்கள் அங்கீகரிக்க வேண்டும்; மற்றவர்கள் எம்மோடு தோழமையோடு பழகவேண்டும்; மற்றவர்கள் எமது வளர்ச் சியில் அதிக அக்கறை காட்டவேண்டும். சோர்ந்து இருக்கும்போது ஆறுதலும், காயப்பட்ட எமது உள்ளத்திற்கு குணமளிப்பும் தருதல் வேண்டும்.

இவற்றை நாம் மற்றவர்களுக்குச் செய்ய ஆயத்தமா?

"உனக்கு வெறுப்பைத் தூண்டுகின்றதை அடுத்தவர்க்குச் செய் யாதே. அதுவே முழுமையான சட்டம். ஏனையவை விளக்கங்களே" - ஹில்லல் எனும் யூதராபி.

"நீ துன்பப்பட வெறுப்பதை வேறு யாருககும் செய்யாதே" - பிலோ எனும் யூதர்.

"அடுத்தவர் கைகளில் துன்பப்படும் போது உனக்குக் கோபம் வருகின்றதா, அதை அடுத்தவர்க்குச் செய்யாதே" - சோக்கிரட்சிஸ்.

"மன்னியுங்கள்; மன்னிப்புப் பெறுவீர்கள்" மன்னிப்புக் கொடுக்கும் போது மட்டுமே மன்னிப்புப் பெறமுடியும். இயேசு எமக்குக் கற்றுத்தந்த பரலோக செபத்தில் கூட "எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்தோரை நாங்கள் மன்னித்துள்ளது போல எங்கள் குற்றங்களை மன்னியுங்கள்" என்கின்றார்.

பேதுரு ஒருமுறை இயேசுவைப் பார்த்து "ஆண்டவரே! என் சகோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரர் சகோரிகளுள் ஒருவர் எனக்கு எதிராகப் பாவம் செய்துவந்தால் நான் எத்தனை முறை அவரை மன்னிக்கவேண்டும்? ஏழுமுறை மட்டுமா?" என்று கேட்டார். அதற்கு இயேசு "ஏழுமுறை மட்டுமல்ல; எழுபது தடவை ஏழுமுறை என நான் உனக்குச் சொல்கின்றேன்..." என்றார். இது மன்னிப்புக்கு அளவு இல்லை என்பதை சுட்டிக்காட்டும்.

கிறிஸ்தவத்தின் அடிப்படைத் தத்துவம் மன்னிப்பு.

மன்னிப்பு அளந்து கொடுக்கும் அளவுப்பொருள் அல்ல என்பதை மனம் கொள்ளல் வேண்டும்.

"கொடுங்கள்; உங்களுக்குக் கொடுக்கப்படும்"

கொடுப்பதினால் பிறர் வாழ்வர். எம்மிடம் உள்ளதைப் பகிர்வதில் உள்ள மகிழ்ச்சி வேறு எதிலும் பெற்றுக்கொள்ள முடியாத மகிழ்ச்சி.

பணம், பொருள் என்பவற்றைப் பகிர்வதிலும் பார்க்க இறைவன் தந்த ஆற்றல் ஆளுமைகளைக் கொடுப்பது சிறப்பு.

இறைவன் எம்மை எங்கெங்கு பணிசெய்ய அழைத்திருக்கின்றரோ, அந்த இடத்தில் எம்மை முழுமையாக அர்ப்பணித்து சேவை செய்வதும் ஒருவித கொடை. எமது தாலந்துகளை மறைத்து புதைத்து வைப்பது இறைவனுக்கு ஏற்புடைய செயல் அல்ல.

கொடுக்கும்போது திரும்பப் பெற்றுக்கொள்ள முடியும் என்ற எதிர்பார்ப்பில் கொடுப்பது கொடையல்ல, அது திரும்பப் பெற்றுக்கொள்ள முடியும் என்ற கடன். இறைவன் கடன் கொடுப்பதை அல்ல; எதிர்பார்ப்பின்றி கொடை கொடுப்பதைத்தான் விரும்புகின்றார்.

இறைவனுக்கும் சக மனிதருக்கும் எதிர்பார்ப்பின்றி கொடுக்கும் போது இறைவன் வானத்தின் பலகணிகளைத் திறந்து, ததும்பி வழியுமாறு ஆசி வழங்குவார்.

**பிரார்த்தனை : இறைவா! என்னுள் இருக்கின்ற கண்டிக்கும் தீர்ப்பிடும் பழக்கதோசத்தை நீக்கிப்போடும். வரையறையின்றி மன்னிக்கும், எதிர்பார்ப்பின்றி கொடுக்கும் மனப்பான்மையை நிறையவே தா! ஆமென்.**

○○○

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெப்ரவரி - 26

எசாயா 1:10,16-20
மத்தேயு 23:1 - 12

# வெளிவேடத்தில் மனிதநேயம் இல்லை

இன்றைய நற்செய்தி வாசகத்தில் மறைநூல் அறிஞர், பரிசேயர் ஆகியோரின் வெளிவேடத் தன்மையை வெளிப்படையாகச் சுட்டிக் காட்டுகின்றார்.

அவர்கள்; மோசேயின் சட்டத்தை நுணுக்கமாகக் கடைப்பிடிக்கின்றதில் கருத்தூன்றியவர்கள்.

சட்டங்களை முறையாகக் கற்றுப் போதிக்கின்றதில் ஆர்வலர்கள்.

சட்டங்கள் அழிந்து போகாமல் பாதுகாப்பதில் ஆழ்ந்த கவனம் செலுத்துபவர்கள்.

இயேசுவின் இறையியல் போதனைக்கும் அவர்களது இறையியல் போதனைக்கும் ஒருமைப்பாடு காணப்பட்டன. ஆனால் அறச்செயல்களில் முரண்நிலை காணப்பட்டன. இறையியல் போதனையை ஆழமாகச் செய்யும் அவர்கள் அதனை வாழத் தவறிவிட்டனர்.

"தீமை செய்தலை விட்டொழியுங்கள்; நன்மை செய்யக் கற்றுக் கொள்ளுங்கள்; நீதியை நாடித் தேடுங்கள்; ஒடுக்கப்பட்டோருக்கு உதவி செய்யுங்கள்; திக்கற்றோருக்கு நீதி வழங்குங்கள்; கைம் பெண களுக்காக வழக்காடுங்கள்" (எசாயா *1:16-17*).

இந்த அறச்செயல்களைச் செய்ய முன்வரவில்லை. ஆனால் வெளிப படையாகப் பக்திமான்களாகத் தங்களைக் காட்டிக்கொண்டார்கள். வாழ்க்கை வேறு ஆன்மீகம் வேறு என்பது அவர்கள் வாழ்வில் துலங்கின.

இதனால்தான் இயேசு சொன்னார்; "அவர்கள் என்னென்ன செய்யும் படி உங்களிடம் கூறுகிறார்களோ! அவற்றையெல்லாம் கடைப்பிடித்து நடந்துவாருங்கள். ஆனால் அவர்கள் செய்வதுபோல நீங்கள் செய்யாதீர்கள். ஏனெனில் அவர்கள் சொல்வார்கள்; செயலில் காட்டமாட்டார்கள்" (மத் *23:3*).

சட்டங்களுக்குக் கொடுத்த முக்கியத்துவம் மனிதநேயத்திற்கு, மனித தேவைக்கு கொடுக்கவில்லை. சட்டங்களுக்கு முன்னுரிமை கொடுத்து, மக்கள் சுமக்க முடியாத நுகத்தைத் தோளில் சுமத்தினர்.

தாங்கள் செய்வதெல்லாவற்றையும் மக்கள் பார்க்கவேண்டும் என்று விரும்பினார்கள். இதனால் மறைநூல் வாசகப் பட்டைகளையும், அங்கிக் குஞ்சங்களையும் பெரிதாக்கினர். முதன்மையான இருக்கைகளை விரும்பினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் வணக்கம் செலுத்துவதையும் 'ரபி' (போதகர்) என்று அழைப் பதையும் விரும்பினார்கள்.

இத்தன்மைகளினால் இயேசுவுக்கு முரணியாகக் காணப்பட்டனர். இயேசுவின் அறப்போதனைக்கு எதிரும் புதிருமாகக் காணப்பட்டனர்.

இயேசு தாழ்மையை ஆடையாக அணிந்துகொண்டவர்.

அதிகாரிகளாக இருக்க விரும்புபவர்கள் தாழ்மையுள்ள பணிவிடைக் காரர்களாகத் துலங்கவேண்டும் என்று சொல்லித்தந்தவர்.

எனவே நான் வெளிவேடத் தன்மையுள்ள மனிதனா?

என் வாழ்வுக்கும் வழிபாட்டுக்கும் வேறுபாடு உண்டா?

என் வாழ்வில் தாழ்மை மேலோங்கி இருக்கின்றதா? உயர் மனப் பான்மை மேலோங்கி இருக்கின்றதா?

நான் எதைச் செய்தாலும் மனிதர் பார்க்கவேணும் என்று செய்கின் றேனா? அல்லது விண்ணகத் தந்தை பார்க்கவேணும் என்று செய்கின் றேனா?

என் வாழ்வில் மற்றவர்களை அழுத்தும் மனப்பான்மை உள்ளதா?

சட்டங்களுக்கு முதன்மை கொடுக்கின்றேனா? மனித நேயத்திற்கு முதன்மை கொடுக்கின்றேனா?

முதன்மையான இருக்கை விரும்பி என்னை மேலானவன் எனக் காட்ட விரும்புகின்றேனா?

ஆடையின் நிறத்தாலும் தரத்தாலும் என் அந்தஸ்தைக் காட்ட முயல் கின்றேனா?

இந்தத் தவக்காலத்தில் இவ்வாறு சிந்தித்து என்னை மீள் பார்வை க்கு உட்படுத்துவதும், மனமாற்றம் பெறுவதும், பாவத்தை சுத்திகரிப்ப தும் அவசியம்.

"உங்கள் பாவங்கள் கடுஞ்சிவப்பாய் இருக்கின்றன; எனினும் உறை ந்த பனிபோல அவை வெண்மையாகும்; இரத்த நிறமாய் அவை சிவந்திருக்கின்றன; எனினும் பஞ்சைப்போல் அவை வெண்மையாகும்" *(எசாயா 1:18).*

**பிரார்த்தனை : இறைவா! என்னுள்ளே மனிதநேயம் தளிர்க்க வரம்தா! வெளிவேடம் மறைய அருள்தா! ஆமென்.**

○○○



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பெப்ரவரி - 27**

எரேமியா 18:18 – 20
மத்தேயு 20:17 – 28

# துன்பக் கிண்ணத்தில் பருக ஆயத்தமா?

இயேசு தன் சாவைக் குறித்து முன்னறிவிக்கின்றார். முதல்முறை கூறும்போது மூப்பர்கள், தலைமைக்குருக்கள், மறைநூல் அறிஞர்கள் துன்புறுத்துவார்கள் (மத் 16:21). இரண்டாம்முறை கூறும்போது மக்களின் கையில் ஒப்பிக்கப்படவிருக்கின்றார் (மத் 17:22). மூன்றாம் முறை கூறும்போது தலைமைக் குருக்கள் மறைநூல் அறிஞர்கள் பிற இனத்தாரிடம் ஒப்புவித்து சாட்டையால் அடித்து சிலுவையில் அறைவார்கள் (மத் 20:17-19) என்கின்றார்.

இயேசு எருசலேமை நோக்கிச் செல்லும்போது தன் சாவை முன்னறிவிக்கின்றார். எருசலேம் யூதர்கள் வாழ்வில் முக்கியமான திருத்தலம். எருசலேம் என்றால் சமாதானம் என்பது பொருள். ஆனால் அங்கு சமாதானம் இல்லை. வன்முறை தலைதூக்கி நின்றது. அது அன்பற்ற கடின உள்ளத்தோர் வாழும் இடமாகக் காணப்பட்டது. உரோமையர்களின் தலைமைப் பீடமாகவும், அதிகாரத்தின் அரக்கத்தனம் மலிந்த இடமாகவும் விளங்கியது. இரத்தம் தோய்ந்த மரணங்கள் மலிந்த பூமியாகவும் காணப்பட்டது. தங்கள் பதவிகளைத் தக்கவைக்க பொய்க் குற்றம் சுமத்தி தண்டனை கொடுக்கும் அநீதி நிறைந்த நீதிமன்றமாக எருசலேம் காணப்பட்டது.

இயேசு தன் சாவைப் பற்றி முன்னறிவித்த சூழலில் தான் செபதேயுவின் மனைவி தன் பிள்ளைகளுக்காக வேண்டுகோள் விடுக்கின்றார். "நீர் ஆட்சி புரியும்போது என் மக்களாகிய இவர்கள் இவருள் ஒருவன் உமது அரியணையின் வலப்புறமும் இன்னொருவன் இடப்புறமும் அமரச் செய்யும்" (மத் 20:21). என்று வேண்டுவது பொருத்தமானது.

இயேசுவின் வழி துன்பத்தின் வழி. சிலுவை வழி. கசப்பு நிறைந்த வழி. துன்பக் கிண்ணத்தில் பருகும் வழி. இரத்த திருமுழுக்குப் பெறும் வழி. இவற்றை எல்லாம் தெரிந்தவர்தான் செபதேயுவின் மனைவி. இதனால் தான் அவர் இயேசுவின் சிலுவைப் பயணத்தில் பங்கெடுத்தவர். கொல்கொதாவின் துயர அனுபவங்களை உணர்வு பூர்வமாகக் கண்டு கொண்டவர் (மத் 27:55-56).

சிலுவை சுமத்தல் இலகுவான அனுபவம் அல்ல; மாறாக மிகவும் கடினமான அனுபவம் அந்த அனுபவத்தில் தன் பிள்ளைகள் கடந்து செல்லவேண்டும் என்று விரும்பினார் செபதேயுவின் மனைவி.

துன்பக் கிண்ணத்தில் பருக கிறிஸ்தவர்கள் ஆயத்தமாக இருத்தல் வேண்டும். திருத்தூதர்களில் முதன்முதலாக மறைசாட்சியாக இறந்தவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாக்கோபு (திரு.பணி 12:2). அவருடைய துன்பக் கிண்ணம் மறைசாட்சியே! யோவானின் இறுதி நாட்கள் வேறாக இருந்தது. பாரம்பரியத்தின்படி யோவான் எபேசுவில் நூறு ஆண்டுகள் மட்டில் வாழ்ந்தவர். அவருடைய மரணம் இயற்கை மரணம். ஆனால் அவருடைய துன்பக்கிண்ணம் நாளாந்த வாழ்வில் அவர் எதிர்கொண்ட சவால்கள் ஆகும்.

இன்றைய நற்செய்தி வாசகத்தில் இயேசு கற்றுத்தரும் இன்னொரு பாடம் அடக்குமுறை அல்ல. தாழ்மை வேண்டும். பெரியவராக இருக்க விரும்புபவர் தொண்டராக இருக்கட்டும். முதன்மையாளராக அல்ல பணியாளராக இருக்கட்டும். இதுதான் இயேசு சமூகத்தின் நியமங்கள்.

இயேசு தன்னைப் பற்றிச் சொல்லும் போது "மானிட மகன் தொண்டு ஏற்பதற்கு அல்ல; தொண்டு ஆற்றுவதற்கும் பலருடைய மீட்புக்கு ஈடாகத் தம் உயிரைக் கொடுப்பதற்கும் வந்தார்" என்கின்றார் (மத் 20:28). அவர் சீடர்களின் கால்களை கழுவியதன் ஊடாகவும் தாழ்மை யை வெளிப்படுத்தியதோடு சேவகத் தன்மையை வலியுறுத்தி நிற் கின்றார்.

எனவே, இயேசுவோடு இணைந்து துன்பக் கிண்ணத்தில் பருக நான் ஆயத்தமா?

தாழ்மையைக் கற்றுத் தந்த இயேசுவின் சேவகத் தன்மை என்னில் மிளிருகின்றதா? அல்லது மற்றவர்கள் எனக்கு சேவகம் புரிய விரும்புக் கிறேனா?

சிந்திப்போம்...

**பிரார்த்தனை : இறைவா! உன்னோடு சேர்ந்து பயணிக்க அருள்தா! உன்னோடு பயணிப்பது இலகுவான அனுபவம் அல்ல என்பதை எனக்கு அவ்வப்போது உணர்த்தியருள். உன்னிடம் காணப்பட்ட தாழ்மை, சேவகத தன்மை என்னிலும் மிளிர அருள்தா! ஆமென்.**

ooo

**பெப்ரவரி - 28**

எரேமியா 17:5 – 10
லூக் 16:19 – 31

## பகிர்ந்து மகிழ்வு காண்போம்

இன்றைய நற்செய்தி வாசகத்தில் நாள்தோறும் விருந்துண்டு இன் பங்களை அனுபவித்த செல்வன் பற்றியும்; அவன் வீட்டு வாயில் அருகே பசியோடு மிச்சத்தை உண்பதற்குக் காத்துகிடந்த ஏழை இலா சர் பற்றிய சம்பவம் இடம்பெற்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய உலகில் பசி இருப்போரும், அந்தப் பசியைத் தீர்ப்பதற்கு அப்பத்தைத் தேடுவோரும் நீளும். அப்பம்தான் கிறிஸ்தவர்களாகிய எங்களுடைய பிரதான சின்னம்.

இந்த அப்பம் எங்களுக்கு இருக்கவேண்டிய மூன்று பசிகளைப் பற்றிப் பேசுகிறது.

### 01. நீதிக்கான பசி

அப்பம் பசியாயிருக்கின்றவர்களை நினைக்கச் சொல்லுகிறது. அவர்களுக்கு அப்பம் கொடுக்கச் சொல்கிறது. இயேசு பசியாயிருப்பவர்களுக்கு அப்பம் கொடுக்கச் சொன்னார்.

இறைவனிடம் வேண்டக் கற்றுக்கொடுக்கும் போது; "எங்கள் அன்றாட உணவை நாள்தோறும் எங்களுக்குத் தாரும்" (லூக் 11:3) என்கிறார் இயேசு.

இந்த செபத்திலே, அப்பத்தை எனக்குத் தாரும்? என் குடும்பத்திற்குத் தாரும்? என் அயலாருக்குத் தாரும்? உலக மக்களுக்குத் தாரும்? என்ற பொதுமைக் காணப்படுகின்றன.

சுயநலமான வேண்டல் என்பது அபகரிப்பு - மறுப்பு - அநீதி பிரதிபலிக்கும். பொதுநலமான வேண்டல் என்பது, பகிர்வு - கொடுப்பு - நீதி பிரதிபலிக்கும்.

இதனைத்தான் இயேசு எம்மிடம் எதிர்பார்க்கின்றார்.

"நீதியின் மேல் பசிதாகம் உள்ளவர்கள் பாக்கியவான்கள்"

புதிய பொதுமொழி பெயர்ப்பில்; "நீதி நிலைநாட்டும் வேட்கை கொண்டோர் பேறுபெற்றோர்..." (மத் 5:6). என்று இயேசு பேறுபெற்றோரின் நிலைகள் பற்றிச் சொல்லித்தரும் போது, நீதியின் மேல் பசிதாகம் எப்போதும் இருக்க வேண்டும் என்கின்றார். நீதிக்கான பசி என்பது ஏழைகளின் முகம் எப்போதும் மனதில் தெரிதல் ஆகும்.

செல்வந்தன் ஏழை இலாசரை மனதில் கொள்ளவில்லை.

தென்னாபிரிக்க செபம் ஒன்று ஞாபகம் வருகின்றது.

ஆண்டவரே! உணவு இல்லாதவர்களுக்கு உணவைக் கொடும் உண்டு திருப்தியோடு இருப்பவர்களுக்கு நீதியின் மேல் பசிதாகம் கொள்ள அருள் செய்.

எமக்குள் உண்டாகும் பசி எப்படியானது.

### 02. கடவுளுக்கான பசி

விரைவான உணவு, அழகுசாதனப் பொருட்கள், அழகான வீடு, அழகான கார், அதிகாரம், ஆயுதம், பணம் ஆகியவற்றில் உயர வேண்டும் என்ற பசி எம்மிடம் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்தவரை முந்தவேண்டும், மிஞ்ச வேண்டும் என்ற மனப்பான்மை எம்மிடம் ஏராளம் உண்டு. இதுதான் உலகப் பசி. ஆனால் எம்மிடம் கடவுளுக்கான ஆன்மீகப் பசி தோன்றவேண்டும். உலக அப்பத்திற்காக என்னைத் தேடாதீர்கள் என்கின்றார் இயேசு.

"மனிதர் அப்பத்தினால் மட்டும் வாழ்வதில்லை" (லூக் 4:4).

"வாழ்வு தரும் உணவு நானே. என்னிடம் வருபவருக்குப் பசியே இராது; என்னிடம் நம்பிக்கை கொண்டிருப்பவருக்கு என்றுமே தாகம் இராது" (யோவான் 6:35).

"வாழ்வுதரும் உணவு நானே. உங்கள் முன்னோர் பாலை நிலத்தில் மன்னாவை உண்ட போதிலும் இறந்தனர். உண்பவரை இறவாமல் இருக்கச் செய்யும் உணவு விண்ணகத்திலிருந்து இறங்கி வந்த இந்த உணவே" (யோவான் 6:48-50).

ஆன்மீகப் பசி பற்றி புனித ஒகஸ்டின் கூறுகின்ற போது;

"கடவுள் மீது பசி, கடவுளின் வார்த்தை மீது பசி, கடவுள் தரும் விண்ணக உணவின் மீது பசி, கடவுளுக்கடுத்த காரியங்கள் மீது பசி எடுக்க வேண்டும்" என்கின்றார். செல்வந்தன் வாழ்வில் ஏற்பட்ட பசி கடவுள் மீது ஏற்படவில்லை. மாறாக உலகம் மீது ஏற்பட்டது. இதனால் உலக சுகபோகத்தை அனுபவித்தான். அதனால் கிடைத்தது நரகம்.

### 03. கொடுப்பதற்கான பசி

கடவுள் மீது பசி பெற்றுக்கொள்வதற்காக அல்ல. கடவுளிடம் என்ன பெற்றுக்கொள்ளலாம், என்றுதான் மக்கள் அன்றுபோல் இன்று கடவுளை மொய்க்கின்றனர்.

இது சமயத்தின் பெயரால் கடவுளோடு நடக்கும் வியாபாரம். கடவுளின் பெயரால் நான் பெற்றுக்கொள்வது அல்ல; கடவுளின் பெயரால் என்னைப் பிறருக்குக் கொடுப்பது அதுதான் உன்னத ஆன்மீகம்.

இயேசு பிறருக்காகத் தன்னைப் பிட்டார், உடைத்தார், பகிர்ந்தார்.

ஆலயத்திலே நாம் நினைவுபடுத்தும் செயல், எமது வாழ்க்கையில் - ஆலயத்திற்கு வெளியே உலகம் என்ற பலி பீடத்தில் நடக்கிறதா?

இந்தக் கேள்வியைத்தான் ஏழை இலாசர் நம்மைக் கேட்டு நிற்கின்றார். பிறருக்கு நம்மைக் கொடுப்பதற்கான பசி நமக்கு எடுக்கவேண்டும்.

நாம் ஆசீர்வதிக்கப்பட்ட, பிட்கப்பட்ட, பிறருக்கும் உலகிற்கும் பகிர்ந்து கொடுக்கப்பட்ட எம்மை அப்பமாகக் கடவுளின் கையில் கொடுப்பதே எப்போதும் எமது பசியாக இருக்கட்டும்.

**பிரார்த்தனை : இறைவா! நீ எனக்கு உணவாக மாறு. நான் பிறருக்கு உணவாக மாற அருள்தா! ஆமென்.**

ООО



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மார்ச் - 01**

தொ.நூ 37:3 – 4, 17–28, 17–28
மத்தேயு 21:33–43,45– 46

# பொறுப்பு ஒரு வெகுமதி

இன்றைய நற்செய்திப் பகுதியில் கொடிய குத்தகைக்காரர் உவமை கூறப்பட்டுள்ளது. அவ்வுவமை எமது வாழ்வையும், எமக்குக் கொடுக்கப் பட்ட பொறுப்புக்களையும் மீள்பார்வை செய்ய அழைக்கின்றது.

உலகைப் படைத்த இறைவன் அவற்றை நல்லது எனக்கண்டார். படைப்பின் சிகரமாக மனிதரைத் தன் சாயலாகப் படைத்து தன் படைப புக்களைப் பாதுகாத்துப் பராமரிக்குமாறு பொறுப்புக் கொடுத்தார். அத தோடு சக மனிதரின் வளர்ச்சியில் அக்கறையும் கரிசனையும் செலுத்த வேண்டும் என்று எதிர்பார்த்தார்.

தற்காலிகமான கூடாரம் தான் உலகம். இவ்வுலகத்தின் வாழ்வை பொறுத்துத்தான் விண்ணுலக வாழ்வு நியமிக்கப்படுகின்றது. பொறுப் பற்ற வாழ்வு வாழ்கின்றவர்களுக்குக் கடவுளின் நடுத்தீர்ப்புக் கிடைக்கும்.

உவமையில் கடவுளின் நிலையை உற்றுநோக்கும் போது; தோட்டச் சொந்தக்காரன் தன் தொழிலாளர்களை நம்பி தன் தோட்டத்தைப் பொறுப்புக்கொடுக்கின்றார். அந்தப் பொறுப்பைக் கடமையுணர்வோடு நிறைவேற்றுவது முறையல்லவா?

இரண்டாவதாகக் கடவுள் மனிதர் மீது பொறுமை உள்ளவராக விளங்கு கின்றார். தன்னுடைய பணியாளர்களை அவர் துன்புறுத்தியபோது அவர்களுக்குத் தண்டனை எதுவும் கொடுக்காது தன் மகனை அனுப்பி மனமாற்றத்தை வேண்டி நின்றார்.

மூன்றாவதாக இறுதிவரை தன் தோட்டத் தொழிலாளர்கள் மனம் மாறுவார்கள் என்று நம்பிக்கையுடன் இருந்த இறைவன் அவர்களுக்குத் தண்டனை கொடுக்கின்றார். அவர்களைத் தோட்டத்தில் இருந்து துரத்தி அதன் பொறுப்பை வேறு நபர்களிடம் கொடுக்கின்றார். கடவுள் முன்னி லையில் நாம் பொறுப்பற்றவர்கள், பயனற்றவர்கள் என்று கருதப்படு வது அவலத்திலும் பேரவலமானது ஆகும்.

அடுத்து மனிதரின் நிலையில் பார்க்கும் போது; முதலாவது மனித ருக்கு தனிச்சலுகை கொடுக்கப்படுகின்றது. தோட்டத்தில் அனைத்து வசதிகளும் உண்டு. வேலி, பிழிவுக்குழி, காவல்மடம் என்று நீளும் வசதிகள். இது தோட்டத் தொழிலாளிகளுக்குப் பணிசெய்ய இலகுவாக இருந்தது.

இங்கு சிந்திக்க வேண்டிய விடயம் கடவுள் எமக்குப் பொறுப்பைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவதுடன் அதனை நிறைவேற்ற வசதி வாய்ப்புக்களையும் தருக்கின்றார். அதனை துஷ்பிரயோகம் செய்தல் இறைநீதிக்கு அடுக்காது.

இரண்டாவது மனிதருக்குச் சுதந்திரம் கொடுக்கப்படுகின்றது. உவமையில் தொழிலாளர்களுக்குத் தாம் விரும்பியது போல தொழில் செய்ய சுதந்திரம் கொடுக்கப்படுகின்றது. ஆனால் அந்த சுதந்திரம் பேராசையாக மாறுகின்றது. எமக்குக் கொடுக்கப்பட்ட சுதந்திரத்தை எதற்குப் பயன்படுத்துகின்றோம்.

மூன்றாவது மனிதர் பதில் கூறவேண்டியவர்கள். பொறுப்பைத் தந்த இறைவன் ஒருநாள் எம்மிடம் கணக்குக் கேட்பார். அதற்குப் பதில் கூறித்தான் ஆகவேண்டும். அதில் இருந்து தப்பிக்க முடியாது. இறுதியாக இந்த உவமையில் இயேசுவின் தியாகம் கூறப்படுகின்றது. தன தந்தையையும் மனிதரையும் ஒப்புரவாக்கத் தன்னைத் தியாகம் செய்கின்றார். இரத்தம் சிந்திப் பாவத்தை கழுவினார்.

அந்த இயேசுவே எமது வாழ்வுக்கு ஊற்று. அவரிடம் காணப்பட்ட தியாகம், அர்ப்பணம் எம்மிடம் உண்டா?

**பிரார்த்தனை : இறைவா! நீ தந்த பொறுப்புக்களை முழுமையாக செய்துமுடிக்க அருள்தா! நீ தந்த சுதந்திரம் எனக்குள் பேராசைத் தீயை வளர்க்காது தியாக வாழ்வை வளர்க்க அருள்தா! ஆமென்.**

OOO

**மார்ச் - 02**

**மீக்கா 7:14 – 15, 18 – 20**
**லூக்கா 15:1–3, 11 – 32**

# பொதுவுடமைக்கு திரும்புவது எப்போது

இன்றைய நற்செய்தியில் காணாமற்போன மகன் உவமை கூறப்படுகின்றது. இந்த உவமை எமக்குச் சொல்லும் படிப்பினை என்னவென்றால் பொதுவுடமை சமுகத்தில் இருந்து தனியுடமை சமுதாயத்திற்குச் சென்று படும் உபாதைகளைக் குறிக்கும்.

தந்தை பிள்ளைகள் எல்லாரும் எவ்வித குறையும் இன்றி மகிழ்ச்சியாகப் பொதுவுடமையில் ஜீவிக்கின்றனர். ஆனால், இளைய மகன் சொத்தைப் பிரித்துத்தரச் சொல்லுகின்றான். தனது பங்கை பாகம்போடச் சொல்லுகின்றான். இது தனியுடமைச் சிந்தனை.

சொத்தைப் பிரித்தவன் "சில நாள்களுக்குள் இளைய மகன் எல்லாவற்றையும் திரட்டிக்கொண்டு தொலைநாட்டிற்கு நெடும் பயணம் மேற்கொண்டார்..." *(லூக் 15:13).*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு தொலைநாட்டுக்குச் சென்றான் என்றால், அவன் தனக்குக் கொடுக்கப்பட்ட நிலம், ஆடு, மாடு மற்றும் சொத்துக்களை எடுத்துச் செல்வது கடினம். எனவே அவன் அதனை பணமாக்கிச் சென்றான். தனியுடமையில் 'பணம்' முக்கியம் பெறும்.

பணத்தில் ஆசை கொண்டவர்கள் மனிதத்தை மதிக்கவோ, கூட்டாக வாழவோ விரும்பமாட்டார்கள். இளைய மகன் பணத்தில் ஆசை கொண்டான். நுகர்வு கலாசாரத்தில் மூழ்கினான். "தாறுமாறாக வாழ்ந்து தம் சொத்தையும் பாழாக்கினார்" என்று உவமையில் கூறப்படுகின்றது.

நுகர்வு கலாசாரத்தை விரும்புவோருக்குப் பண நெருக்கடி வரும். சொத்துக்கள் அழிந்துபோகும். வறுமை ஆட்கொள்ளும். இளைய மகன் தன் சொத்துக்களை எல்லாம் அழித்து ஒருநேர உணவுக்கும் வழியின்றி அந்தரிக்கின்றான். பன்றிகள் தின்னும் தவிடுகூட இல்லாமல் தவிக்கின் றான்.

நுகர்வு கலாசாரம் தந்த பரிசு பசி.

இன்று எம் வாழ்வில் நுகர்வு கலாசாரத்தில் மூழ்கிப் பொதுவுடமை யைச் சீரழித்து வருகின்றோம். பசி தாண்டவம் ஆடுகின்றது. ஒருநேர உணவுக்கும் வழியின்றி வாழ்வின் ஓரத்திற்குத் தள்ளப்பட்டவர்கள் ஏராளம்.

சொத்துக்குவிப்பையும் சுரண்டலையும் ஏமாற்று வாழ்வையும் தந்தது. எதற்கு எடுத்தாலும் பணம் முதன்மை பெறுகின்றது. மனிதநேயம் மனித மாண்பு பணத்தினால் சீரழிந்துபோயுள்ளது. பணச்சேகரிப்பு மனிதனை ஓய்வு இன்றி உழைக்க வைத்துள்ளது. குடும்ப வாழ்வில் பணம் முதன்மை பெறும் அளவுக்கு அன்பு முதன்மை பெறவில்லை.

இந்த உவமையில் இளைய மகன் இறுதியாக தனியுடமையில் இருந்து பொதுவுடமைக்குத் திரும்பி வருகின்றான். திருமறையில் தனியுடமையில் இருந்து பொதுவுடமைக்குத் திரும்பி வரும் சகேயு வைக் காணலாம் (லூக் *19:1-10*).

தனியுடமையில் இருந்து பொதுவுடமைக்கு வரும்போது மகிழ்ச்சி, திருப்தி, பேரின்பம், அந்தஸ்து கிடைக்கும். இல்லாமை மறைந்து போகும். ஆதித்திருச்சபையில் காணப்பட்ட பண்பும் அதுதான்.

என்னுடைய தனிப்பட்ட வாழ்வில் நான் எதனை விரும்புகின்றேன். தனியுடமையா? பொதுவுடமையா? பணத்திற்கு முதன்மை கொடுக்கின் றேனா? அன்புக்கு முதன்மை கொடுக்கின்றேனா? சிந்திப்போம்.

**பிரார்த்தனை : இறைவா! எனக்குள் இருக்கும் நான் மறையட்டும். நாம் என்ற மனம் வளரட்டும். எப்போதும் தனிவுடமையை அல்ல பொதுவு டமையை விரும்பிட அருள்தா! ஆமென்.**

ooo



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மார்ச் - 03**

வி.பயணம் 3:1-8, 13-15
1 கொரி 10:1 -6, 10 - 12
லூக் 13:1 - 9

# நடுத்தீர்ப்பும் பேரிரக்கமும்

இந்த நற்செய்திப் பகுதியில் வருகின்ற உவமை, 'காய்க்காத அத்தி மரம்' பற்றிய உவமை என்று அழைக்கப்படுகின்றது. இங்கு, கருகலான சிக்கல் என்னவென்றால் 'கனிகொடுக்காமை' ஆகும். எதிர்பார்க்கப்பட்ட கனிகள் இல்லாமை ஆகும்.

என்னைப் பொறுத்தவரையில், இங்கு கனிகொடுக்காமை என்பது; எமது தேசத்தில் கனி கொடாமையையும் - எமது தனிப்பட்ட வாழ்வில் கனி கொடாமையையும் சுட்டி நிற்பது ஆகும்.

இந்த உவமையின் பாரிய தன்மையை நாம் புரிந்துகொள்வதாயின், இந்த உவமைக்குப் பின்னால் இருக்கும் சமய - மற்றும் பயிர் கலாசாரப பின்னணிகளை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

ஓர் அத்திமரம் நாட்டப்படும் போது அது வளர்வதற்கு மூன்று வருடங்கள் செல்கின்றது. அதன் பிறகு இன்னும் மூன்று வருடங்கள் அதன் கனிகள் உண்ணப்படுவது இல்லை.

"நீங்கள் இந்நாட்டில் எவ்வித கனிமரங்களை நட்டாலும், அவற்றின் கனி துண்டிக்கப்பட வேண்டும்; அதாவது மூன்றாண்டு உண்ணப்படாமல் விலக்கப்பட்டிருக்கும். நான்காம் ஆண்டு அவற்றின் முழுவதும் ஆண்டவருக்குப் படைக்கப்பட்டுத் தூய்மையாகும்..." (லேவியர் 19:23-24) என்று லேவியர் நூலில் கூறப்படுகின்றது.

நான்காம் ஆண்டின் நிறைவின்போதே அத்திமரத்தின் கனிகள் ஆண்டவருக்குப் படைப்பதற்கு உகந்த சுத்தமான முதற்கனிகள் எனக் கணிக்கப்படும். இந்த உவமையின்படி அத்திமரத்திற்குச் சொந்தக்காரன் அதனிடம் மூன்று வருடங்களாகக் கனிகளை எதிர்பார்த்து ஏமாற்றம் அடைகின்றார்.

அதாவது, அதன் அர்த்தம் என்னவென்றால் அத்திமரம் ஏழு வருடங்களாக எந்தக் கனியையும் தரவில்லை என்று அர்த்தம். ஏழு ஆண்டுகள் என்பது நீண்டகாலம். ஓர் அத்திமரத்திலே வருடத்தில் பத்து மாதத்திற்கு கனிகள் காய்த்து குலுங்கும் என்று சொல்லப்படுகின்றது.

இதெல்லாம் எதைக் காட்டுகின்றது என்றால், அந்த மரத்தின் கனி கொடாமை எவ்வளவு மோசமானது என்பதையே காட்டுகின்றது. ஆகவே தான் தோட்டத்து உரிமையாளர் மிகவும் கோபம் அடைகின்றார்.

எமது நாட்டிலே நீதிக்கும் - அமைதிக்கும் ஆன கனிகளுக்காக நாம் நீண்டகாலம் காத்திருக்கின்றோம். ஆனால் எமது நாடு எந்தக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனியும் தரவில்லை. எமது நாடு கனிகள் காய்க்காத அத்திமரம். எமது நாட்டின் தலைமைத்துவம், அதனிடம் எதிர்பார்த்திருந்த கனிகளை இன்னும் தரவில்லை'

எமது அரசியல் அமைப்பிலே ஆன்மீக நெருக்கடி - அறவியல் நெருக்கடி ஏற்பட்டிருப்பதால் தான் இந்த காய்க்காத நிலைமை.

எங்கள் தேசமென்ற காய்க்காத அத்திமரம் கடவுளினதும் - மனிதனினதும் கண்டனத்திற்கு உள்ளாகி நிற்கின்றது.

இனி நாம் தனிப்பட்ட கனிகளற்ற நிலைமைக்குத் திரும்புவோம்.

சென்ற வருடத்தைத் திரும்பிப்பார்க்கின்றபோது, எங்கள் வாழ்விலே நாம் காண்பது என்ன? எங்கள் வாழ்விலே ஆன்மீக கனியற்ற தன்மையை நாம் காண்கின்றோமா? நாம் எப்படி பாவத்தின் கனிகளை, நம் வாழ்விலே காண்கின்றோம்? இது ஆன்மீக கனியின்மை இல்லையா? கடவுளுக்கு எதிரான எமது கலகமே, எமது வாழ்வின் கனியற்ற தன்மை.

வாழ்வு தரும் நீரூற்றுக்கள் அண்டையில் - வாழ்வுதரும் வார்த்தையில் நாம் வேரூணறாமல் இருக்கும் நிலையே, நாம் கனிகள் தராமைக்கான காரணம் ஆகும்.

எங்கள் பாரம்பரியம் - சடங்கு - சட்டம் என்பதற்கு அப்பால் செல்ல முடியாத எங்கள் ஆன்மீகமே, எங்கள் கனிகொடாமை.

மனம் திரும்புதலுக்கான கனிகள் - செயலிலே காட்டப்படும் விசுவாசக் கனிகள், என்பவற்றை எமது சமய வாழ்வு தரவில்லை என்பதே எமது கனிகளற்ற நிலைமை. எமது நாளாந்த வாழ்வு - செயல் என்பவற்றில் இருந்து வசதியோடு, பழமையோடு விலகிநிற்கும் எங்கள் சமயமே கனிகளற்ற தன்மை.

எமது கனிகளற்ற தன்மையை மறைப்பதற்காக நாம் மூடநம்பிக்கைகளிலும், அசூரத்தனமான களியாட்டங்களிலும், அமோக பொருள் குவிப்பிலும் மூழ்குகின்றோம்.

நான் - நீ - நாங்கள் அனைவருமே அந்த காய்க்காத அத்திமரம். கடவுள் எதிர்பார்த்த கனிகளை நாம் தர தவறிவிட்டோம். கடவுளின் கண்டனத்திற்கு உள்ளாகி நிற்கின்றோம்.

இந்த உவமையிலே இரண்டு குரல்கள் ஒலிக்கின்றன; “இதை வெட்டிவிடும்” (லூக் 13:7). இதை இன்னொரு விதமாகச் சொன்னால் “எறிந்துவிடு” என்று ஒரு குரல் ஒலிக்கின்றது.

அதேவேளை இன்னொரு குரல் “இதைவிட்டு வையும்” (லூக் 13:8) இதை வேறு வசனத்தில் சொன்னால் “இது இருக்கட்டும்” என்று ஒலிக கின்றது.

ஒருகுரல் கடவுளின் நடுத்தீர்ப்பையும்; மறுகுரல் அவரின் பேரிரக்கத்தையும் இங்கே பிரதிநிதித்துவப் படுத்துகின்றன. காயப்பட்ட கடவுளின



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதயத்திற்குள்ளே, இந்த இரண்டு குரல்கள் வாதாடுகின்ற காட்சியைத் தான் நாம் காணகின்றோம். நடுத்தீர்வைக் குரல் 'வெட்டிவிடு', 'எறிந்துவிடு' என்று சொல்கின்றது.

"ஏற்கனவே மரங்களின் வேர் அருகே கோடாரி வைத்தாயிற்று. நற் கனிதரா மரங்கள் எல்லாம் வெட்டப்பட்டுத் தீயில் போடப்படும்" (லூக் 3:9) என்று அக்குரல் ஒலிக்கின்றது.

ஆனால் பேரிரக்கத்தின் குரலோ அது இருக்கட்டும், 'விட்டுவையும்' என்று ஒலிக்கின்றது. "இந்த ஆண்டும் இதை விட்டுவையும்" (லூக் 13:8) என்கின்றது.

"இந்த ஆண்டு" என்ற கிரேக்க பதம் 'எதிர்காலத்திற்கு' என்று மொழி பெயர்க்கப்படலாம். அதாவது இந்த மரத்தை விட்டுவையும். அது எதிர காலத்திலாவது கனிதருமா என்று பார்ப்போம்; என்ற அர்த்தமும் கொள்ளப்படுகின்றது. எமது தேசமும் - நாங்களும் காய்க்காத மரங்கள் என்று கடவுளின் கண்டனத்திற்கு உள்ளாகி இருந்தாலும் கூட; எமக்கு மற்றுமோர் தருணம் வழங்கப்படுகின்றது.

ஆனால், இந்த அத்திமரம் கனிகளைத் தருமா?

இல்லை, இந்த அத்திமரத்தால் தானாக கனிகொடுக்க முடியாது. அது கனிகொடுக்க வேண்டும் என்றால் அதற்கு உதவி வெளியில் இருந்தே வரவேண்டும். தொழிலாளி "நான் இதைச் சுற்றிலும் கொத்தி எரு போடுவேன்" (லூக் 13:8) என்று கூறுகின்றார்.

மன்னிப்பு மட்டுமல்ல எதிர்பார்த்த கனிகளைக் கொடுப்பதற்குப் பேரி ரக்கமும் அருளப்படுகின்றது. ஆனால், மரம் அதற்கான பதிலிருப்பைத் தந்தாக வேண்டும்.

எமது தேசமும் - நாமும் எமக்கு மேலான அந்தக் கடவுளின் பேரிரக கத்திற்கு நம் வாழ்வில் இடம் தந்தால் அன்றி, நாம் உரிய கனிகளைத் தரமுடியாது. எமது கனிகளற்ற தன்மை மறையாது.

நாம் கடவுளின் பேரிரக்கத்தை எமது வாழ்வில் நிராகரித்தால்; கடவுளின் நடுத்தீர்ப்பு நம்மீது விரைவில் வருவதைத் தடுக்கமுடியாது;

ஒரு புதிய பேரிரக்கம் எமக்கு அருளப்பட்டுள்ளது.

இந்த அத்திமரம் என்னவாகும்?

அது கனிகள் காய்க்காமலே இருந்துவிடுமா?

அது கனிகள் காய்க்குமா?

எதிர்காலமே பதில் சொல்லும்!

**பிரார்த்தனை : இறைவா! கனிகொடுக்கும் அத்திமரமாக வாழ அருள்தா! ஆமென்.**

OOO



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மார்ச் - 04**

2 அரசர்கள் 5:
லூக் 4:24 - 30

# எம்மை தொற்றிய நோய் எது?

இன்றைய நற்செய்தி வாசகத்தில் இயேசு தன் சொந்த ஊரில் புறக கணிக்கப்படுகின்றார். இயேசுவின் பணி வாழ்வில் புறக்கணிப்பு மலிந்து இருந்தது. இயேசுவின் பணிக்கு இவை தடையாக இருக்கவில்லை.

சீடர்கள், அரசியல் வாதிகள், மறைநூல் அறிஞர்கள், பரிசேயர் மற்றும் உறவினர்கள் என அனைவருமே இயேசுவின் பணிக்கு ஒத்துழைப புக் கொடுப்பதற்குப் பதிலாக சவாலாக அமைந்தனர். இயேசு இவற்றை மேற்கொண்டார்.

"இறைவாக்கினர் எவரும் தம் சொந்த ஊரில் ஏற்றுக்கொள்ளப்படுவ தில்லை" (லூக் 4:24) என்று கூறுகின்றார். பின்பு எலியா, எலிசா, காலத்தில் நடைபெற்ற அற்புத நிகழ்வை எடுத்துச்சொல்லி, இறைவன் அனைவருக்கும் சொந்தமானவர். அவரது வல்லசெயல்கள் ஆள்பார்த்து இடம்பெறுவதில்லை. மாறாக நம்பிக்கையின் அடித்தளத்தில் இடம் பெறுகின்றது. எனவே, இறைவனை எமக்கு மட்டும் என்று சொந்தம் கொண்டாட முடியாது.

இஸ்ராயேல் மக்கள் தாங்கள் மட்டுமே தெரிந்து எடுக்கப்பட்ட பரி சுத்த இனம்; ஏனையவர்கள் தூய்மையற்றவர்கள்; இறைவன் அவர் களுடன் இல்லை என்று நம்பினர். இயேசு இந்த மனப்பான்மையைத் தகர்க்கின்றார். விசுவாசம் கொண்டவர்கள் இறைவனை உடைமையாகக் கொள்ளமுடியும். இறைவனின் அற்புத செயல்களை அனுபவிக்க முடியும்.

அடுத்து இன்றைய பழைய ஏற்பாட்டு வாசகத்தில் நாமான் நலம் பெறும் நிகழ்வு கூறப்படுகின்றது. நாமானின் வாழ்வில் குணமளிப்பு பெற இஸ்ரயேலைச் சார்ந்த அடிமை சிறுமி உதவுகின்றாள். நம்பிக்கை தளர்வு ஏற்பட்டபோது நாமானின் வேலைக்காரர்கள் உதவுகின்றார்கள். மற்றவர்களின் குணமளிப்புப் பணிக்கு நாம் உதவி புரிகின்றோமா? மாறாக நோய்குறித்து விமர்சித்து நோயாளியை பெரும் அவஸ்தைக்கு உட்படுத்து கின்றோமா?

இந்நிகழ்வில் இன்னொரு சம்பவம் இடம்பெறுகின்றது. நாமான் எலியாவுக்கு நானூறு கிலோ வெள்ளி, ஆறாயிரம் பொற்காசுகள், பத்துப்பட்டாடை என்பவற்றைப் பரிசுப் பொருளாகக் கொண்டு போகி ன்றான். பொருளைக் கொடுத்து இறைவனின் வல்ல செயலைக் காண விரும்புகின்றான். இறைவனிடம் பேரம் பேசி சுகம் பெறமுயல்கின்றான்.

எலிசா சொல்லுகின்றார். "நான் பணியும் வாழும் ஆண்டவர் மேல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணை. நான் எதையும் ஏற்றுக்கொள்ளேன்" (2 அரச 5:16). எலிசாவுக்குத் தெரியும் இறைவன் அருளை பொருளுக்கு விற்கக்கூடாது, பண்டமாற்றம் செய்வது தவறு என உணர்ந்துகொண்டார்.

இன்று எமது வாழ்வு இறைவனுடன் பேரம் பேசும் வாழ்வா? இறைவன் வல்ல செயலை பணத்துக்கும் பொருளுக்கும் உட்படுத்திப் பார்க்கும் வாழ்வா?

இந்த திருமறைப் பகுதியில் இறுதியில் வருகின்ற எலிசாவின் பணியாளன் கேகசி பொருள் பணத்தில் ஆசைகொண்டு நாமானிடம் பொய சொல்லி வெகுமதிகளைப் பெற்றுக்கொள்கின்றான்.

நாமானில் இருந்த உடல் தொழுநோய், கேகசியில் பண தொழுநோயாகத் தொற்றியது. உடலில் ஏற்பட்ட தொழுநோய் குணமாகும். பேராசை என்ற தொழுநோய் பண ஆசை என்ற தொழுநோய் குணமாக முடியாது. அது வழி வழியாகத் தொடரும்.

உங்களுக்கு எந்த தொழுநோய் தொற்றியுள்ளது? சிந்தியுங்கள்.

**பிரார்த்தனை : இறைவா! சாவால்களைக் கண்டு ஒதுங்காது துணிந்து பணிசெய்ய அருள்தா! என்னைப் பற்றியுள்ள பணகுஷ்டம் குணமாக அருள்தா! ஆமென்.**

○○○

**மார்ச் - 05**

**தானியேல் 3:25, 34 – 37**
**மத்தேயு 18:21 – 35**

# மன்னிப்பு கடைச்சரக்கா?

இன்றைய நற்செய்தி வாசகத்தில் வரையறையற்ற மன்னிப்புப் பற்றி பேசுகின்றது. யூத ரபிக்கள் ஒருவரை மூன்று முறைமட்டுமே மன்னிக்க வேண்டும் என்று போதித்து வந்தனர். ஆனால் பேதுரு அதற்கு மேலே சென்று ஏழுமுறை என்று கேட்கின்றார். ஏழு யூத மரபில் முழுமை எண்.

இயேசு "ஏழுமுறை மட்டுமல்ல; எழுபது தடவை ஏழுமுறை" என்று சொல்கின்றார். இதன் அர்த்தம் மன்னிப்புக்கு ஒரு வரையறை இல்லை. மன்னிப்பு அளந்துகொடுக்கும் ஒரு கடைச்சரக்கு இல்லை என்பதை தெளிவாக்குகின்றார்.

இயேசு தன் வாழ்வில் மன்னிப்பை அளந்து கொடுக்கவில்லை. எதிர்பார்ப்பின்றி கொடுத்தார். அன்பில் மலர்ந்து கொடுத்தார். இயேசுவைச் சிலுவை மரணத்திற்கு ஒப்புக்கொடுத்து கேலி செய்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யூதர்களைப் பார்த்து; "இறைவா! இவர்களை மன்னியும்" என்று பிரார்த்தனை செய்தார். துன்புறுத்தியவர்களைப் பார்த்து சொன்ன இவ்வார்த்தைகள் பெறுமதியானது. இது அன்பின் வெளிப்பாடு.

மன்னிப்புக் கொடுப்பதற்கு மற்றவர்களைப் புரிந்து கொள்ளுதல் மிகவும் முக்கியம். மற்றவர் எமக்கு எதிராகச் செய்யும் குற்றச் செயல்களுக்கு என்ன காரணம் என்பதை அறிதல் வேண்டும். அடுத்து எமக்கு எதிராக குற்றம் செய்தவர்களின் குற்றத்தை மறக்கப் பழகவேண்டும். குற்றங்களை மறக்கமுடியவில்லை என்றால் மன்னிப்புக்கொடுக்க ஆயத்தமாக இல்லை என்று பொருள்.

அன்பு செய்யக் கற்றுக்கொண்டால் மன்னிப்பு இலகுவாகக் கொடுக்க முடியும். கிறிஸ்துவின் அன்பு எம்மில் மிளிரும்போது வரையறையின்றி அன்பு செய்யமுடியும். "எல்லோருமே ஒரு கண்ணுக்கு ஒரு கண் என்ற பழிவாங்கும் முறையில் வாழத்தொடங்கினால் நாளடைவில் உலகமே குருடாகிவிடும்" என்று மகாத்மா காந்தி குறிப்பிடுகின்றார். பழிவாங்குவதற்குப் பலம் அதிகம் தேவையில்லை. மாறாக மன்னிப்பதற்கு பலம் அதிகம் தேவை. இங்கு பலம் என்பது மனோபலம். இந்தப் பலத்தை இறைவனிடம் அனுதினமும் இரந்து பெற்றுக்கொள்ள வேண்டும்.

நான் மற்றவர்களை மன்னிக்கிறேனா! எனது மன்னிப்பு எல்லையற்றவையா? அளவுகோல் போல் அளந்து கொடுக்கப்படுகின்றனவா! மனதில் கறைகள் வைத்து மன்னிக்கின்றேனா! பிறர் குற்றம் மறந்து மன்னிக்கின்றேனா! அன்பு நிறைந்து மன்னிக்கின்றேனா? சிந்திப்போம்.

**பிரார்த்தனை : இறைவா! மன்னிப்பின் ஊற்றே! உன்னைப்போல் மன்னிப்பை அளவுகடந்து கொடுக்க எனக்கு உதவி செய். எனக்கு எதிராக குற்றம் செய்வோர் மீது காழ்ப்புணர்வு கொள்ளாது அன்பு செய்ய அருள்தா!. ஆமென்.**

OOO

**மார்ச் - 06**

**இணைச்சட்டம் 4:1, 5 – 9**
**மத்தேயு 5:17 – 19**

## வாழ்வா அழிவா

யூதர்களைப் பொறுத்தவரை சட்டம் என்பது; பத்துக் கட்டளைகளும், திருமறையில் உள்ள முதல் ஐந்து நூல்களும் அதாவது தோராவும் ஆகும். மற்றும் 'சட்டமும் இறைவாக்கினரும்' என்று யூதர்கள் பாவித்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழு பழைய ஏற்பாட்டு திருமறையும் ஆகும். அத்தோடு வாய்மொழிச் சட்டங்கள் அல்லது மறைநூல் அறிஞர்களின் சட்டங்கள் ஆகும். இயேசுவை சட்டங்களை அழிக்க வந்தவர் என்று குற்றம் சாட்டினர். இதனால்தான் இயேசு சொல்கின்றார். சட்டம் அழியாது. அதன் சிறு எழுத்தோ அதன் சிறு கொம்போ அழியாது. சட்டத்தை நிறைவேற்ற நான் வந்தேன் என்கின்றார்.

பரிசேயரும் மறைநூல் அறிஞர்களும சட்டங்களை எக்குறையும் இன்றி மிக நுணுக்கமாகக் கடைப்பிடித்து; அதற்குத் தாங்களும் மேலதிக விளக்கம் கொடுத்து மக்களுக்குச் சுமையாக்கினர். இலகுவாகக் கடைப் பிடிக்கவேண்டிய சட்டங்களை மக்களுக்கு அழுத்தமாக்கினர். மனித நேயத்திற்கும் மனித தேவைக்கும் முக்கியத்துவம் மறுக்கப்பட்டுச் சட்டம் கடைப்பிடிக்கப்பட்டது. இதனால் சட்டங்கள் மக்களுக்குச் சுமை யாகவும், பாரமாகவும், தடையாகவும் இருந்தன.

இயேசு சட்டங்களை இலகுவாக்குகின்றார். சுமைகளை இறக்கி வைக்கின்றார். சட்டங்களை நன்மையாக்கிக் காட்டுகின்றார். தண்டனை கொடுக்கும் சட்டத்தை மன்னிப்பாக்கிக் காட்டுகின்றார். வாழ்வைப் பாழாக்குவது அல்ல சட்டங்கள். வாழ்வைக் கட்டி எழுப்புவதுதான் என்கின்றார்.

ஓய்வுநாள் மனிதருக்காக, மாறாக மனிதர் ஓய்வுநாளுக்காக அல்ல என்கின்றார். விபசாரத்தில் பிடிக்கப்பட்டவர் கல்லெறிந்து கொல்லப்பட வேண்டும் என்பது சட்டம். அதனை மாற்றி மன்னிப்பு புதுவாழ்வு கொடுக்கின்றார். கண்ணுக்குக் கண் பல்லுக்குப் பல் என்பது பழைய சட்டம். புதுச்சட்டம் அன்பு, சகிப்பு என்கின்றார். துன்புறுத்துவோருக்கு செபித்தல் நன்மை செய்தல் என்கின்றார். ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள் என்னும் புதிய சட்டத்தைக் கொடுக்கின்றார். நான் உங்களில் அன்பு கொண்டுள்ளது போல நீங்களும் ஒருவர் மற்றவரில் அன்பாய் இருங்கள் என்கின்றார்.

சட்டங்களின் நோக்கம் இறைவனின் விருப்பத்தை அறிந்து செயற் படுவது ஆகும். மாறாக எங்கள் அதிகாரத்தைத் தக்கவைக்கும் நோக்கு டன் கையாள்வதற்கு அல்ல. கிரேக்கத்தில் நீதி மனிதருக்குரியதை மனிதருக்கும் கடவுளுக்குரியதை கடவுளுக்கும் கொடுப்பதாகும். இந்த கடமையைத்தான் இயேசு நிறைவேற்றினார். சட்டங்கள் பலி நிறை வேற்றுவதில் அல்ல. இரக்கம் காட்டுவதில் தான் நிறைவேறுகின்றது. செய்யக்கூடாத கடினத்தன்மையில் அல்ல; செய்யக்கூடிய அன்பின் தன்மையில் தான் அடங்கியுள்ளது.

புனித பவுல் தனது கடிதங்களில் கூறும்போது சொல்கின்றார்; பிற இனத்தாருக்குச் சட்டம் இல்லை. சட்டம் இதுவரை மனிதனை அடிமை யாகவே வைத்திருந்தது. சட்டத்திற்குப் பயந்தே மனிதன் வாழ்ந்திருந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான். ஆனால் இயேசுவின் வருகைக்குப் பின் அன்பே சட்டமாகின்றது.

"திருச்சட்டத்தைப் பெற்றிராத பிற இனத்தார் அதில் உள்ள கட்டளை களை இயல்பாகக் கடைப்பிடிக்கும் போது, அவர்களுக்குத் திருச்சட்டம் இல்லாத போதிலும் தங்களுக்குத் தாங்களே அவர்கள் சட்டமாய் அமைகிறார்கள். திருச்சட்டம் கற்பிக்கும் ஒழுக்கநெறி தங்கள் உள்ளத் தில் எழுதப்பட்டிருக்கின்றது என்பதை அவர்கள் தங்கள் நடத்தையில் காட்டுகின்றார்கள்" (உரோமர் 2:14-15). எம்மத்தியில் காணப்படும் எழு தப்பட்ட சட்டங்கள், வாய்மொழிச் சட்டங்கள் வாழ்வை சிதைக்கின்றதா? வாழ்வை உருவாக்குகின்றதா?

**பிரார்த்தனை : இறைவா! அன்பென்னும் சட்டத்தை கடைப்பிடித்து ஒழுக அருள்தா! ஆமென்.**

ooo

**மார்ச் - 07**

**எரேமியா 7:23 – 28**
**லூக்கா 11:14 – 23**

# அலகை தரும் கவர்ச்சி

இன்றைய நற்செய்தி வாசகத்தில் இயேசு யாரைக்கொண்டு பேய்களை ஓட்டுகின்றார் என்பது பற்றிய கேள்வி எழுப்பப்படுகின்றது. பேய்களின் தலைவனாக பெயல் செபூல் காணப்பட்டான். அவனுடைய உதவியுடன் பேய்களை ஓட்டுகின்றான் என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்றது.

இயேசுவின் சக்தியை சகிக்கமுடியாத ஏற்றுக்கொள்ள முடியாத பரிசேயர் பெயல் செபூலைக் கொண்டு பேய்களை ஓட்டுகின்றான் என்றனர். இதற்கு இயேசு கொடுக்கும் பதில் "உங்களைச் சேர்ந்தவர்கள் யாரைக்கொண்டு பேய் ஓட்டுகிறார்கள்"

பரிசேயரின் சீடர் பேய்களை ஓட்டினார்கள். அவர்கள் பேய் ஓட்டு வதில் வெற்றி பெறவில்லை. இயேசுவின் சக்திக்கு முன்னால் ஈடு கொடுக்க அவர்களால் முடியவில்லை. இதனால் குற்றம் பிடித்தார்கள். "நான் கடவுளின் ஆற்றலால் பேய்களை ஓட்டுகிறேன் என்றால் இறை யாட்சி உங்களிடம் வந்துள்ளது அல்லவா!..." (லூக் 11:20).

பேய்களை ஓட்டுவது கடவுளின் ஆட்சியை நிலைநாட்டும் செயல். சுய பேர் புகழ் நிலைநாட்டும் செயல் அல்ல. அடிமை நிலையில் இருக்கும் மக்களை விடுதலை செய்யும் நிலை. மாறாக அடிமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாக்கிப் பார்க்கும் செயல் அல்ல. அலகையின் ஆளுகை உலகை ஆட்கொண்டு பிரிவினைகளையும், சுயநலன்களையும், போர்களையும், இரத்தம் சிந்துதல்களையும், பகைமையுணர்வையும், பழிவாங்குதலையும் உருவாக்கியுள்ளது.

அலகை கவர்ச்சி மூலம் மனிதர்களை ஈர்த்துக்கொள்ளுகின்றான். "அந்த மரம் உண்பதற்குச் சுவையானதாகவும், கண்களுக்குக் களிப்பூட்டுவதாகவும் இருந்ததைக் கண்டு, பெண் அதன் பழத்தைப் பறித்து உண்டாள் அதைத் தன்னுடனிருந்த தன் கணவனுக்கும் கொடுத்தாள்..." (தொ.நூ 2:6).

உலகத்தில் பாவம் உட்புகக் காரணமாக இருந்தது கவர்ச்சி. அதே கவர்ச்சி ஊடகங்கள் முதல் பொருள்கள் வரை உண்டு. மனிதர்கள் கவர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றார்கள்.

எதனைச் செய்தாலும் கவர்ச்சியாகச் செய்ய முயல்கின்றார்கள். நடை உடை பாவனை எல்லாமே கவர்ச்சியாகவே உள்ளன.

அலகை நன்மை செய்வது போல தீமையை இலகுவாக உலகில் புகுத்தி விடுகின்றான். கவர்ச்சியில் மனதைப் புதைத்த மனிதன் கடவுளைவிட்டு வெகுதூரம் சென்றுவிட்டான்.

இயேசு அலகையினால் சோதிககப்பட்டார். அதனை தூய ஆவியின் துணையுடன் மேற்கொண்டார். நாமும் அலகையை மேற்கொள்ள தூய ஆவியின் துணைவேண்டுவோம். எம்மை ஈர்க்கும் அலகையின் வழிகளை உணர்ந்து கொள்வோம். அலகையை மேற்கொண்டு இறையாட்சியை இவ்வுலகில் கட்டியெழுப்புவோம்.

**பிரார்த்தனை : இறைவா! உலக கவர்ச்சியில் சிக்கி உன்னை மறுதலிக்காது இருக்க அருள்தா! தூய ஆவியின் துணையுடன் அலகையை வெல்ல அருள்தா! ஆமென்.**

OOO



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மார்ச் - 08**

ஓசேயா 14:2 – 10
மாற்கு 12:28 – 34

# தெய்வீக அன்பை கொடு

இன்றைய நற்செய்தி வாசகத்தில் முதன்மையான கட்டளைகள் சொல்லித்தரப்படுகின்றது. ஒன்று கடவுளுடன் கொள்ளும் அன்பு. மற்றது சக மனிதருடன் கொள்ளும் அன்பு. சிலுவை எமக்குக் காட்டும் குறியீடு; கடவுளுக்கும் மனிதருக்கும் இடையிலான அன்பை நிலைக்குத்துச் சட்டமும், மனிதருக்கும் சக மனிதருக்கும் இடையிலான அன்பைக் கிடைச்சட்டமும் சுட்டும் - அன்பைப் பெற்றும் கொடுத்தும் வாழ அழைக்கப்படுகின்றோம்.

அன்பை கறைப்படுத்தும் விடயங்களும் உண்டு.

## 01. அன்பிலே வரும் பேராசை

இங்கே பேராசை என்பது ஒருவரை அவர் எங்களுக்குத் திருப்பித் தரக்கூடிய காரியங்களுக்காக அவரில் அன்பு வைப்பது ஆகும்.

ஒரு நபரை அவருக்காக அல்ல அந்த நபரை எங்களுக்காக அன்பு கூருவது.

சுயநலம் - எங்களுடைய சந்தோசத்திற்காக; எங்களுடைய திருப்திக்காக; எங்களிலே இருக்கும் 'நான்' என்பது பெருமைப்படுத்துவதற்காக நாம் காட்டும் அன்பு.

பார் நான் உனக்கு எவ்வளவு செய்திருக்கிறேன். எவ்வளவு அன்பு காட்டியிருக்கின்றேன். எவ்வளவு தியாகம் செய்திருக்கிறேன். என்ற வார்த்தைகளுக்கு அடியில் எங்கள் சுயநலம்; எங்கள் சுயதிருப்தி; நாம் அன்பு செய்யும் நபரை நமது அன்பால் கட்டிப்போட நினைக்கும் எண்ணம்; இந்த அன்பு எதிர்பார்ப்புடனான அன்பு. உண்மையான, தூய்மையான அன்பு அல்ல,

## 02. அன்பிலே வரும் ஆதிக்கம்

இந்த அன்பு தனக்குரியவர்களை தனக்காக மட்டும் என்று ஆதிக்கம் செலுத்தும் அன்பு.

தாயினுடைய அன்பு சுயநலமில்லாத அன்பு என்று நாம் போற்றுகின்றோம். ஆனால், அந்த அழகான உண்மை அன்புகூட 'ஆதிக்கமான' 'தனக்கு மட்டும்தான்' என்ற அன்பாக மாறும்போது; அந்த அழகான அன்புகூட தனக்கு அழகை இழந்து விடுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதை நாங்கள் 'அன்பாலே திணறடிப்பது" என்று சொல்லலாம். அன்பு காட்டப்படுகிறது ஆனால் சுதந்திரத்தை சுவாசிக்கவிடாமல் பிள்ளை திணறடிக்கப்படுகிறது. இதனால் பிள்ளையின் சுதந்திரமான வளர்ச்சி தடைப்படுகிறது.

சில வயதுக்கு வந்த பிள்ளைகள் கல்யாணம் கூட செய்துகொள்ளா மல் அம்மாவின் முந்தானையைப் பிடித்துக்கொண்டிருப்பதையும் நாங்கள் உலகில் பார்க்கின்றோம். அவ்வளவிற்கு அம்மாவின் அன்பு அவர்களை ஆதிக்கம் செய்திருக்கிறது. திணறடிக்கிறது.

அப்படிப்பட்ட தாய் தான் அன்பு செய்வதாகக் கூறினாலும், அந்த அன்பு உண்மையான அன்பு அல்ல. அது ஒரு 'சிறைவைப்பான அன்பு. அது பிள்ளையின் ஆளுமையை வளரவிடாமல் அழிக்கின்றது.

தாயன்பு மட்டுமல்ல; கணவன் மனைவி அன்பு, நண்பர்களுக்கிடை யிலான அன்புகூட இப்படிப்பட்ட அன்பாக இருக்கலாம்.

எங்கே அன்பு என்ற பெயரிலே ஆதிக்கம் நுழைகிறதோ; எங்கே அந்த அன்பு தன்னுடைய கோரிக்கைகள் எப்போதும் நிறைவேற்றப்பட வேண்டும் என்ற எண்ணம் கொண்டதாய் இருக்கின்றதோ; அந்த அன்பு பிறரை வாழ்விப்பதில்லை. அது திணறடிக்கிறது. உண்மை அன்பை அன்பு என்ற பெயராலேயே சாகடிக்கிறது.

கடவுளின் அன்பு நெஞ்சம் எங்களின் அன்பு நெஞ்சாக மாறவேண் டும். அப்போதுதான் நாங்கள் மற்றவரில் உண்மையாய் அன்பு செய்ய முடியும்.

எங்கள் மனித அன்பு மனித அன்பாய் மட்டும் நின்றுவிட்டால் போதாது; அது 'தெய்வீக அன்பாய் மாறவேண்டும்' அப்போதுதான் அது உண்மை அன்பாய், தூய அன்பாய் மாறுகிறது.

**பிரார்த்தனை : இறைவா! நான் மற்றவர்கள் மீது வைக்கும் அன்பு எனது சுயநலத்தின் வெளிப்பாடாய் அமையாது, தெய்வீகமானதாய் அமைய அருள்தா! ஆமென.**

OOO



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மார்ச் - 09**

ஓசேயா 6:1 – 6
லூக்கா 18:9 – 14

# பாவத்தை உணர்தல் வேண்டும்

இரண்டு பேர் கோவிலுக்குப் போனார்கள் கடவுளை வழிபட. இந்த நற்செய்திப் பகுதி வழிபாடு பற்றித்தான் பேசுகிறது. கோவிலுக் குப் போகும்போது பரிசேயன் தான் முன்னால் போகிறான். ஆயக்காரன் பின்னால் போகிறான்.

ஆனால், கோவிலில் இருந்து திரும்பும் போது ஆயக்காரனே கடவு ளுக்கு ஏற்றவனாய்த் திரும்புகிறான், பரிசேயனல்ல.

நாங்கள் வழிபாட்டிற்குப் போவதும் திரும்புவதும் முக்கியமல்ல; கடவுளால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றோமா என்பது தான் முக்கியம்.

கடவுளால் ஏற்றுக்கொள்ளப்படுதல் என்பது என்ன மனநிலையோடு நாங்கள் கடவுள் முன்னால் நிற்கிறோம் என்பதைப் பொறுத்தது.

இரண்டு விதமான அங்க வெளிப்பாடுகள்;

இந்த இரண்டு பேரும் தனி வழிபாட்டிற்காகச் செல்லவில்லை. தனியாக நின்று பிரார்த்திக்கவும் இல்லை. மக்கள் கூட்டத்தோடு தான் வழிபடுகின்றார்கள். ஆனாலும் பரிசேயன் கூட்டத்திலிருந்து பிரிந்து நிற்கின்றான்.

அவன் நிற்கிறநிலை, அவன் தான் மற்றவர்களிலும் உயர்ந்தவன்; மற்றவர்களோடு தான் சேரக்கூடாது ஏனென்றால் அவர்கள் பாவிகள் என்ற அவனுடைய மனநிலையைக் காட்டுகின்றது.

அடுத்து அவன் மனதில் செபித்தானா? அல்லது மற்றவர் கேட்கும் படி சத்தமாய்ச் செபித்தானா?

அவன் மற்றவர் கேட்கும்படிதான் செபிக்கிறான். இதற்கு இரண்டு நோக்கங்கள் இருந்தது. அவனுக்கு ஒன்று தன்னைப் பற்றி மற்றவர்க ளுக்குத் தெரியப்படுத்துவது, விளம்பரப்படுத்துவது;

மற்றொன்று, ஆயக்காரனை மட்டம் தட்டுவது, பரிகசிப்பது.

இனி ஆயக்காரனின் அங்கவெளிப்பாட்டை உற்றுநோக்குவோம்.

அவன் மற்றவர்களிடமிருந்து தனித்து தொலைவில் நிற்கிறான்.

பரிசேயன் தலையை உயர்த்திக்கொண்டு வானத்தை அண்ணாந்து பார்த்துக்கொண்டு கைகளை உயர்த்தி விரித்தபடி "இறைவா என்னைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார் அவனைப் பார்" என்று இறுமாப்பாகச் செபித்தான்.

ஆனால், ஆயக்காரன் வானத்தை அண்ணார்ந்து பார்க்கத் துணிவில லாமல் தலை கவிழ்ந்து, தன் மார்பில் அடித்துக்கொண்டு செபித்தான். யூத கலாசாரத்திலும் சரி, எமது கலாசாரத்திலும் சரி பெண்கள் தான் மார்பில் அடித்துக்கொள்வார்கள், ஆண்கள் அல்ல.

பெண்கள் அதிக கோபத்தில் எவரையாவது சபிக்கும்போது, அல் லது தாளாத துயரத்தின்போது மார்பில் அடித்துக்கொள்வார்கள்.

ஆனால், இங்கே ஓர் ஆண் தனது மார்பில் அடித்துக்கொள்கிறான் என்றால் அவனுடைய வேதனை உணர்வு அவனுடைய குற்ற உணர்வு அவனுடைய பாவ உணர்வு எவ்வளவு ஆழமானது என்று நாம் சிந்தித துப் பார்க்கவேண்டும்.

ஆம், எங்களுடைய அங்க வெளிப்பாடு, எங்கள் குரலின் தொனி, நாம் நிற்கின்ற நிலை என்பதை கடவுளுக்குக் காட்டிக்கொடுத்துவிடு கிறது.

இரண்டு விதமான மனப்பாங்குகள்

இரண்டு பேர் கோவிலுக்கு செபிக்கப் போனார்கள். ஆனால் ஒருவன தான் செபித்தான்.

மற்றவன் செபிக்கவில்லை. அவனுடைய செபம் கடவுளை நோக்கி யது அல்ல, அது தன்னை நோக்கியது. கடவுளின் புகழ்பாடுவதற்குப் பதிலாக அவன் தன் புகழ்பாடுகின்றான்.

அவனுடைய வினைச்சொற்கள் எல்லாம் தன்னைப் பற்றியதுதான்.

நான் மற்றவர்களைப் போல் இல்லை. நான் உபவாசிக்கிறேன். நான் தசமபாகம் கொடுக்கிறேன். நான் ஆயக்காரனைப் போல் இல்லை. 'நான்' மயமான செபம். நான் மயமான விளம்பரம்.

மற்றவர்கள் பற்றிய அவனுடைய சொற்கள் எல்லாம் வசைச் சொற்கள். இழிவுபடுத்தும் சொற்கள், பழிச்சொற்கள்.

கொள்ளையர் - நேர்மையற்றோர் - கள்ளர் - விபசாரர்.

அதாவது, இந்த ஆயக்காரன் கொள்ளைக்காரன், கள்ளன், அந்நிய ரோடு, புறசாதியரோடு புழங்குவதால் எங்கள் மதத் தூய்மையை விப சாரம் செய்கிறவன் - மதத்துரோகி இவைதான் ஆயக்காரனைப் பற் றிய பரிசேயனுடைய சுடுசொற்கள்.

பத்திலொன்று கொடுக்கிறான்; உபவாசம் இருக்கிறான். ஆனால் பிறருக்கு அவனால் அன்பைக் கொடுக்கமுடியவில்லை. பரிவைக் கொடு க்க முடியவில்லை. புரிந்துணர்வை ஏற்பைக் கொடுக்க முடியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெறுப்பு - கோபம் - ஏளனம் - பெருமை - சுயநீதி - அகங்காரம் இவைதான் பரிசேயனுடைய மனப்பான்மைகள். தனது சுயநீதி சமய அனுட்டானம் என்பதை வைத்து கடவுளிடம் பேரம் பேசுகிறான்.

எவரும் கடவுளுக்கு முன்னால் தங்கள் நீதியைப் பற்றி பறைசாற்றிக் கொள்ள முடியாது.

ஏனென்றால், எமது நீதிகள் கடவுளின் முன்னால் கந்தைகளே - வெறும் பீற்றல் சாக்கு போன்றவையே என்றுதான் வேதம் சொல்கிறது.

எதை நாம் பிறரிடம் அதிகம் வெறுக்கிறோமோ அது நமக்குள் ஒளிந்திருக்கிறது. எனவேதான் நாம் மற்றவர்களில் கோவப்படுகின்றோம் என்று நவீன மனோதத்துவம் கூறுகின்றது.

பரிசேயனுடைய செபத்திலே கடவுளும் இல்லை; கடவுளின் இரக்கத்திற்கான வேண்டுதலும் இல்லை.

இனி, ஆயக்காரனின் மனப்பாங்கைப் பார்ப்போம்.

"கடவுளே! பாவியாகிய என்மீது இரங்கியருளும்" என்ற ஒரே வசனம் தான் அவனுடைய செபம்.

"நான் பாவி, எனக்கு இரங்கும்" என்பதைத் தான் அவன் திரும்பத் திரும்ப சொல்கிறான்.

அவன் நல்லவனாய் இருக்கமுயன்று தோற்றவனாய் இருக்கலாம்.

பாவத்தில் அடிக்கடி தடுக்கி விழுந்தவனாய் இருக்கலாம்.

அவனுடைய வேண்டுதல் எல்லாம் கடவுளின் இரக்கத்திற்குத்தான்.

கடவுளுக்கு ஏற்புடையவன் யார்?

ஏன் பரிசேயன் கடவுளுக்கு ஏற்புடையவனல்ல

கடவுள் பெருமையை வெறுக்கிறார் எதிர்க்கிறார்.

கடவுள் சுயநீதியை வெறுக்கிறார் எதிர்க்கிறார். தங்கள் நல்ல செயல்களால் கடவுளுக்கு ஏற்புடையவர்கள் ஆகலாம் என்று நினைப்பவர்களை கடவுள் ஏற்பதில்லை.

தங்கள் பாவநிலையை அறிந்தவர்களை, அதை ஏற்றுக்கொள்ளுகிறவர்களை, "உன் அருள் ஒன்றே கதி வேறில்லை கதி" என்று கடவுளின் இரக்கத்தை வேண்டுபவர்களைத் தம்மைக் கடவுள் முன் தாழ்த்துகிறவர்களை கடவுள் நேசிக்கிறார். அவர்களை அவர் ஏற்றுக்கொள்கிறார்.

தங்கள் பாவத்தை அதிகம் உணர்ந்தவர்களே புனிதர்கள். தாங்கள் உணர்வதற்கு பாவம் தங்களிடம் இல்லை என்பவர்கள் புனிதர்கள் அல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனிதத்திற்கு ஏணிப்படி நல்ல செயல்கள் அல்ல,

புனிதத்திற்கு ஏணிப்படி பாவ உணர்வேதான்.

தங்கள் பாவத்தைப் பார்ப்பவர்களே புனிதர்கள். பிறரின் பாவங்களைப் பார்ப்பவர்கள் அல்ல.

நான் பரிசேயனா? ஆயக்காரனா?

இரண்டு பேர் ஆலயத்திற்குப் போனார்கள் திரும்பும்போது எப்படி போனார்கள்?

ஆலயத்திற்கு நாம் போகின்றோம், நாம் எப்படித் திரும்புகிறோம்?

நாம் பரிசேயனா? ஆயக்காரனா? நல்லவர்களா? கெட்டவர்களா? அல்லது இரண்டும் கலந்தவர்களா?

இரண்டு பேரையும் கடவுளின் இரக்கம் தான் காப்பாற்ற முடியும். வேறு எதுவுமே இல்லை.

**பிரார்த்தனை : இறைவா! பல வேளைகளில் நான் எனக்குள்ளே பரிசேயனாயிருக்கிறேன் என்மீது இரக்கமாயிரும். இறைவா! நான் பல வேளைகளில் எனக்குள்ளே ஆயக்காரனாய் இருக்கிறேன் என் மீது இரக்கமாயிரும். ஆமென்.**

OOO

**மார்ச் - 10**

**யோசுவா 5:9ஆ 10 – 12**
**2 கொரி 5:17–21**
**லூக் 15:1 – 3, 11 – 32**

# மன்னிப்பு

மன்னிக்க முடியாமை இன்றைய உலகில் பெரும் பிரச்சனையாக உருவாகியுள்ளது. திருமண உறவுகள் விவாகரத்தில் முடிவடைவதற்கு முக்கிய காரணம் ஒருவரையொருவர் மன்னிக்க முடியாமை.

கோபம், பகையுணர்வு, பழிவாங்கும் உணர்வு, அடக்கி வைக்கும் கோபம், தம்மை மன்னிக்கமுடியாத குற்ற உணர்வு இதெல்லாம் மருந்தால் குணமாக்க முடியாத நோய்களுக்குக் காரணமாகின்றது என்பது வைத்தியத்துறை நிபுணர்களின் கணிப்பாகும்.

'பழிவாங்கும் வழியில் செல்லும் நபர் தனக்கும் தன் எதிரிக்குமென்று இரண்டு சவக்குழிகளைத் தயார் செய்துகொள்ளட்டும்' என்று ஓர் ஆங்கிலத் திரைப்படத்தில் டயலாக் வரிகள் வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னிக்க முடியாமை தன்னையும் அழிக்கும், பிறரையும் அழிக்கும்.

இன்றைய உவமையில் மூன்று கதாபாத்திரங்கள் இடம்பெறுகின்றன. மன்னிக்கும் தந்தை, மன்னிப்பு வேண்டும் மகன், மன்னிக்க மறுக்கும் அண்ணன் என்பவைதான் அந்தக் கதாபாத்திரங்கள். அவை எமக்குத் தரும் படிப்பினைகளை இத்தவக்காலத்தில் நாம் மனதிற்கொள்வது நன்று.

**மன்னிக்கும் தந்தை**

தந்தையின் மனது மகனால் காயப்பட்ட மனது. இருந்தபோதும் காயப்படுத்திய மகனுக்காய் பரிதவிக்கும் மனது. மகன் மன்னிப்பு வேண்டாமையாலே மன்னிக்கும் மனது. தண்டனைக்குரிய பதில் மன்னிப்பையும் அன்பையும் வாரி வழங்கும் மனது. அடிப்பதற்குப் பதில் அரவணைக்கும் மனது. நிபந்தனையின்றி மன்னிக்கும் மனது. கடவுளின் இந்த மன்னிக்கும் மனதை நாமும் கொண்டிருக்க வேண்டும் என்பது தான் இயேசு நமக்குக் கற்பிக்கும் பாடம். இயேசு இந்த மன்னிக்கும் மனதை வாழ்ந்து காட்டினார். என்னால் இதை என் வாழ்வில் கடைப் பிடிக்க முடிகின்றதா? இந்தக் கேள்வியே என் தவக்கால சிந்தனையாக மாறவேண்டும்.

**மன்னிப்பு வேண்டும் மகன்**

'சித்தம் தெளிவது' என்பது செய்த தவறை உணர்வது. எமது 'அகங்காரம்' 'ஆணவத்தால்' நாம் கடவுளுக்கும் பிறருக்கும் எதிராய் கலகம் புரிகின்றோம். உறவை முறித்துக்கொள்கின்றோம். தூரம் விலகிச் செல்கின்றோம்.

'தன் சொத்தை வீணே அழித்தான்' என்பது நமது சுதந்திரத்தை நாம தவறாகப் பாவிப்பது. கண்மூடித்தனமாய் அழிவுப் பாதையில் செல்வது. அன்பு செய்வாரின் அன்பை மதியாமல், உணராமல் வாழ்வது.

செய்பாவம் உணர்ந்தால் போதாது. எவருக்கெதிராய் பாவம் செய் தோமோ அவரிடம் நாம் மன்னிப்பு வேண்டி வரவேண்டும். எமது அகங்காரம், ஆணவம் இங்கு தாழ்மையாக மாறவேண்டும். நாம் இழந்த நிலைமையைப் பெற எந்த விதத்திலும் தகுதியற்றவர்கள் என்ற எண்ணம் எம்மில் உருவாக வேண்டும். மன்னிப்பு வேண்டுதல் என்பது ஒரு மனமாற்றம், பாவம் உணருதல் என்பது பாரிய மாற்றம். அதை ஒரு 'அற்புதம்' என்றே வர்ணிக்க முடியும்.

மனம் திரும்பினால் மட்டுமே நாம் மன்னிப்பு வேண்டமுடியும். மனம திரும்புதல் என்பது தந்தையின் அன்பு மனதை உணர்ந்தால் மட்டுமே நிகழமுடியும். இன்னொருவர் மனதை புண்படுத்திவிட்டோம் என்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனிதமான உணர்வு. நான் மன்னிப்பு வேண்டும் மகனாக, மகளாக; சகோதரனாக, சகோதரியாக; கணவனாக, மனைவியாக; நண்பனாக, நண்பியாக; வாழ்கிறேனா?

மன்னிப்பு வேண்டும் துணிவு, பணிவு என்னிடத்தில் உண்டா?

**மன்னிக்க மறுக்கும் அண்ணன்**

கோபம், பொறாமை, கண்டனம், முறைப்பாடு, குற்றம் சுமத்தல், திருப்தியில்லை, சுயநீதி, பழிவாங்கல், பகை, வெறுப்பு, காழ்ப்பு, கசப்பு, மகிழ்ச்சியின்மை இவற்றின் ஒட்டுமொத்த உருவம் அண்ணன். காயத்தை ஆற்றமறுத்து மேலும் காயப்படுபவன் அண்ணன். எப்போதுமே இரட்டை சவக்குழிகளைத் தோண்டுபவன் அண்ணன். நஞ்சை உண்டு நஞ்சை உமிழ்பவன் அண்ணன், அவனா நான்?

**பிரார்த்தனை : ஆண்டவரே, மன்னிக்கவும், மன்னிப்பு வேண்டவும் என் மனதிற்குள் இருக்கும் போராட்டங்களை நீர் அறிவீர். உமது அருள் ஒன்றாலே மட்டுமே எனக்கு மன்னிக்கவும், மன்னிப்பு வேண்டவும் முடியும். எனக்கு உமது அருளைத்தாரும். ஆமென்.**

OOO

**மார்ச் - 11**

எசாயா 65:17 – 21
யோவா 4:43 – 54

# புதிய உலகமும் கடிகாரமும்

புதிய உலகத்தைக் கனவு காணாதோர் கிடையாது. கலைஞர்கள், கவிஞர்கள், எழுத்தாளர்கள், சிந்தனைவாதிகள் அனைவருமே புதிய உலகம் உருவாக ஏங்குபவர்கள் தான். ஆனால் அவர்கள் எல்லோரிலும் பார்க்கப் புதிய உலகைக் கனவு காண்பவர்கள், புதிய உலகு தேவைப் படுபவர்கள் நலிந்தவர்கள் தான். ஏனென்றால் வாழ்க்கையின் கொடுமையை உணர்ந்தவர்கள் அவர்கள்தான். வறுமை அரக்கனின் பிடியில் மாள்பவர்கள் இவர்கள். போர் அரக்கனின் இரத்த வெறிக்குப் பலியானவர்கள் இவர்கள். அநீதிக்கும், ஒடுக்குமுறைக்கும், சுரண்டலுக்கும் இலக்கானவர்கள் இவர்கள்.

விஞ்ஞானம் புதிய உலகை உருவாக்கும் என்று இந்த உலகம் கனவு கண்டது. மனித முன்னேற்றம், தொழில் நுட்பம், உற்பத்தி புதிய உலகைக் கொண்டுவரும் என்று இந்த உலகம் கனவுகண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு உலக மகா யுத்தங்கள், பணக்காரர் - ஏழை இடைவெளி, சர்வாதிகார ஆட்சிகள், மனித நேயத்தின் மடிவு இந்தக் கனவுகளை எல்லாம் தவிடுபொடியாக்கிவிட்டது.

இன்றைய பின் - நவீன உலகம் புதிய உலகு பற்றி அவநம்பிக்கை யோடு வாழும் உலகம். ஆனால் நம்பிக்கை இல்லாவிடத்தில் நம்பிக்கை வைக்கும் சமூகமே கிறிஸ்தவ சமூகம், அதன் நம்பிக்கை தன்னிலோ, உலக மாற்றத்திலோ, உலக அமைப்புக்களிலோ அல்ல. அதன் நம்பி க்கை இறைவனுடைய செயற்பாட்டிலே வைக்கும் நம்பிக்கை. **"இதோ! புதிய விண்ணுலகையும் புதிய மண்ணுலகையும் படைக்கிறேன்"** என்ற கடவுளின் வாக்குறுதியில் வைக்கும் நம்பிக்கை.

போரும், யுத்தமும், வறுமையும், சுண்டலும் இல்லா; பாதுகாப்பும், அமைதியும் ஆட்சிபுரியும் கடவுள் உருவாக்கும் அந்தப் புதிய உலகை இன்றைய வார்த்தைகள் விபரிக்கின்றன. (எசாயா 65:19ஆ-25)

இந்தப் புதிய உலகம் உருவாகும் அடிப்படை கடவுளின் மன்னிப்பே. **"முந்தியவை நினைத்துப் பார்க்கப்படுவதில்லை, மனதில் எழுவது மில்லை"** என்ற கடவுளின் வார்த்தைகள் எத்தனை மகத்துவமானவை! அது கடவுள் தரும் மன்னிப்பு, கடவுள் தரும் புதிய தருணம், கடவுள் தரும் புதிய வாழ்வு என்பதை சுட்டிக்காட்டுகின்றது.

கடவுளின் புதிய படைப்பு ஆரம்பிப்பது நம்மோடு. நாம் புதிய படை ப்பாக மாறும்போதுதான் உலகம் புதிய படைப்பாக மாறும்.

மனிதரின் பழைய சுபாவம் புதிய சுபாவமாக மாறவேண்டும். மனி தரின் பாவ சுபாவம் நீதி சுபாவமாக மாறவேண்டும்.

உடைந்துபோன கடிகாரத்தால் தன்னைத்தானே திருத்திக்கொள்ள முடியாது. கடிகாரத்தை உருவாக்கியவனே கடிகாரத்தைத் திருத்த வேண்டும். அந்த நம்பிக்கையில் தான் இந்த உலகம் என்ற கடிகாரம் ஓடிக்கொண்டிருக்கின்றது.

**பிரார்த்தனை : ஆண்டவரே! நான் ஓர் ஓட்டைக்கடிகாரம். என் பழைய பாவங்களை நினையாதிரும். என்னை மன்னியும். என்னைப் புதிதாக உருவாக்கும். உமது புதிய செயலை என்னில் செய்யும். எனக்கு புதுவாழ்வு கொண்டு தாரும். ஆமென்.**

ooo



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மார்ச் - 12**

எசேக் 47:1 – 9, 12
யோவா 5:1 –16

# குணப்பட விரும்புகிறாயா?

இன்றைய நற்செய்தியில் இயேசு படுக்கையில் இருந்தவனைக் கேட்க்கும் கேள்வி அவர் நம்மைப் பார்த்துக்கேட்க்கும் கேள்வி "நீ குணமடைய விரும்புகிறாயா"

எங்களில் இரும்பாய் இறுகிப்போன பழக்க வழக்கங்கள், தீய குணங்கள், இயல்பாகிவிட்ட பாவங்கள் இவற்றிலிருந்து சுகப்பட, விடு தலையடைய நாம் விரும்புகின்றோமா? இந்தத் தவக்காலம் நாம் இது சம்பந்தமாய் ஆன்மசோதனை மேற்கொள்ளத் தகுந்த காலம்.

நாம் பாவங்களிலிருந்து குணமடைய விரும்பாமைக்கு என்ன காரணங்கள் என்று ஆராய்வது நல்லது.

நமது பாவங்களை நாமே உணராதிருக்கும் குருட்டாட்டம் ஒரு கார ணம். இது கண் பார்வையில்லா குருட்டாட்டம் அல்ல. கண்ணிருந்தும் பார்க்க முடியாத, உணரமுடியாத குருட்டாட்டம் (யோவா 9:39-41)

பிறர் எங்கள் குற்றங்களை எமக்கு சுட்டிக்காட்டும் போது நாம் அக குணங்களை உணர்ந்து எம்மை திருத்திக்கொள்ள, கடவுளிடம் சுகம் வேண்ட நாம் தயாரா? அல்லது எப்போதும் எங்களில் குறை இல்லை மற்றவர்களில்தான் என்று நியாயப்படுத்துகின்றோமா? மற்றவர்கள் எங்கள காயங்களைச் சுட்டிக்காட்ட முடியாமல் 'கவசம் அணிந்துகொள்ளும்' மனப்பான்மையே இது. இந்த மனப்பான்மைக்கு 'சுயநீதி' என்பது மறுபெயர். நோயை ஒப்புக்கொள்ளாதவனுக்கு சுகம் எங்கே கிடைக் கப்போகிறது? (மாற்கு2:17) 'பழைய பாவத்தாசை' என்று ஒன்றிருக்கிறது என்பதை நாம் உணரவேண்டும். 'ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது' 38 வருடங்களாக நீண்டகாலம் ஊறிப்போன, பழகிப்போன பாவத்திலிருந்து, நோயிலிருந்து விடுபட எங்களுக்கு ஆசை இல்லா மல்போனால் அது ஆச்சரியப்படுவதற்கொன்றல்ல.

"பழைய பாவத்தாசை வருகுதோ? பசாசின்மேலே பட்சமுனக்குத் திரும்ப வருகுதோ?" என்ற கவிஞனின் வரிகளை நாம் ஆழ்ந்து சிந் திக்க வேண்டும். நாம் குணப்பட வேண்டுமானால் குணப்படுவதற்குத் தேவை குணப்பட விரும்பும் மனது. பாவங்களுக்காய் மனம் கசியும் மனது. தன் பாவம் உணரும் மனது, பாவத்தை அறிக்கை செய்யும் மனது. பாவத்தை அறிக்கை செய்யும் தாழ்மையான மனது. பாவத்தை உணர்ந்து கண்ணீர் விட்டுக்கதறும் மனது. தன் பாவத்தை விட்டுவிட ஏங்கும் மனது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னுமோர் பாடல் வரிகள் என் நினைவிற்கு வருகிறது:

"தாவீதரசனைப்போல், - தன்னைத்
தாழ்த்தும் மனாசேயைப் போல்,
பாவி மனுஷியைப்போல் - மனம்
பதைத்த பேதுருபோல்'
தேவனுக்கேற்காத தீமை செய்தேனென்று
கூவிப் புலம்பு நல் ஆவியின் சொற்படி"

*(தி.பா 51/2கு.ஏ.33:9-13/லூக் 7:36-50/லூக் 22:54-61)*

குணப்பட்ட தாவீது போல், மனாசே போல், பாவியான பெண் போல், பேதுரு போல், 38 வருடங்கள் படுக்கையில் கிடந்தவனைப் போல் நாம் குணப்பட விரும்புகிறோமா?

**பிரார்த்தனை : ஆண்டவரே! கல்லான என் மனதை உடையும், சதையான மனதை எனக்குத் தாரும். எனது நோயிலிருந்து எனக்கு விடுதலை தாரும். ஆண்டவரே நான் குணமடைய வேண்டும். ஆமென்.**

○○○

**மார்ச் - 13**

எசாயா 49:8 – 15
யோவா 5:17 – 30

# சாவும் வாழ்வும்

இறந்தவர்களை உயிரோடு எழும்புவது கடவுளின் செயல். ஆண்டவர் இயேசு இறந்தோருக்கு வாழ்வளிப்பவர். இது நம்பிக்கையின் செய்தி.

எமக்குள் ஏற்கனவே இறந்துவிட்டவை என்ன? ஆன்மாவின் இறப்பு என்பதை உவில்லியம் பார்க்ளே பின்வருமாறு வர்ணிக்கின்றார்.

அ) முயற்சி செய்யாமலிருப்பது என்பது ஒருவகை இறப்பு.

அனைத்துத் தவறுகளும் அழிக்கப்பட முடியாதவை. அனைத்து நற்பண்புகளும் அடையமுயாதவை என்று நாம் நினைத்தால், அந்த நினைப்பு ஒருவகை இறப்பு.

ஆ) உணர்வை இழப்பது என்பது ஒருவகை இறப்பு.

பாவத்தை உணரமுடியாமல் இருப்பது, பிறர் துன்பத்தை உணர முடியாமல் இருப்பது என்பது ஒருவகை இறப்பு. துன்பத்தைப் பார்த்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துக்கப்பட முடியாவிட்டால், தீமையைப் பார்த்துக் கோபப்பட முடியா விட்டால் அது இறப்பு. அத்தகைய மனது செத்துப்போன மனது.

**இ) சிந்திப்பதை நிறுத்துதல் என்பது ஒருவகை இறப்பு**

எமது சிந்தனை வளராவிட்டால், புதுமையை ஏற்காவிட்டால், புதியதை ஏற்கமுடியாத மூடிய மனமாகிவிட்டால் அது இறப்பு. புதிய உண்மை, புதிய வழிகள், புதிய எண்ணம் இவற்றைக் கற்கும் ஆசை என்று எம்மைவிட்டுப் போகின்றதோ அன்று அது எங்கள் ஆன்மாவின் இறப்பு.

**ஈ) மனந்திரும்ப மறுப்பது என்பது இறப்பு**

கூச்சமில்லாமல், அச்சமில்லாமல், அமைதியாக எவரால் பாவம் செய்ய முடிகின்றதோ அவரின் ஆன்மாவின் மரணம் அது. இப்படி எனக்குள் இறந்துபோனவை மீண்டும் உயிர்பெற முடியுமா?

"இறைமகனின் குரலை இறந்தோர் கேட்பர். அதைக் கேட்போர் வாழ்வர்" - இது நம்பிக்கையின் செய்தி அல்லவா? இது நற்செய்தி அல்லவா? இறைமகனின் வார்த்தை எமக்குள் இறந்ததை உயிர்ப்பிக்கும்.

"கல்லறைகளில் உள்ளோர் அனைவரும் அவரது குரலைக் கேட்டு வெளியே வருவர்"

இறந்துபோன லாசரு இயேசுவின் குரலைக் கேட்டு கல்லறையினின்று வெளியே வரவில்லையா?

நண்பனே, நண்பியே உனது கல்லறைகள் என்ன? அந்தக் கல்லறைகள் மீது ஆண்டவரின் குரலை ஒலிக்கவிடும். உனது சாவு வாழ்வாக மாறும்.

**பிரார்த்தனை : ஆண்டவரே, எனக்குள் இறந்துபோனதை உயிர்ப்பியும், உமது வார்த்தை ஒன்றிற்கே அந்த வல்லமை உண்டு என்று நான நம்புகிறேன். ஆண்டவரே வாழ்வு தரும் அந்த வார்த்தையை நீர் பேசும். எனது இறப்பிலும் உமது குரலைக் கேட்க நான் காத்திருக்கின்றேன். ஆமென்.**

OOO



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மார்ச் - 14**

விடு.பய 32:7 – 14
யோவா 5:31 – 47

# வணங்காக் கழுத்தும் இளகும் மனதும்

**"இம்மக்களை எனக்குத் தெரியும். வணங்காக் கழுத்துள்ள மக்கள் அவர்கள்"**

வணங்காக் கழுத்துள்ள மக்களைச் சந்தித்திருக்கிறீர்களா? திருந்த மறுக்கும், செய்த தவறையே மீண்டும் செய்யும் மாந்தர் தான் வணங் காக் கழுத்துள்ள மக்கள்.

உங்கள் கணவனோ மனைவியோ, சகோதரனோ, சகோதரியோ, மகனோ, மகளோ, நண்பனோ, நண்பியோ வணங்காக் கழுத்து நபராக இருந்துகொண்டு உங்கள் கழுத்தை அறுக்கலாம். அப்படிப்பட்டவர் களைப் பார்த்து எவருக்குத் தான் கோபம் வராது? வெறுப்பு வராது? அந்தக் கடவுளுக்கே கோபம் கொப்பளித்துக்கொண்டு வருகிறது. 'என்னை விடு, நான் அவர்களை அழித்தொழிக்கப் போகிறேன்' என்கிறார் பொறுமையிழந்த கடவுள்.

வணங்காக் கழுத்துள்ளவர்கள் மீது நெருப்பைக் கக்கவேண்டும் என்று உங்கள் மனது பொங்குவதில்லையா? கடவுளே ஏன் இன்னும் பார்த்துக் கொண்டிருக்கிறீர்? அவர்களை அழித்துவிடும்; அவர்கள் மீது அழிவைக் கொண்டுவாரும்' என்று உங்கள் மனது பேசியது கிடையாதா? வணங் காக் கழுத்துள்ளவர்களோடு வாழ்வது கடினம். அவர்கள் போக்கைப் பொறுத்துக்கொள்வது அதனிலும் கடினம்.

**"மோசே தம் கடவுளாகிய ஆண்டவருக்கு முன் அவர்களுக்காக மன்றாடினார்"**

வணங்காக் கழுத்துள்ளவர்களுக்காகவும் உங்களால் மனறாட முடி யுமா? 'உமது மக்களுக்குத் தீங்கிழைக்கும் எண்ணத்தை மாற்றிக்கொள் ளும்' என்று கடவுளோடு வாதாடும் துணிவு உங்களுக்கு வருமா? நீர் கொடுத்த வாக்கு; இதுவரை இந்த மக்களுக்காக நீர் செய்த செயல்கள் எல்லாம் அவர்களை அழித்தால் வீணாகி விடுமே! உமது செயலே உமக்கு முரண்பட்டதாய் அமையும் போது மற்றவர்கள் நகைக்க மாட டார்களா? இவையெல்லாம் எப்படிப்பட்ட விவேகமான வாதங்கள்?! கடவுளையே வாயடைக்கச் செய்யும் விவாதங்கள் இல்லையா இவை?!

பிறருக்காய் அதுவும் வணங்காக் கழுத்துள்ளவர்களுக்காய் மன்றா டல், இரங்கல், பரிந்துபேசுதல், வாதிடல், போராடல் இதெல்லாம் எமது பிரார்த்தனையில் அது பலமாக முடியுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆண்டவரும் தம் எண்ணத்தை மாற்றிக்கொண்டு தம் மக்களுக்குச் செய்யப்போவதாக அறிவித்த தீங்கைச் செய்யாது விட்டுவிட்டார்".

மோசேயின் வேண்டலில் கடவுளின் மனதுகூட இளகிவிட்டது, உருகி விட்டது, கரைந்துவிட்டது கடவுளின் எண்ணமே மாறிவிட்டது. இது கடவுளின் பலவீனமா? பிரார்த்தனையின் வல்லமையா?

பிரார்த்தனையின் வல்லமையால் வணங்காக் கழுத்தும் வளைந்து விடும்; இளகா மனமும் இளகிவிடும்.

எங்கள் பாவங்களுக்காகவும், பிறரின் பாவங்களுக்காகவும் மன்றாடும் காலம் இத்தவக்காலம்.

மண்டியிடுவோம், மன்றாடுவோடும்!

**பிரார்த்தனை : ஆண்டவரே, பிறரை வணங்காக் கழுத்துள்ளவர்கள் என்று எடைபோடும் நானும் வணங்காக் கழுத்துள்ளவனே (ளே) என்று உணரச் செய்யும். மோசேயின் மனதை எனக்குத் தாரும், உமது இளகும் மனமொன்றே எனக்குக் கதி. ஆமென்.**

OOO

**மார்ச் - 15**

**சாலமோனின் ஞானம் 2:11 – 21**
**யோவா 7:10, 25 – 30**

# "அந்த நேரம்" யாருடையது?

கடவுளே கண்ணெதிரே வந்து நின்றபோதும் அவரைக் கருவிலேற்றிய கண்ணற்ற கயவர்கள் மனிதர்கள் தான்.

அதிகாரம் இயேசுவைக் கொல்ல நினைத்தது. நீதியைக் குழிதோண்டிப் புதைக்க நினைத்தது. அதிகாரம் அச்சுறுத்துமேயன்றி அச்சுறுத்தப்பட விரும்புவதில்லை. ஆனால் அது அச்சுறுத்தப்படும் போது அதிகாரம் கண்மூடித்தனமாய், வெறித்தனமாய், மூர்க்கமாய் நடந்துகொள்ளும்.

சாலமோனின் ஞானம் இன்று கூறும் பகுதியில் அச்சுறுத்தப்படும் அதிகாரம் எப்படி நடந்துகொள்ளும் என்றபடம் மிகத் தெளிவாக எமக்குக் காட்டப்படுகின்றது. இயேசுவை அச்சுறுத்திய அதிகாரத்தை இப்பகுதியில் நாம் முன்கூட்டியே சந்திக்கின்றோம்.

வலிமை சட்டத்தை மதிப்பதில்லை. தானே சட்டம் என்று நினைக்கிறது. "நமது வலிமையே நமக்கு நீதி, நமக்குச் சட்டம்" சட்டத்தை அதிகாரம் தன் கையில் எடுத்துக்கொள்ளும்போது அது நீதிக்குத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரியாகின்றது. சிலுவைகளை உருவாக்கும் அதிகாரம் இதுதான்.

நீதிமன்றங்களின் குரலையோ, நடத்தையையோ, எண்ணங்களையோ, கண்டனங்களையோ அந்த அதிகாரம் விரும்புவதில்லை. நீதிமான்கள் அந்த அதிகாரம் முன்பு நடமாடினாலே அது அந்த அதிகாரத்திற்குக் கசக்கிறது. **"நீதிமன்றங்களின் நடத்தையே எம் எண்ணங்களைக் கண்டிக் கிறது. அவர்களைப் பார்ப்பதே எமக்குத் துயரமாய் உள்ளது"**

நீதியைத் தொல்லை என்று நினைப்பது, நீதியைத் தொலைக்க நினைப்பது என்பது அதிகாரத்தின் கண்மூடித்தனம், கபோதித்தனம், குருட்டுத்தனம். **"அவர்களின் (அதிகாரத்தில் உள்ளோரின்) தீயொழுக் கமே அவர்களைப் பார்வையற்றோர் ஆக்கிவிட்டது."**

வசைமொழி, துன்புறுத்தல், இழிவான சாவிற்குத் தீர்ப்பிடல் இதெல் லாம் அதிகாரம் தன்னைப் பாதுகாத்துக்கொள்ள உபயோகிக்கும் ஆயு தங்கள். அந்த ஆயுதங்களின் உபயோகிப்பு அதிகாரத்திற்குக் கைவந்த கலை. **"வசைமொழி கூறியும் துன்புறுத்தியும் நீதிமான்களுக்கு சோதனை தருவோம். இழிவான சாவுக்கு அவர்களைத் தீர்ப்பிடுவோம்"**

இன்றைய நற்செய்தியை வாசிக்கும்போது இயேசு சிங்கத்தின் குகைக்குள் நுழையும் உணர்வு நமக்கேற்படுகிறது. இயேசுவைச் சூழும் அநீதி இருள், துன்ப இருள் எமது நெஞ்சில் கவ்விக்கொள்கின்றது.

**"இயேசுவைப் பிடிக்க முயன்றார்கள். எனினும் அவருடைய நேரம் இன்னும் வராததால் யாரும் அவரைத் தொடவில்லை"** என்கிறார் யோவான் நற்செய்தியாளர்.

நீதிமன்றங்களின் கதியோ, முடிவோ அதிகாரத்தை ஆட்டிப் படைப்ப வர்களின் கையில் இல்லை. அது ஆண்டவன் கையில், 'அந்த நேரம்' வரும்போது அது நீதிமான்களின் முடிவு, அதிகாரத்தின் வெற்றி என்று எமக்குப் புலப்படலாம். ஆனால் உண்மையில் அந்தநேரம்" அதிகாரத் தின் சாவுமணி.

அதிகாரம் சாவைத்தரும் கருவி சிலுவை. ஆனால் சிலுவை அதிகா ரத்திற்கு சாவு கொண்டுதரும் கடவுளின் கருவி.

வரலாறு தரும் பாடமும் இதுதான். வரலாறு படிக்கவேண்டிய பாடமும் இதுதான்.

**பிரார்த்தனை : ஆண்டவரே, அதிகார வெறியின் ஆபத்தை எனக்கு உணர்த்தும். நீதியையும், நீதிமான்களையும் நான் சிலுவைக்கு அனுப்பிய சந்தர்ப்பங்களை எனக்கு உணர்த்தும். அதிகாரத்தில் இருப்போர் அனை வருக்கும் நான் மன்றாடுகின்றேன். அவர்களையும் என்னையும் அதிகாரக் குருட்டாட்டத்தில் இருந்து காப்பாற்றியருளும். ஆமென்.**

OOO



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மார்ச் - 16**

எரே 11:18 – 20
யோவா 7:40 – 53

# அச்சுறுத்தலுக்கு அடிபணிவதா?

எரேமியா இயேசுவின் மாதிரி முன்னுருவம். எரேமியா மக்களை மனந்திரும்ப அழைக்கவென்று அனுப்பப்பட்டவர். ஆனால் அவர நிராக ரிக்கப்பட்டார். அவரின் உயிருக்கு உலைவைக்க மக்கள் வகை தேடி னார்கள். எரேமியாவின் பணி என்பதை நாம் எரேமியா 20:1-10 வரை உள்ள வசனங்கள் எமக்கு நன்குணர்த்தும்.

எரேமியா 11:19 இல் **"வெட்டுவதற்குக் கொண்டு செல்லப்படும் சாந்தமான செம்மறி போல் இருந்தேன்"** என்ற வரிகள் அடிக்கப்படும் பலியாடாய் தீர்ப்பிடுவோர் முன்பு இழுத்துச் செல்லப்பட்ட இயேசுவை யன்றோ எம் கண்கள் முன்பு கொண்டுவருகின்றது? துன்பம் வரும் என்று தெரிந்தும் அதற்குத் துணிவோடு முகம் கொடுத்தவர்கள் தான் எரேமியாவும், இயேசுவும்.

இன்றைய நற்செய்திப் பகுதி இயேசுவிற்கு வரவிருக்கும் ஆபத் தைச் சுட்டிக்காட்டி நிற்கிறது. எதிர்ப்பின் மத்தியில் எரேமியாவும், இயே சுவும் **'என் வழக்கை உம்மிடம் ஒப்படைத்துள்ளேன்'** என்று கடவுளிடம் சரணாகதியடைந்து பயமின்றி எதிர்ப்பிற்கும், வரப்போகும் உயிர் ஆபத்திற்கும் முகம் கொடுத்தவர்கள்.

இன்று பயமுறுத்தல்களினாலும், அச்சுறுத்தல்களினாலும், ஆட்கடத் தல்களினாலும், சித்திரவதைகளினாலும் சத்தியம் குழிதோண்டிப் புதைக் கப்பட்டிருக்கின்றது. சமுதாயம் அச்சத்தால், பீதியால் வாய்திறவாத ஊமையாகி நடக்கும் அநீதத்தைப் பார்வையாளராகப் பார்த்துக்கொண் டிருக்கிறது. எரேமியாவும் இயேசுவும் இதற்கு எதிர்மாறானவர்கள். அவர்களின் துணிவு அச்சுறுத்தல் தீயால் அணைந்துவிட முடியாத துணிவு.

இன்றைய எமது நாட்டின் பயங்கரச் சூழலில் எமது சாட்சி என்ன? எமது சீடத்துவம் என்ன? எங்கள் நடுவில் எரேமியாக்களும் இயேசுக் களும் நடமாடுவார்களா? இன்றைய நற்செய்திப் பகுதியில் நாம மற்று மொரு உருவத்தை சந்திக்கின்றோம். அந்த உருவம்தான் நிக்கொதேமு.

இயேசுவைக் கொல்வதற்குத் தீர்மானம் எடுக்கும் சனகரீம் அவை யில் ஓர் அங்கத்தினர். இந்த நிக்கொதேமு, இயேசுவைக் காப்பாற்றும் எண்ணம் இவனுக்கு இருந்தது. இருந்தபோதும் தனது எண்ணத்தை வெளிப்படையாகத் தெரிவிக்காமல் மறைமுகமாகத் தான் இவன் தெரிவித்தான். நிக்கொதேமுவின் துணிவு அச்சமில்லாத துணிவல்ல,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சத்துடனான துணிவு.

'ஒருவரது வாக்குமூலத்தைக் கேளாது, அவர் என்ன செய்தாரென்று அறியாது ஒருவருக்குத் தீர்ப்பளிப்பது நமது சட்டப்படி முறையாகுமா? என்று நிக்கொதேமு கேள்வி எழுப்புகின்றான். இயேசுவைக் குறிப்பிடாது, அவர் சார்பாக வாதிடாது, சட்ட முறைகளைப் பற்றி மட்டுமே நிக்கொதேமு கேள்வி கேட்கின்றான். ஆனால் 'நீயும் கலிலேயக் கலகக்காரனில் ஒருவனோ?' என்று வார்த்தைகளால் பரிசேயர் நிக்கொதேமுவை மடக்கியபோது அவன் மௌனியானான். அதற்குப் பின் அவன் வாய்திறக்கவே இல்லை.

அச்சுறுத்தும் சூழ்நிலைகள் எம்மை எரேமியா இயேசுபோல் துணிவுள்ளவர்கள் ஆக்கலாம் அல்லது நிக்கொதேமுவைப் போல் அரைகுறைத துணிவுள்ளவர்கள் ஆக்கலாம், அல்லது வாய் திறவாத கோழையாக்கலாம்.

நான் யார்?

**பிரார்த்தனை : ஆண்டவரே, எங்கள் நாட்டின் இன்றைய நிலைமை உமக்குத் தெரியும். நீதிக்காய் குரல் கொடுக்கும் துணிவை எங்களுக்குத் தாரும். எங்கள் துணிவின்மையை, எங்கள் மௌத்தை மன்னிக்கவும் துணிவுள்ளவர்களாய் எம்மை மாற்றும். ஆமென்.**

OOO

**மார்ச் - 17**

எசா 43:16 – 23
பிலிப் 3:8–14
யோவா 8:1 – 11

# மௌனம் பேசுமா?

மௌனத்தில் தான் மனச்சாட்சி நம்மோடு பேசுகிறது. மௌனத்தில் தான் மனச்சாட்சி நம்முடன் போராடுகிறது. வார்த்தைக்கில்லாத வலிமை மௌத்திற்கு இருக்கிறது. யோவான் நற்செய்தியில் வரும் சம்பவத்திலே மூன்று மௌனங்கள் எமது கருத்தை ஈர்க்கின்றன. அந்த மௌனங்களைப் பற்றிச் சற்று சிந்தித்துப் பார்ப்போம்.

## பெண்ணின் மௌனம்

விபசாரத்தில் பிடிபட்ட பெண் கடைசிவரை அந்த சம்பத்தில் மௌனம சாதிக்கின்றாள். அவளுடைய அந்த மௌனத்தின் அர்த்தம் என்ன? அந்த மௌனத்தின் போது அவளுக்குள் ஓடிய எண்ணங்கள் என்ன?

அவளுடைய மௌனம் அவமானத்தால் ஏற்பட்ட மௌனமா? அச்சத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தால் ஏற்பட்ட மௌனமா? குற்ற உணர்வால் ஏற்பட்ட மௌனமா? அல்லது இது எல்லாமே கலந்த மௌனமா?

அந்தரங்கத்திலே பாவம் நமக்கு இனிக்கிறது. அந்தப் பாவம் பகிரங்கமாக்கப்படும் போது அது எமக்கு கசக்கிறது. வேதனையின் அநுபவமாகிவிடுகிறது. ஏற்படும் அவமானம் எங்களுக்குள்ளே உண்மையான பாவ உணர்வைக் கொண்டுவரலாம். மரத்துப்போன எங்கள் மனச்சாட்சி உயிர்பெறலாம். அந்தப் பெண் அந்த மௌனத்தின் போது தனது பாவத்தை உணர்ந்து கொண்டாளா?

அவளுடைய மௌனம் தன்மீது குற்றம் சுமத்திய பரிசேயரின் போலித்தன்மை பற்றி மனதுக்குள் நகைக்கின்ற மௌனமா? குற்ற மிழைத்த ஆணை நிரபராதியாக்கி தன்னை மட்டும் பலிக்கடாவாக்கும் ஆணுலகின் அநீதிச் செயலை கேள்விக்குட்படுத்தும் மௌனமா அவ ளின் அந்த மௌனம்?

சட்டத்தின்படி அவள் கல்லெறிந்து கொல்லப்பட வேண்டியவள். அவளின் மௌனம் அவளின் தண்டனையை எதிர்ப்பார்த்துக் காத்தி ருக்கும் மௌனமா? அவளுடைய மனச்சாட்சியே அவளை மரணத்திற் கென்று அந்த மௌனத்தின் போது கண்டனம் செய்துவிட்ட மௌனமா அந்த மௌனம்?

தன்னை மரணத்திற்கு இலக்காக்குவது மட்டுமல்ல. தன்னைப் பாவித்து இயேசுவை அவமானத்திற்கும் கண்டனத்திற்கும் இலக்காக்கப் பார்க்கும் பரிசேயரின் கபடநாடகத்தைப் பார்த்து வேதனைப் படும் மௌனமா அந்தப் பெண்ணின் மௌனம்?

அந்த மௌனம் இயேசுவிடம் எதிர்பாராத ஒன்றுதான் மன்னிப்பு. புதுவாழ்விற்கான இன்னுமொரு தருணம் பாவத்தை விட்டுவிடத் தனக்கு அழைப்பு விடுக்கும் பேரன்பு.

**இயேசுவின் மௌனம்**

பெண்ணின் மீது குற்றஞ்சுமத்துபவர்கள் தன்மீது குற்றஞ் சுமத்த வலை வீசியபோது இயேசு மௌத்தைக் கடைப்பிடித்தார். குற்றஞ் சுமத்துபவர்களின் உள்ளுணர்வைக் கேள்வி கேட்கும் மௌனமா அந்த மௌனம்? எங்கள் உள்ளுணர்வுகளை கேள்விகேட்கும், சீர்தூக்கிப் பார்க்கும் மனச்சாட்சியின் மௌனம் அவசியம் எங்களுக்குத் தேவை.

இயேசு மௌனம் சாதித்தது மட்டுமல்ல மௌனச் செயற்பாட்டொன் றிலும் ஈடுபடுகின்றார். தனது விரல்களினால் தரையில் எழுதுகின்றார். பெண் மீது விரலை நீட்டுபவர்கள் தங்கள் நெஞ்சு மீது அந்த விரலை நீட்டும்படியாகச் செய்யும் மௌனச் செயல் அல்லவா அது?! நாம் அதே பாவம் எங்கள் நெஞ்சுக்குள் ஒளிந்திருப்பதை நாம் உணரவேண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டும். மற்றவர் தான் பாவி நான் இல்லை என்று தீர்ப்பிட எங்களுக்கு எந்த அருகதையுமில்லை என்பதை நாம் உணரவேண்டும். இயேசுவின் மௌனம் எங்கள் ஆன்மாவைச் சோதனைபோடும் மௌனம்.

### குற்றஞ்சுமத்தியோரின் மௌனம்

'உங்களில் குற்றமில்லாதவர் முதற்கல்லை எறியட்டும்' என்ற இயேசுவின் வார்த்தையைக் கேட்ட பரிசேயர் மௌனம் சாதித்தார்கள். ஒவ்வொருவராய்க் கல்லைக் கீழே போட்டுவிட்டுக் கலைந்துபோனார்கள்.

நம்மை நாமே கண்டனம் செய்யும் மௌனமே மனச் சுத்தியான மௌனம். பிறரைக் கண்டனம் செய்யாத மௌனமே உத்தமமான மௌனம்.

### முடிவு

இந்த சம்பவத்தில் வரும் மூன்று கதாபாத்திரங்களின் மௌனத்தைப் பேசவிட்டோம். எங்கள் மனசாட்சியை எம்முடன் மௌனத்தில் பேசவிடுவோம். பரியேசரையும் அந்தப் பெண்ணையும் பார்த்து இயேசு சொன்ன வார்த்தைகள் அந்த மௌனத்தில் எங்களோடு பேசட்டும்.

**பிரார்த்தனை : ஆண்டவரே, மௌனத்தில் என் மனச்சாட்சியை தட்டியெழுப்பும். என்னோடு பேசும். உமது அன்பின் ஆழத்தை எனக்குணர்த்தும். ஆமென்.**

OOO

**மார்ச் - 18**

**சூசன்னா (பொது விவிலியம் – இணைத் திருமுறை நூல்கள் பக்கம் 207)**

**யோவா 8:12–20**

# ஆவி மனதில் தூண்டப்பட்டால்...

இன்றைய நற்செய்திப் பகுதியில் சான்று பற்றிய சர்ச்சை இடம்பெறுகிறது. "இவருடைய சான்று செல்லும் என்று உங்கள் சட்டத்தில் எழுதியுள்ளது அல்லவா? என்னைப் பற்றி நானும் சான்று பகர்கிறேன்; என்னை அனுப்பிய தந்தையும் சான்று பகர்கிறார்" என்று இயேசு சொல்வதை அவதானிக்கின்றோம். இயேசுவின் தம்மைப் பற்றிய சாட்சியத்தை ஏற்றுக்கொள்ளாதவர்கள் இயேசுவிற்கு மரணதண்டனை விதிக்கச் சாட்சியங்களைத் தேடினார்கள். "தலைமைக் குருக்களும், தலைமைச் சங்கத்தார் அனைவரும் இயேசுவுக்கு மரணதண்டனை விதிக்க அவருக்கு எதிராக பொய்ச்சாட்டி தேடினர். பல பொய்ச் சாட்சிகள் முன்வந்தும் ஏற்ற சாட்சி கிடைக்கவில்லை. இறுதியாக இருவர் முன்வந்தனர்" என்று மத்தேயு விபரிக்கின்றார் (மத் 26:59-60).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய் வழக்கு, பொய்ச் சாட்சியங்கள், பொய்ச் சோடனை, அநியாயத் தீர்ப்பு இதெல்லாம் இன்றும் நடக்கும் கதைதான். இதனை எதிர்க்க வேண்டிய மக்களும் கண்மூடித்தனமாய் தவறாக வழிநடத்தப்படுவதும், அநீதிக்கு தலையசைப்பதும், அச்சுறுத்தலினால் மௌனிகளதும் இன்றும் தொடரும் கதை. இப்படிப்பட்ட ஒரு நிலைமையைத்தான் சூசன்னாவின் கதையும் எமக்கு எடுத்துக்காட்டுகின்றது. காமுகர் இருவரினால் சூசன்னா அநியாயமாகப் பழிசுமத்தப்படுகின்றாள். மக்கள் கூட்டம் சூசன்னாவுக்கு சாவுக்குத் தீர்ப்பிட்டது. (சூசன்னா 28-41)

ஆனால் அநீதியை அம்பலப்படுத்தி மக்களின் கண்களைத் திறக்கச் செய்தான் ஓர் தீரம்மிக்க இளைஞன். அவன்தான் தானியேல். அநீதிக்கெதிராக அவன் உள்ளத்தில் தூய ஆவியைக் கடவுள் தூண்டிவிடுகின்றார். அநீதியை எதிர்த்துத் தனிக் குரலாய், துணிச்சல் மிக்க குரலாய், உரத்த குரலாய் ஒலிக்கிறது தானியேலின் குரல் (சூசன்னா 45-49) தானியேலின் அநீதிக்கெதிரான தனிக்குரல் அநீதிக்கெதிராக மக்கள் குரல் எழச்செய்தது. சூழ்ச்சிக்காரர்களின் முகமூடி கிழிந்தது. அவர்கள் செய்ய நினைத்த வினையே அவர்களுக்கு எதிரான வினையாக மாறிற்று. மக்களின் தீர்ப்பு மகேசனின் தீர்ப்பாக மாறியது. (சூசன்னா 60-62)

"தீயநாட்டம் அவர்களைக் கவர்ந்து தன் வயப்படுத்துகிறது தீய நாட்டம் கருக்கொண்டு பாவத்தைப் பெற்றெடுக்கிறது. பாவம் முழு வளர்ச்சியடைந்து சாவை விளைவிக்கிறது." என்ற யாக்கோபின் வார்த்தைகளைச் சித்திரம் போல் சித்தரிக்கிறது சூசன்னா பற்றி கதைகள் *(யாக்.01:14-15)*.

தானியேலை நாம் மதித்துப் போற்றுவது போல் சூசன்னாவையும் நாம் மதித்துப் போற்றத் தவறக்கூடாது. சூசன்னா தீமைக்கு தலை வணங்கிப்போகும் ஒரு பெண்ணல்ல. அநீதியை எதிர்ப்பதால் வரும் விளைவுகளுக்கு முகம் கொடுக்க அஞ்சிய பெண்ணுமல்ல. '**ஆண்டவர் முன்னிலையில் பாவம் செய்வதைவிட உங்களிடம் மாட்டிக்கொள்வதே மேல்**' என்று சொன்ன சூசன்னாவின் துணிச்சலை நாம் பாராட்ட வேண்டும். எத்தனையோ பெண்கள் இந்த அடக்குமுறைக்கும் அநியாயத்திற்கும் அச்சத்தால்' முடங்கிப்போனவர்கள். அந்த அநீதி தொடர்வதற்குக் காரணமானவர்கள். ஆனால் சூசன்னாவிடம் அது பலிக்கவில்லை. அவள் வாயடைத்து நிற்கவில்லை. அநீதிக்கெதிராய், அநீதி இழைத்தவர்களுக்கு எதிராய் கூச்சல்போட அவள் தயங்கவில்லை *(24,57)*. சூசன்னாவின இந்தத்தைரியம் எமக்கு வரவேண்டும். இன்றைய எங்கள் நாட்டுச் சூழலில் சூசன்னாக்களும் தானியேல்களும் மிகவும் தேவைப்படுகின்றார்கள்.

**பிரார்த்தனை : ஆண்டவரே, சூசன்னாவிலும் தானியேலிலும் நீர் உமது தூய ஆவியைத் தூண்டிவிட்டதுபோல் எங்கள் மனதிலும் உமது ஆவியைத தூண்டிவிடும். ஆமென்.**

○○○



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மார்ச் - 19**

உரோ 4:13, 16-18, 22
மத் 1:16, 18-21, 24அ

# கதி ஈயும் நாமம்

**ஆபிரகாமும் யோசேப்பும்**

ஆபிரகாமும் இயேசுவின் வளர்ப்புத் தந்தையான யோசேப்பும் நடக்க முடியாதது நடக்கும் என்று நம்பிக்கை வைத்தவர்கள். பிள்ளை பெறும் வயதைத் தாண்டிய சாராள் பிள்ளை பெறுவாள் என்பதை ஆபிரகாம் நம்பினார். மரியாளிடம் பிறக்க இருப்பது பரிசுத்த ஆவியினால் உண்டானது, பிறக்கும் குழந்தை கடவுளின் மகன் என்பதை யோசேப்பு நம்பினார்.

ஆபிரகாம் கடவுளால் சோதனைக்குட்படுத்தப்பட்டவர். யோசேப்பு அவ்வாறே சோதனைக்குட்படுத்தப்படுகின்றார். இருவரும் கடவுள் செயலுக்கு கீழ்ப்படிந்ததால் தமது விசுவாசத்தை நிருபித்தவர்கள்.

'இறந்தவர்களை வாழ்விப்பவரும், இல்லாததைத் தம் வார்த்தையால் இருக்கச் செய்பவருமாகிய கடவுள் மீது' நம்பிக்கை கொண்டவர்கள் தான் ஆபிரகாமும் யோசேப்பும்

எமது விசுவாச வாழ்விற்கு ஆதர்சமான நபர்களே ஆபிரகாமும் யோசேப்பும்.

**யோசேப்பு நீதிமான்**

யோசேப்பு நேர்மையாளர் என்று பொதுவிவிலியம் கூறுகிறது. 'அவர்கள் கூடி வாழுமுன் மரியாள் கருவுற்றிருந்தது தெரியவந்தது' என்ற வார்த்தைகள் ஒரு பூகம்பம் வெடித்தது போன்ற வார்த்தைகள். எவருக்குமே வந்திருக்கக்கூடாத இக்கட்டான நெருக்கடியான, அவமான மான, சமுதாயத்திற்கு முகம் கொடுக்க முடியாத ஒரு நிலை.

இப்படிப்பட்ட நெருக்கடி நிலையில் எவருமே தன்னிலை இழந்து விடக்கூடும். சுயநலமாய் நடந்துகொள்ளக் கூடும். அடுத்தவரை அவமா னத்திற்கும் பழிச்சொல்லுக்கும் உட்படுத்தித் தமது பெயரை, தமது நேர்மையை காப்பாற்றிக்கொள்ள நினைக்கக்கூடும். இப்படிப்பட்ட ஓர் நெருக்கடி வந்திருந்தால் நாம் எப்படி நடந்துகொண்டிருப்போம்?

யோசேப்பு மரியாளை இகழ்ச்சிக்கு உள்ளாக்கவில்லை. அம்பலப் படுத்தாமல், அவமானப்படுத்தாமல் மறைவாக (இரகசியமாக) மரியாளை விவாகரத்துச் செய்வதற்கு, விலக்கிவிடத் திட்டமிட்டார். யோசேப்புவின் இந்த நடவடிக்கை அவர் பண்பாளர், நேர்மையாளர், கனிவாளர் என் பதைக் காட்டுகின்றதன்றோ?!

யோசேப்பு நேர்மையாளர் என்பதற்கு இந்த வார்த்தைகளை விட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு சாட்சியம் வேண்டுமா? "யோசேப்பு தூக்கத்திலிருந்து விழித்தெழுந்து ஆண்டவரின் தூதர் தமக்குப் பணிந்தவாறே தம் மனைவியை ஏற்றுக்கொண்டார். மரியாள் தம் மகனைப் பெற்றெடுக்கும் வரை யோசேப்பு அவரோடு கூடிவாழவில்லை" யோசேப்பின் கண்ணியத்தையும், விசுவாசத்தையும், விசுவாசக் கீழ்ப்படிவையும் இந்த வார்த்தைகள் உணர்த்தவில்லையா?!

யோசேப்பைவிட மரியாளுக்கு வேறு பொருத்தமான கணவர் கிடைத்திருக்க முடியுமா? அல்லது இயேசுவுக்குத்தான் யோசேப்பைவிடப் பொருத்தமான ஓர் வளர்ப்புத் தந்தை கிடைத்திருக்க முடியுமா?

**இயேசு என்னும் நாமம்**

"அவருக்கு இயேசு எனப் பெயரிடுவீர். ஏனெனில் அவர் தம் மக்களை அவர்களுடைய பாவங்களிலிருந்து மீட்பார்"

இந்தத் தவக்காலத்தில் நாம் தியானிக்கவும், கொண்டாடவும் வேண்டிய வார்த்தைகளே இது. நம்மை நமது பாவங்களிலிருந்து விடுவிக்கும் மீட்பர் இயேசு.

**"அந்தோ! இரங்கத்தக்க மனிதன் நான். சாவுக்குள்ளாக்கும் இந்த உடலினின்று என்னை விடுவிப்பவர் யார்? நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வழியாய் கடவுள் தாம் விடுப்பார். அவருக்கு நன்றி"** என்ற பவுலடியாரின் வார்த்தைகள் இயேசு என்னும் மீட்பரின் நாமத்தைப் பெயரைக் கொண்டாடும் வார்த்தைகள்.

இயேசுவின் நாமமே திருநாமம் - முழு
இருதயத்தால் தொழுவோம் நாமும்.
இத்தரையில் மெத்தவதி சயநாமம் - அதை
நித்தமுந்தொழுபவர்க்கு ஜெயநாமம்
பட்சமுள்ள ரட்சைசெயு முபகாரி - பெரும்
பாவப்பிணிகள் நீக்கும் பரிகாரி
இயேசுவின் நாமமே திருநாமம் - முழு
இருதயத்தால் தொழுவோம் நாமும்.

**பிரார்த்தனை : ஆண்டவரே, உமது பெயர் ஒன்றையே உச்சரிப்பேன். அதுவே எனக்குக் கதி. ஆமென்.**

OOO



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்ச் - 20

தானியேல் – இளைஞர் மூவரின் பாடல் (பொது விவிலியம் – பக் 203)

வசனங்கள் 14 – 20, 61–62, 65

யோவா 8:31–42

# தந்தைவழி நடப்போமா?

யாருக்கு நான் அடிமை?

"பாவம் செய்கிற எவரும் பாவத்திற்கு அடிமை" என்று இயேசு கூறும் வார்த்தையை நாம் ஆழ்ந்து சிந்திக்கவேண்டும்.

**"நன்மை செய்யும் விரும்பம் என்னிடம் இல்லாமல் இல்லை; அதைச் செய்யத்தான் முடியவில்லை. நான் விரும்பும் நன்மையைச் செய்வதில்லை; விரும்பாத தீமையையே செய்கிறேன். நான் விரும்பாததைச் செய்கிறேன் என்றால், அதை நானாகச் செய்யவில்லை; என்னில் குடி கொண்டிருக்கும் பாவமே செய்கின்றது."** என்பது இந்த அடிமைத் தனத்தை விபரிக்கிறார் பவுலடிகளார்.

'ஒருவனை அவனின் ஆசைகள் ஆளும்போது அவன் விடுதலையடைந்தவன் என்று நாம் எப்படிக் கூறமுடியும்?' என்று வினவுகின்றான். தத்துவஞானி சோக்ரட்டீஸ்.

"நாம் பாவத்தை வெறுக்கும் அதேநேரம், பாவத்தை விரும்புகின்றோம்" என்று இன்னொரு அறிஞன் கூறுகின்றான்.

நாங்கள் எங்கள் பழக்கங்கள், தவறான ஆசைகள், ஈடுபாடுகள் இவற்றிற்கு அடிமையாகிவிட்டோம். அவை எம்மை ஆளுகின்றன. ஆட்டிப்படைக்கின்றன. எனவேதான் இயேசு பாவம் செய்யும் எவரும் பாவத்திற்கு அடிமை என்கிறார்.

மகனுக்கு வீட்டில் நிரந்தர உரிமையுண்டு. அடிமைக்கு அந்த உரிமை கிடையாது. எந்த நேரத்திலும் அடிமை வீட்டைவிட்டுத் துரத்தப்படலாம். எனவே நாங்கள் கடவுளின் மக்கள், சுதந்திரவாளிகள் என்று நீங்கள் உங்களை நினைத்துக்கொள்ள வேண்டாம். உங்கள் நடத்தை அடிமைக்குரிய நடத்தையாய் இருந்தால், அதாவது நீங்கள் பாவத்திற்கு அடிமையாய் இருந்தால் வீட்டைவிட்டு எந்த நேரமும் துரத்தப்படலாம் என்பது குறித்து கவனமாயிருங்கள் என்று இயேசு எங்களை எச்சரிக்கிறார். அது எவ்வளவு பெரிய எச்சரிக்கை!

எனது தந்தை யார்?

ஆபிரகாம் எங்களுடைய தந்தை என்று யூதர்கள் சொல்கிறார்கள். நீங்கள் என்னைக்கொல்ல நினைக்கின்றீர்கள். ஆபிரகாம் அப்படிச் செய்வதில்லை. எனவே ஆபிரகாம் உங்கள் தந்தையல்ல. ஏனென்றால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் நடத்தை உங்கள் தந்தை ஆபிரகாமின் நடத்தைக்கு முரணானது என்று யூதர்களைப் பார்த்துக் கூறுகின்றார் இயேசு.

நீங்கள் கடவுள் உங்கள் தந்தை என்று சொல்லுகிறீர்கள். ஆனால் தந்தை உங்களிடம் அனுப்பிய என்னை நீங்கள் ஏற்றுக்கொள்ளாததினால் கடவுளாம் தந்தையை நீங்கள் கடவுளுக்குரியவர்கள் அல்ல என்று கூறுகின்றார் இயேசு.

அப்படியென்றால் அவர்களின் தந்தை யார்? 'நீங்கள் உங்கள் தந்தையைப் போலச் செயற்படுகிறீர்கள்' என்று இயேசு அவர்களைப் பார்த்துக் கூறுகின்றார்.

ஆபிரகாம் அவர்கள் தந்தை இல்லையென்றால், கடவுள் அவர்கள் தந்தை இல்லையென்றால், அவர்களின் தந்தை யார்?

"சாத்தானே உங்களுக்குத் தந்தை" என்று அதிர்வேட்டு வைக்கின்றார இயேசு.

ஆம், எங்கள் நடத்தை நாம் அடிமையா இல்லையா? என்று எங்களைக் காட்டிக்கொடுக்கும். எங்கள் நடத்தை நமக்குத் தந்தை யார் என்று காட்டிக்கொடுக்கும்.

**பிரார்த்தனை : பரமதந்தையே, உமக்கேற்ற நடத்தை என்னில் காணபடட்டும். நான் உமது மகனாய், உமது மகளாய் நடக்கட்டும், உமது வீட்டில் நிரந்தரமாய் வாழும் தகுதியை எனக்குத் தாரும். ஆமென்.**

○○○

**மார்ச் - 21**

தொடக்கநூல் 17:3 – 9
யோவான் 8:51 – 59

# நம்பிக்கையின் சோதனை

சமாதானப் பேச்சுவார்த்தைக்காக டேவிட் கேம்ப் மாநாடு ஒன்றினை அமெரிக்க முன்னாள் சனாதிபதி ஜிம்மி கார்ட்டர் ஒழுங்குபடுத்தினார். அதில் எகிப்தின் சனாதிபதி அன்வர் சதாத்தும், இஸ்ரவேல் நாட்டின் ஜனாதிபதி மௌக்கிம், பெகினும் கலந்துகொண்டனர். ஒரு கிறிஸ்தவர், ஒரு முஸ்லிம், ஒரு யூதன் கலந்துகொண்ட மாநாடு இது. இவர்கள் அனைவருமே தங்கள் விசுவாசத்தின் தந்தை ஆபிரகாமே என்று உரிமை கொண்டாடியவர்கள் தான்.

முஸ்லீம்கள் இஸ்மவேல் வழியாய் ஆபிரகாமிற்கு உரிமை கொண்டாடுபவர்கள். யூதரும், கிறிஸ்தவரும் ஈசாக்கு வழியாய் ஆபிரகாமிற்கு உரிமை கொண்டாடுபவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எண்ணற்ற நாடுகளுக்கு நீ தந்தை ஆவாய். உன்னிடமிருந்து நாடுகளை உண்டாக்குவேன். உன்னிடமிருந்து அரசர்கள் தோன்றுவர்" என்று கடவுள் ஆபிரகாமுக்குக் கொடுத்த வாக்கு மெய்ப்பிக்கப்பட்டது.

ஆபிரகாமுக்கு கடவுள் கொடுத்த வாக்கு மேசியாவின் வருகையை யும் உள்ளடக்குறது என்பது யூதர்களின் நம்பிக்கை. அந்த மெசியா வரும்போது ஆபிரகாமும் அதைக் கண்டுகளிப்பார் என்று அவர்கள் நம்பினார்கள். இயேசு **"அந்த மெசியா நான்தான். என் வருகை கண்டு ஆபிரகாம் பேருவகை கொண்டார்."** என்று இயேசு உரிமை கொண்டாடிய போது யூதர்களால் அதை ஜீரணிக்க முடியவில்லை. **"உனக்கு இன்னமும ஐம்பது வயதாகவில்லையே நீ ஆபிரகாமைக் கண்டிருக்கிறாயா?"** என்று அவர்கள் வாதிட்டார்கள். **"ஆபிரகாம் பிறப்பதற்கு முன்பே நான் இருககிறேன்"** என்று இயேசு சொன்னபோது அவர் அவர்கள் தலையில் அணுகுண்டைத் தூக்கிப்போடுகின்றார். தாம் மெசியா மட்டுமல்ல தாம ஆரம்பமும் முடிவும் இல்லா என்றும் வாழும் கடவுள் என்று இயேசு உரிமை கொண்டாடுகின்றார்.

யூதர்களைப் பொறுத்தமட்டில் ஒரு மனிதன் இவ்வாறு உரிமை கொண்டாடுவது என்பது கடவுளுக்கு எதிரான அவதூறு, எனவேதான் இயேசுவைக் கொல்ல அவர்கள் தங்கள் கைகளில் கற்களை எடுக்கின் றார்கள். இயேசுவைக் கடவுள் என்று உணரமுடியாத கற்கள் அவர்கள் மனதும தான். இன்றும் முஸ்லிம்களோ, யூதர்களோ இயேசுவைக் கடவுள் என்று ஒப்புவதில்லை. இயேசு கடவுள் என்பது கிறிஸ்தவர்களின் நம்பிக்கை. என்னுடைய தனிப்பட்ட நம்பிக்கை என்ன? **"என் ஆண்ட வரே, என் கடவுளே!"** என்று தோமாவைப் போல் எம்மால் அறிக்கை செய்ய முடியுமா?

இயேசுவைக் கடவுளென்று அறிக்கை செய்தால் மட்டுமே **"என் வார்த்தைகளைக் கடைப்பிடிப்போர் என்றுமே சாகமாட்டார்கள்"** என்ற கூற்றை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியும். அவரின் வார்த்தைகளை நம்புவோருக்கு சாவில்லை. இது உடல் ரீதியான சாவு அன்று. அவர் கள் ஆன்மாவிற்கு சாவில்லை. அவர்கள் ஆன்மாவின் சாவிலிருந்து நிலைக்கும் மெய்வாழ்விற்குள் இயேசுவின் உறவின் மூலம் பிரவேசிக் கும் பேறு பெற்றவர்கள்.

**"ஆண்டவரே, நாங்கள் யாரிடம் போவோம்? நிலைவாழ்வு அளிக் கும் வார்த்தைகள் உம்மிடம்தானே உள்ளன?"** என்று பேதுருவுடன் எம்மால் அறிக்கை செய்யமுடியுமா?

"ஆபிரகாமிற்கு முன்பே நான் இருக்கிறேன்" என்ற இயேசுவின் வார்த்தைகளை நம்மால் நம்ப முடியுமா? என்பதுதான் நம் நம்பிக்கைக்கான சோதனை.

**பிரார்த்தனை : ஆண்டவரே, தோமாவின் பேதுருவின் நம்பிக்கையை எனக்குத் தாரும். அந்த நம்பிக்கையில் நான் மகிழட்டும். ஆமென்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மார்ச் - 22**

எரே 20:10 – 13
யோவா 10:31 – 42

# சத்தியம் தோற்காது

இன்று நற்செய்தி அறிவிக்கின்றவர்கள் சொகுசிலே வாழ்ந்துகொண்டு நற்செய்தியை அறிவிக்கின்றார்கள். மக்களின் கைதட்டல், பின்பற்றல் அவர்களுக்குத் தாராளமாய் உண்டு. ஊடகப் பிரச்சாரமும் அவர்களுக்கு உண்டு. போதாக்குறைக்கு கொழுத்த வருமானமும் நற்செய்தி அறிவிப்பால் உண்டு.

ஆனால் எரேமியாவுக்கும் இயேசுவுக்கும் கிடைத்ததோ எதிர்ப்பு, கல்லெறிதல், உயிராபத்து இவைதான். மக்கள் கேட்க விரும்புவதையே பிரசங்கிக்கும் போலி இறைவாக்குரைப்பாளர்களாய் நாமிருக்கும் வரையில் பாராட்டுக்கும் பணவருமானத்திற்கும் எந்தக் குறையும் இருக்காது. நற்செய்தி என்பது சீனி மிட்டாய் வியாபாரம் அல்ல. அந்த நற்செய்தி அறிவிப்பு எரேமியாவிற்கும் இயேசுவுக்கும் போல் எதிர்ப்பையும் மரணத்தையும் கொண்டு தரலாம். அந்த நற்செய்தி அதிகாரத்தில் இருப்போருக்கும், மக்களுக்கும் கூட எட்டிக்காயாய் கசக்கலாம். உண்மை இறைவாக்கினர் அனைவரும் அனுபவித்தது எதிர்ப்பும், மரணமுமே.

அப்படிபட்ட சந்தர்ப்பங்களில் அவர்களை மனம் தளராது, மன உறுதியோடு முன்னோக்கிச் செல்லவைத்தது எது?

“ஆண்டவர் வலிமை வாய்ந்த வீரரைப் போல என்னோடு இருக்கின்றார்” என்கிறார் எரேமியா. எரேமியா, இயேசு போன்றோரின் வீரியத்தின் ஊற்று அந்த நம்பிக்கைதான்.

இன்றைய நற்செய்திப் பகுதியில் இயேசு கல்லெறிய முனைந்தவர்களின் கையில் அகப்படாமல் யோர்தானுக்கு அப்பால் யோவான் முதலில திருமுழுக்குக் கொடுத்துவந்த இடத்திற்கு இயேசு மீண்டும் சென்று அங்கு தங்கினார் என்று கூறப்படுகின்றது.

அந்த யோர்தானின் அக்கரையில்தான் எல்லாமே ஆரம்பித்தது. அங்குதான் இயேசு திருமுழுக்குப் பெற்றார். அங்குதான் அவர் கடவுளின் அன்பான மகன், தெரிந்து கொள்ளப்பட் டவர் என்று கடவுளின் குரல் ஒலித்தது. அங்குதான் இயேசு தமது பணியை ஆரம்பித்தார்.

மீண்டும் இயேசு அந்த இடத்திற்குச் செல்வதற்கான காரணம் எதிர் கொள்ளப்போகும் சிலுவை மரணத்திற்கு சக்தியைத் தனது மனதிற்கு ள்ளே பெற்றுக்கொள்ளத்தான்.

அதுமட்டுமல்ல, அந்த இடத்திலேயே அவர் திருமுழுக்காளர் யோவானின் சாட்சி, சிரச்சேதம், வீரமரணம் குறித்து ஆழ்ந்து சிந்தித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பார். யோவானைத் தம் மனதில் ஆதர்சமாக வரிந்துக்கொண்டிருப் பார்.

இன்று நற்செய்தியாளர்கள் 'அரும் அடையாளம்' செய்து மக்களைத் தம்பால் ஈர்க்கின்றார்கள். 'யோவான் அரும் அடையாளம் எதையும் செய்யவில்லை' அவரின் ஒரே அரும் அடையாளம் அவரின் துணிச்சலான மரணம்தான்.

எரேமியாவும் இயேசுவும் நடந்த பாதையில் நடந்து கடவுளின் வார்த்தையை நம் நாட்டிலே அறிவிப்போம். சத்தியத்தை அறிவித்தவர் கள் பலியானாபோதும் சத்தியம் தோற்கவில்லை.

**பிரார்த்தனை : ஆண்டவரே, எங்களை உமது சத்தியத்தின் கருவி களாக்கும். ஆமென்.**

○○○

**மார்ச் - 23**

**எசேக் 37:21 – 28**
**யோவா 11:45 – 56**

# துணிவின் உச்சம்

சிலுவைக்கு நேரம் நெருங்குகின்றது. சிலுவை நாடகத்தை மேடை யேற்றப் போகின்றவர்கள் தயாராகுகின்றார்கள். லாசருக்கு வாழ்வு தந்தவருக்கு அவர்கள் மரணத்தைத் தர ஆயத்தமாகின்றார்கள்.

அரசியலோடு சம்பந்தமில்லாத பரிசேயரும் அரசியலில் மூழ்கிப்போன சதுசேயரும் அந்த சிலுவை நாடகத்தை அரங்கேற்ற ஒன்றுபடுகின்றார்கள். இருசாரார் பார்வையிலும் இயேசு அவர்களுக்கு எதிரி. "இவனை இப்படியே விட்டுவிட்டால் அனைவரும் அவனிடம் நம்பிக்கை கொள்வர்" என்று பொருமுகின்றார்கள்.

"இனம் முழுவதும் அழிந்துபோவதைவிட ஒரு மனிதன் இறப்பது நல்லது" என்ற தத்துவம் இந்த உலகம் அன்றிலிருந்து இன்றுவரை கடைப்பிடிக்கும் தத்துவம். அதைச் சொன்னதோ தலைமைக் குரு கயபா. பலருக்காக ஒருவனைப் பலியாக்குவது தம்மைப் பாதுகாக்க நீதியை, சத்தியத்தைக் கொலைசெய்வது. பொது எதிரியைக் கொல்ல எதிரிகள் ஒன்று சேர்வது இவையெல்லாம் அதிகாரத்தில் இருப்போரு க்கு கைவந்த கலை.

"ஆனால் கயபா தாமாகச் சொல்லவில்லை. இறைவாக்காகச் சொன்னார்" என்ற யோவானின் கூற்று நம்மை திக்குமுக்காடச் செய்கிறது. மனிதன் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைக்கும் என்பது இங்கு மெய்ப்பிக்கப்படுவதை யோவான் சுட்டுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கயபாவின் கயமை எண்ணம் கூட கடவுளின் திருவுளம் நிறைவேறும் கருவியாகக் கடவுள் மாற்றும் அதிசயம் இது. இயேசு யூத குலம் அனைத்திற்காகவும் மட்டுமல்ல உலகம் அனைத்தையும் மீட்பதற்காய் இறக்கப்போவதை கயபா உணராமலே தன் வாயால் அறிக்கையிடும் அதிசயம் இது.

“ஆள்வோர் ஒன்றுகூடிச் சதிசெய்கின்றார்கள். விண்ணுலகில் வீற்றிருப்பவர் எண்ணி நகைக்கின்றார்” (தி.பா.2:2ஆ,4அ) என்பதின் வெளிப்பாடே இந்த நிகழ்வு.

உரோமர் வந்து தம் தூய இடத்தையும் தம் இனத்தையும் அழித்துவிடுவார்கள் என்பதைத் தடுப்பதற்காய்த்தான் இயேசுவைப் பலியாக்கித் தான் விவேகமாய் நடப்பதாய் கயபா நினைத்தார். ஆனால் கி.பி. 70 இல் நடந்ததோ அவர் பயந்ததுதான். எருசலேம் தேவாலயம் தரைமட்டமாகியது. யூதர்கள் உரோமரால் அடிமை கொள்ளப்பட்டார்கள்.

இயேசு மறைவைத் தேடுகின்றார். அவர் ‘யூதரிடையே வெளிப்படையாக நடமாடவில்லை’ இயேசுவைக் கொல்வதற்கான சன்மானம் அறிவிக்கப்பட்டிருந்தது. இயேசுவுக்காக மரணவலை விரிக்கப்பட்டிருந்தது. அப்படியிருக்க இயேசு சிங்கத்தின் குகைக்குள் வருவாரா? நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? என்று மூலை முடுக்கெல்லாம் கிசுகிசுப்பு, பரபரப்பு.

இயேசு ஒன்றும் கோழையல்ல, அதேவேளை அவர் முட்டாள்த் துணிவோடு நடப்பவருமல்ல. அவர் தம் வேளைக்காகக் காத்திருந்தார். பதுங்கிப் பாயும் வேங்கை போல் மறைந்திருந்தார். நேரம் வந்தபோது சீறிவரும் சிங்கம் போல் வீறுநடைபோட்டு, பெரும் ஆரவாரத்தோடு எல்லோர் பார்வையும் தம் பக்கம் திரும்பும் விதமாய் அவர் எருசலேமிற்குள் பிரவேசித்தார். இயேசுவின் இந்தத் துணிச்சலுக்கு நாம் தலைவணங்காமல் இருக்க முடியாது. மரணத்தை துச்சமென மதிக்கும் அவர் துணிச்சல் பிரமிப்பானது.

**பிரார்த்தனை : ஆண்டவராகிய இயேசுவே! உமது விவேகத்தையும் உமது துணிவையும் எனக்குத் தாரும். சிலுவையில் நீர் தொங்கியது தோல்வியுற்ற கோழையாய் அல்ல; வெற்றி வேந்தனாய்!**

OOO



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்ச் - 24

எசா 50:4 – 7
பிலிப் 2:6 – 11
லூக்கா 22:14–23, 56

# வாள் அல்ல சிலுவை

இது பாடுகளின் வாரம். இயேசுவின் பாடுகளை நாம் நினைவில் கொள்ளும் வாரம். சிலுவையே எங்கள் சிந்தனையின் குவிமையமாய் அமைகின்றது.

ஏழை எளியோரின் உரிமைக் கோரலை, கலகத்தை, கிளர்ச்சியை அடக்குவதற்கு அரசவன்முறை அல்லது ஆட்சி வன்முறை உரோம அரசின் வடிவில் பூதாகாரமாகக் காட்சியளித்தது. சிலுவைகள் அவர்களின் இந்த வன்முறையை நினைவுபடுத்தும், எச்சரிக்கும் சின்னங்கள்.

மறுபக்கம் அடக்குமுறை ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு ஆயுதம் ஏந்துதலே ஒரேவழி, ஆயுதப் புரட்சியே விடுதலைக்கான ஒரேவழி என்ற செலோத்தேயரின் (கலகக்காரரின்) வன்முறை. இந்த வன்முறை இளைஞர்களை ஈர்த்துக்கொண்டிருந்தது.

இந்த இரண்டு வன்முறைகளுக்கும் இடையில் சமய ஆட்சிபீடத் தலைவர்களின் வன்முறை தலைவிரித்தாடியது. தங்கள் பதவியைக் காத்துக்கொள்ள அவர்கள் எந்த வன்முறையையும் பாவிக்கத் தயங்கவில்லை.

இந்தப் பின்னணியில்தான் நாம் இன்றைய எசாயாப் பகுதியைப் பார்க்க வேண்டும். இது பாடுபடும் தாசன் பற்றிய பாடல். இது இயேசுவிற்கு நூற்றுக்கு நூறு பொருத்தமானது என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

"நான் கிளர்ந்தெழவில்லை; விலகிச் செல்லவுமில்லை" என்ற வார்த்தைகள் நாம் ஆழ்ந்து சிந்திக்க வேண்டியவை. வன்முறைக்கெதிராக அவர் செலோததுயர் போல் கிளர்ந்தெழவில்லை. உரோமரையும் சமய ஆட்சிபீடமும் அவர் மீது கைகோர்த்துக்கொண்டு வந்த வன்முறைக்கு அவர் விலகிச் செல்லவுமில்லை.

வன்முறைக்குப் பதில் வன்முறையை மெற்கொள்வது அல்லது வன்முறைக்குப் பயந்து அதை எதிர்க்காமல், முகம் கொடுக்காமல் அதற்கு அடங்கிவிடுவது என்பதுதான் மக்களின் போக்கு. இது இரண்டுமே இயேசுவின் போக்கு அல்ல.

"அடிப்போர்க்கு என் முதுகையும், தாடியைப் பிடுங்குவோர்க்கு என் தாடையையும் ஒப்புவித்தேன்" தனது கட்டுப்பாட்டில் இல்லாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுப்பாட்டை மீறிய வன்முறையை அநுபவிக்கும் ஒரு நிலையல்ல இது. தாமே முன்வந்து வன்முறைக்குத் தன்னை சுய தீர்மானத்தோடு, சுயவிருப்போடு 'ஒப்புக்கொடுக்கும்' நிலை (மத் 26:52-56 யோவா 18:4-9). இயேசு பலமற்ற நிலையில், பலவீனத்தில் தன்னை ஒப்புக் கொடுக்கவில்லை. பலமான நிலையில் இருந்துகொண்டுதான் தன்னை ஒப்புவிக்கின்றார்.

"வாளை எடுப்போர் அனைவரும் வாளால் அழிந்து போவர்" (மத 26:52). என்ற இயேசுவின் வார்த்தைகள் வன்முறையை வன்முறையால் தான் வெல்லாம் என்ற வாதத்தின் பேதமையைப் புலப்படுத்துகின்றது. வன்முறையை அன்பு ஒன்றே வெல்லும். தியாகம் ஒன்றே தோற்கடிக்கும் போராடும் அகிம்சை ஒன்றே ஒரேவழி. வன்முறைகளுக்கான பதில் வாள் அல்ல சிலுவை!

**பிரார்த்தனை : ஆண்டவரே, வன்முறைக்குப் பதில் கிளர்ந்தெழுவதோ விலகிச்செல்வதோ அல்ல, சிலுவை என்பதை எனக்குக் கற்றுத்தாரும். சிலுவைப் பாதையில் நடக்க எனக்கு துணிவு தாரும். ஆமென்.**

ooo

**மார்ச் - 25**

எசா 42:1 – 7
யோவா 12:1 – 11

## நறுமணமா? துர்மணமா?

நற்செய்திப் பகுதியில் மனதை உருக்கும் அழகான காட்சி. மரணித் தாலும் உயிரோடு எழுப்பப்பட்ட லாசருவின் வீட்டிற்கு இயேசு வருகின் றார். தமது மரணத்தை எதிர்கொள்ள முன்பு இயேசு லாசருக்குச் செய் ததை கடவுள் இயேசுவிற்குச் செய்வார் என்பதை யோவான் நமக்குச் சொல்லாமல் சொல்கின்றார் அவல்லவா?!

இயேசு சிலுவை மரணத்திற்கு முகம் கொடுத்து மரித்ததும் அவரது உடல் கல்லறைக்குள் வைக்கப்படும் முன்பு நறுமணத் திரவியங்கள் பூசப்பட்டு தயார் செய்யப்படும். அத்தகைய சந்தர்ப்பங்களில் பாதத்தில் ஆரம்பித்துத்தான் நறுமண தைலம் உடலுக்கு பூசப்படும். மரியாள் இயேசுவின் பாதத்தில் நறுமண தைலத்தை ஊற்றும் காட்சி முன்கூட் டியே அந்தச் சம்பவத்தை எம் கண்முன்னே கொண்டுவருகின்றது.

இந்த சம்பவத்தில் வரும் சில கதாபாத்திரங்களை நாம் பார்ப்பதன் மூலம் பலபடிப்பினைகளைப் பெற்றுக்கொள்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மார்த்தாள்

மார்த்தா உணவு பரிமாறினார். இயேசுவிற்கு விருந்தை ஆயத்தப்படுத்தியது அவரே. மார்த்தா போன்றவர்கள் இயேசுவிற்கான தங்கள் பேரன்பை தமது கைகள் மூலம் செய்யும் சேவையில்தான் காட்டுகின்றார்கள். இயேசுவின் சிலுவை அன்பிற்கு நான் எப்படி பதில் அன்பு செய்கின்றேன்? பிறருக்கான அன்புச் சேவையில் நான் ஈடுபட்டிருக்கின்றேனா? இயேசுவின் மீதான என் அன்பை என் கைகள் பேசட்டும்.

### மரியாள்

மரியாளின் பேரன்பிற்கு ஈடு இணையில்லை. அந்த அன்பு தன்னிடத்தில் உள்ளதை எல்லாம் இயேசுவிற்காய்த் தரும் அன்பு. தன்னிடத்தில் உள்ள சிறந்ததை, விலையேறப்பெற்றதை அது இயேசுவின் பாதங்களில் காணிக்கையாய்ப் படைக்கின்றது. எதையும், எவ்வளவையும் விரயம் செய்வதற்கு அந்த அன்பு தங்குவதில்லை.

அது கணக்குப் பாராது காட்டப்படும் அதீத அன்பு. உள்ளதை எல்லாம தந்ததற்குப்பின்பு இன்றும் தருவதற்கு என்னிடம் ஒன்றும் இல்லையே என்று வருத்தப்படும் அன்பு. அந்த அன்பின் வாசனை அபூர்வ வாசனை. அகிலமெல்லாம் மணக்கும் வாசனை. இயேசுவிற்கான எனது அன்பின் வாசனை எத்தகையது.

மரியாளின் கூந்தல் கட்டவிழ்ந்தது. அக் கூந்தலால் அவர் இயேசுவின் பாதங்களைத் துடைத்தார். திருமணம் முடித்த பெண்கள் கூந்தலைப் பகிரங்கமாய்க் கட்டவிழ்ப்பதில்லை. தங்கள் கணவர் முன்பு மட்டுமே தம் கூந்தலைக் கட்டவிழ்ப்பர். மற்றும்படி அழுது புலம்பும் போதே அவர்கள் கூந்தல் கலையும். மரியாள் கண்ணீரோடு, விரிந்த கூந்த லோடு, இயேசுவின் பாதத்தை வருடி அழுது புலம்புகின்றார். இயேசு விற்காய் விம்மி வெடிக்கும் இதயம் இது. துக்கிப் புலம்பும் இதயம் இது.

இயேசுவிற்கான என் அன்பின் கண்ணீர் உண்டா? மனப்பாரம் உண்டா? மனக் கசிவு உண்டா? கண்ணீரே என் காணிக்கையா? கண்ணீரில் பெருகும் அன்பு விலையேறப்பெற்ற அமுதம். அதில் கமழும் வாசனை உன்னதமானது, உயர்வானது, உண்மையானது, தூய்மையானது.

மரியாள் இயேசுவிற்கு வரப்போகும் மரணத்தை உணர்ந்து செய்த அன்புச்செயல் இது. தனது அன்பைக் காட்ட இனியொரு தருணம் வராது என்பதை உணர்ந்து செய்த செயல் இது.

ஒருவர் மரணிக்கும் முன்பு நாம் எமது சொல்லால், செயலால் அவருக்கு அன்புகாட்ட வேண்டும். அவர் மரித்த பின்பு அதற்கான சந்தர்ப்பம் எமக்கு வரவே வராது. அவர் இறந்த பின் அன்பு காட்டத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறிவிட்டோம் என்று வெந்து, நொந்து, கண்ணீர் விட்டுக் கதறி எந்தப் பிரயோசனமும் இல்லை. பிறர் வாழும்போதே அவருக்கு அன்பு செய்வோம்.

**யூதாஸ்**

அன்பின் அதீதம் இவனுக்கு அழகாய்த் தெரியவில்லை. அது வீணாய்த் தெரிகிறது. வக்கிரமான பார்வை இவனுடைய பார்வை. முப்பது வெள்ளிக் காசுக்காய் இயேசுவைக் காட்டிக்கொடுக்கும் இவனால் முந்நூறு வெள்ளிக்காசை இயேசுவுக்காய் விரயம் செய்யும் அன்பை எப்படிப் புரிந்துகொள்ள முடியும்? கசப்பான ஒரு மனதால் தான் இனிப்பான செயலை கசப்பானதாய்ப் பார்க்கமுடியும்? எனது மனது கசப்பு நிறைந்த மனதா? அனைத்தையும் கசப்பாய்ப் பார்க்கும் மனதா? கசபபும், காழ்ப்பும் கொண்ட மனதால் அன்பு செய்யவும் முடியாது, அன்பைப் புரிந்துகொள்ளவும் முடியாது. அந்த மனதில் எழுவதெல்லாம் நறுமணம் அல்ல, துர்மணமே. நறுமணத்தின் நடுவில் நான் ஓர் துர்மணமா? நான் என் வார்த்தையால், செயலால் பரப்புவது என்ன? நறுமணமா? துர்மணமா?

**பிரார்த்தனை : பாரெல்லாம் அன்பு மணம் கமழச்செய்தவரே! உமது அன்பில் என் மனம் கரையட்டும். மணம் வீசட்டும். ஆமென்.**

ooo

**மார்ச் - 26**

எசா 49:1 – 6
யோவா 13:21 – 33, 36–38

# உற்ற நண்பர்கள்

உறவுக்கு அடையாளம் விருந்து. விருந்திலே ஒன்றாய் அமர்பவர்கள் அன்பர்கள். இயேசு தமது அன்பர்களோடு தமது கடைசி இரவுணவிலே அமர்ந்திருக்கின்றார். அவரது பார்வை யூதாசின் மீது வீழ்கிறது.

யூதாஸ் ஏற்கனவே இயேசுவைக் காட்டிக்கொடுப்பதற்கு சம்மதித்துவிட்டான். இருந்தபோதும் இயேசுவோடு விருந்தில் அமர்ந்திருக்கிறான். அவனுடைய கபடநாடகம் பிறருக்குப் புரியவில்லை. ஆனால் இயேசுவுககுத் தெரிகிறது. நட்புக்குத் துரோகம் இழைக்கப்போகும் அவனின் நயவஞ்சகம் இயேசுவின் இதயத்தைப் பிளக்கிறது. அதையும்கூட மறை நூல் வாக்கின் நிறைவேற்றமாகத் தான் அவர் பார்க்கின்றார். திருப்பாடலொன்றின் வரிகள் அவர் திருவுதட்டிலிருந்து உதிர்கின்றன.

"என் உற்ற நண்பன்,
நான் பெரிதும் நம்பினவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் உணவை உண்டவன்
எனக்கு இரண்டகமாகத் தன்
குதிக்காலைத் தூக்குகின்றான்" (தி.பா.41:9).

என்ற வரிகளே அது. உற்ற நண்பன் கூடவிருந்து உணவை உண்டவன், இரண்டகம், துரோகம் செய்கின்றான். புனிதமான நட்பை மிதிப்பதற்காய், நண்பனை மிதிப்பதற்காய் தனது குதிக்காலைத் தூக்குகின்றான். இதைவிட வேதனையான சம்பவம் எது இருக்கமுடியும்?

பாவத்தைப் புரிந்துகொண்டே பாவமில்லாதவர் போல் எம்மால் நடிக்க முடிகிறதே அது எப்படி?! நண்பன் தரும் உணவை உண்ட அதே உதட்டாலே நண்பனை முத்தமிட்டுக் காட்டிக்கொடுக்க முடிகிறதே அது எப்படி? 'சாத்தான் எமக்குள் நுழைந்தால்' மட்டுமே எம்மால் அப்படிச் செய்யமுடியும். "நீ செய்யவிருப்பதை விரைவாய்ச் செய்" என்ற இயேசுவின் வார்த்தைகளை யூதாஸ் சாத்தானின் பிடியிலிருந்து மீளமுடியா அவல நிலைக்குச் சென்றுவிட்டான் என்பதையே காட்டுகிறது. அந்த வார்த்தைகளைக் காதால் கேட்டபின்பும் யூதாஸால் இயேசுவைக் காட்டிக்கொடுக்க முடிகிறது என்றால் அவன் மனது மரத்துப் போய்விட்டது. அவனது மனசாட்சி மரித்துப் போய்விட்டது என்றுதான் அர்த்தம்.

இன்னுமொரு நண்பன் இயேசுவைப் பார்த்து 'உமக்காக என் உயிரைக் கொடுப்பேன்' என்கிறான். அது சீமோன் பேதுரு. கற்பாறைபோல் உறுதி கொண்டவன் என்கிறது பேதுரு என்கிற அவன் புனைப்பெயர். 'சேவல் கூவுமுன் நீ மும்முறை என்னை மறுதலிப்பாய்' என்கிறார் இயேசு. சோதனை வந்து தாக்கும்போது எமது துணிவோ, உறுதியோ, பெருமை பாராட்டவோ கைகொடுக்க மாட்டாது என்ற எச்சரிக்கை அது.

சாத்தானால் எமக்குள் புகுந்து எம்மை விலைபேசி முற்றாய் எங்களை வாங்கிவிடவும் முடியும்; சுளகிலே கோதுமையாய் புடைப்பதுபோல் எமது உறுதி நிலையைப் புடைக்கவும் அவனால் முடியும். காட்டிக் கொடுத்தான் ஒரு நண்பன். மறுதலித்தான் இன்னொரு நண்பன். மார்பில சாய்ந்திருந்தான் மற்றொரு நண்பன். அந்த அன்பு மார்பைவிட்டு விலகும் போது நாம் மறுதலிக்கும் நண்பனாய், காட்டிக்கொடுக்கும் நண்பனாய் மாறிவிட முடியும்.

மூன்று நண்பர்களுமே விருந்தில் அமர்ந்திருப்பவர்கள் தான்.

திருவிருந்தில் அமரும் நான் எத்தகைய நண்பன்?

**பிரார்த்தனை : இயேசுவே! என் ஆன்மாவின் இனிய நண்பனே! உமது மார்பைவிட்டு விலகாமல் என்னைக் காத்துக்கொள்ளும் உமக்கேற்ற உற்ற நண்பனாய் என்னை உருவாக்கும். ஆமென்.**

OOO



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மார்ச் - 27**

எசா 50:4 – 9
மத் 27:3 – 10

# பாவமும் அதன் முடிவும்

பாவத்தின் மாய வலையில் அகப்பட்டிருக்கும் போது பாவம் இனிக்கும். அந்த மாயவலையை விட்டு நாம் வெளியில் வரும்போது அதுவே கசக்கும். எந்தப் பாவத்தை நாம் மோகித்தோமோ அதே பாவத்தை நாம் வெறுப்போம். 'நான் என்ன செய்துவிட்டேன்? என்ற கேள்வி நாம தவறியதற்குப் பிறகுதான் எழுகிறது. 'நான் என்ன செய்யப் போகின்றேன்?' என்ற கேள்வி பாவம் செய்வதற்கு முன்பு எழுந்திருந்தால் பாவத்தைத் தவிர்த்திருக்கலாம். பாவம் செய்வது பற்றிய பயத்தைக் கடந்த பின்தான் நாம் பாவம் என்ற கடலில் வீழ்கின்றோம்.

"இயேசு தண்டனைத் தீர்ப்பு அடைந்ததைக் கண்டபோது அவரைக் காட்டிக்கொடுத்த யூதாஸ் மனம் வருந்தினான்" இது நம்மை சிந்திக்க வைக்கிறது. இயேசு சாகடிக்கப்பட வேண்டும் என்று யூதாஸ் விரும்பவுமில்லை, சாவார் என்று எதிர்பார்க்கவுமில்லை.

தான் செய்யும் பாவத்தின் பாரதூரமான விளைவு எங்கேபோய் முடியும் என்று தெரியாமலே யூதாஸ் புரிந்த பாவம் அதன் விளைவுகளைக் கண்டபோது பதைபதைத்தது.

பாவத்தின் பயங்கர விளைவுகள் தான் பல சந்தர்ப்பங்களிலும் நம் பாவத்தைப் பற்றி நம்மைக் கண்திறக்க வைக்கிறது. அந்தச் சந்தர்பபங்களில் தான் நாம் விரும்பிய பாவத்தைப் வெறுக்க ஆரம்பிக்கின்றோம். அந்தப் பாவத்தை தூக்கியெறிந்துவிட விரும்புகின்றோம். "அதன் பின்பு அவன் அந்த வெள்ளிக்காசுக்களை கோயிலில் எறிந்துவிட்டுப் புறப்பட்டுப் போனான்" என்ற வார்த்தைகள் அதைத் தெளிவுபடுத்தும் அடையாளச் செய்கை. பாவத்தை நாம் எறிந்துவிடலாம். ஆனால் அதன விளைவுகளை நாம் எதுவுமே செய்ய முடியாது. யூதாஸ் மனம் வருந்தினான்'. இதில் எந்த சந்தேகமுமில்லை. மனம் வருந்தினான் என்பதை விட அவன் மனம் அவனை வதைத்தது, சித்திரவதை செய்தது என்பது தான் பொருத்தம்.

மனம் வருந்துதலில் இரண்டு வகை உண்டு. தன்னைத் தண்டிக்க விரும்பும் மனம் வருந்துதல் ஒருவகை. கடவுளிடம் திரும்பிவர விரும்பும் மனம் வருந்துதல் இன்னொரு வகை. முதல்வகை கடவுள் முகம் பார்க்க விரும்புவதில்லை. இரண்டாவது வகை கடவுள் முகத்தைத் தேடுகிறது. முதலாவது வகை தற்கொலையில் தன் வதையில் முடிவடைகிறது (மத் 27:6). இரண்டாவது வகை கடவுள் முன்பு கதறி அழுவதில் முடிகிறது (மத்26:75). ஒன்று தன் குற்றத்தால் தனக்கு ஏற்பட்ட துக்கத்தைத் தாங்கிக்கொள்ள முடியாத துக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் புறப்பட்டுப் போய்த் தூக்குப் போட்டுக்கொண்டான். பரிதா மான வார்த்தைகள். கடற்கரையில் பேதுருவைச் சந்தித்த இயேசு பேதுரு வுக்கு மன்னிப்பு வழங்கினார் (யோவா 25:15-17). அதே கடற்கரையில் இயேசு யூதாஸைச் சந்தித்திருந்தால் என்ன நடந்திருக்கும் என்ற கேள வியை நம்மை நாமே கேட்கின்றோம். பேதுருவை மன்னித்த இயேசு யூதாஸை மன்னித்திருக்க மாட்டாரா? மன்னித்திருப்பார் என்று நினைக் கும் போது யூதாஸின் மரணத்தின் சோகம் எம்மில் இரட்டிப்பாகிறது.

எந்தப் பாவிக்கும் மன்னிப்பு உண்டு. மனந்திரும்பி வரத் தருணம் உண்டு. என்று யூதாஸின் இரத்தம் கூறுகிறது.

**பிரார்த்தனை : ஆண்டவரே! பாவத்தின் விளைவுகள் பயங்கரமானவை என்பதை எனக்குணர்த்தும். உம்மிடம் திரும்பும் மனம் வருந்துதலை எனக்குத் தாரும். ஆமென்.**

OOO

**மார்ச் - 28**

லே.ப. 12:1 – 8, 11–14
1 கொரி 11:23 – 26
யோவா 13:1 – 15

## அன்பு போவதெங்கே?

முழுமை அன்பு - முழுமை அன்பு எதுவரை போகும்? முழுமை அன்பு கடை நிலைக்குப்போகும். கடைநிலை மாந்தர் செய்யும் கீழ்த்தர மான வேலையையும் தான் செய்யும்.

தாம் யாரென்று அறிந்திருந்த இயேசு இந்தக் கடைநிலைக்குச் சென் றார். விண்ணிலும் மண்ணிலும் உள்ள சகல அதிகாரமும் தம் கையில் என்பதை அறிந்திருந்தும் எந்த அதிகாரமும் இல்லா அடிமையின் நிலை யை தமதாக்கிக் கொள்கிறார். நமக்குள் இருக்கும் அதிகார எண்ணம் நம்மை மற்றவர்களைவிட உயர்ந்தவர்க ளாய் மதிப்பிடுகிறது. அதிகார கட்டமைப்பில்தான் இந்த உலகமே இயங்குகின்றது. இயேசுவின் இந்தச் செயல் அதிகாரக் கட்டமைப்பை தலைகீழாக்குகிறது.

அருவருப்பானதையும் செய்யத் தயங்காத அன்பே உண்மை அன்பு. உண்மை அன்புச்சேவை. ஆடம்பரத்தோடு வாழ்ந்த ஆசீசியின் பிரான்சிஸ் அருவருக்கத்தக்க தொழுநோயாளனையும் ஆரத்தழுவினார். அப்படி அவர் தொழுநோயாளனைத் தழுவியபோது அந்த தொழுநோயாளனின் உருவம் இயேசுவாய் மாறியதாம். அந்தத் தொழுநோயாளனும் பிரான் சிஸில் இயேசுவின் உருவைத்தான் கண்டிருப்பான்.

முன்மாதிரி - தங்களில் பெரியவன் யார் என்று வாதிட்ட சீடர்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயேசுவின் முன்மாதிரி இது. எங்களுக்குள் பெரியவன் யார் என்று எங்களுக்குள் இன்றும் போட்டிபோடும் எமக்கும் இது சிறந்த முன்மாதிரி இயேசுவைப் பின்பற்றுகிறோம் என்று சொல்கிறவர்கள் இயேசுவின் இந்த முன்மாதிரியைப் பின்பற்றாமல் இயேசுவைப் பின்பற்ற முடியாது.

**என்னைக் கழுவும்** - என் பாவங்களைக் கழுவ நான் இயேசுவிற்கு இடமளிக்காவிட்டால் எனக்கு இயேசுவோடு, பங்கில்லை. என் பாவங் களை, என் அசிங்கத்தைக் கழுவவிடாமல் தடுப்பது எது? அது என் பெருமையே திருமுழுக்குத் தொட்டியின் தண்ணீர் என்னைக் கழுவ வேண்டும். இயேசுவின் திருவிலா இரத்தம் என்னைக் கழுவவேண்டும். அப்போதே நான் தூய்மையடைய முடியும். பெருமையும் அகந்தையும் உடைபடும் போதுதான் பாவ அறிக்கை பிறக்கும். பாவ அறிக்கை பிறக்கும் போதுதான் பாவ மன்னிப்பு உண்டாகும். பாவ மன்னிப்பு உண்டாகும் போதுதான் புதுவாழ்வு உண்டாகும்.

**ஒருவர் மற்றவருடைய காலடிகளைக் கழுவுங்கள்'** - ஏழைகளின் காலடிகள், ஒடுக்கப்பட்டோரின் காலடிகள், புறக்கணிக்கப்பட்டோரின் காலடிகள் போகும்இடம் தெரியாமல் தடுமாறும் காலடிகள், பாவியா னோரின் காலடிகளைக் கழுவ நாம் தயாரா? பாவிகள் இயேசுவின் பாதங்களைக் கழுவினார்கள். உண்மை தான். ஆனால் இயேசு பாவியும், துரோகியும், தன் மீது பகை பாராட்டும் யூதாஸின் கால்களையும் கழுவுகிறார் என்பதை நாம் மறக்கவேண்டாம்.

**திருவிருந்து** - திருவிருந்தின் உண்மை அர்த்தம் பாதம் கழுவுத லேயன்றி வேறில்லை. அப்படியென்றால் திருவிருந்து எங்களுக்குள், குடும்பத்திற்குள், திருச்சபைக்குள், சமுதாயத்திறகுள், உலகிற்குள் புரட் சியை உருவாக்கும் கருவி, அது வெறும் பழமைக்குள் பழக்கத்திற்குள் புதைந்துபோன சடங்கல்ல.

**பிரார்த்தனை : "இயேசுவே, என் கால்கள் அசுத்தமானவை. உமது துவளையில் தண்ணீர் கொண்டு நீர் என் கால்களைக் கழுவ வாரும். இது எல்லை மீறும் ஓர் துணிச்சலான வேண்டுகோள் என்பது எனக்குத் தெரியும். ஆனால் அதனிலும் மேலாய் "நான் உன்னைக் கழுவவிட்டால் உன க்கு என்னோடு பங்கில்லை, உறவில்லை" என்ற உமது வார்த்தைகளுக்கு நான் அஞ்சுகின்றேன். எனக்கு உமது உறவு வேண்டும், உமது நட்பு வேண்டும், என் பாதங்களைக் கழுவும்" (திருச்சபைத் தந்தை ஓரிசன் - 3ஆம் நூற்றாண்டு)**

OOO



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மார்ச் - 29**

எசா 52:13 – 53:12
எபி 4:14 – 16, 5:7–9
யோவா 18:33–19:16, 25–36

# சிலுவை சொல்லும் கதை

**தீர்ப்பு என்ன?**

இயேசு பிலாத்துவின் முன்பு விசாரணைக்குக் கொண்டுவரப்பட்டார். ஆனால் தடுமாற்றமும், குழப்பமும், பயமும் பிலாத்துவிடம்தான் காணப்பட்டதேயொழிய இயேசுவிடம் அல்ல. பிலாத்து முன்பு இயேசு கைதியாக அல்ல மாட்சிமிக்க அரசனாக நிற்கின்றார் என்பதை யோவான் எமக்கு மிகத் தெளிவாகக் காட்டுகின்றார். 'நீ அரசன் தானோ?' என்ற பிலாத்துவின் கேள்விக்கான பதில் அவனுடைய உதடுகளிலிருந்தே வருகிறது என்று இயேசு கூறுகின்றார். எனினும் தனது அரசும், அரசாட்சியும் இந்த உலகத்திற்குரியதல்ல, தான் அன்பிற்கு அரசன், அகிம்சைக்கு அரசன், சத்தியத்திற்கு அரசன், அரசர்க்கெல்லாம் அரசன் என்பதை இயேசு நிறுவுகின்றார்.

இயேசு நிரபராதி என்பதை பிலாத்து தெட்டத்தெளிவாக அறிந்திருந்தான். அவரை விடுவிக்க ஆவல்கொண்டிருந்தான். எத்தனையோ எத்தனங்கள் மேற்கொண்டான். இயேசுவை சித்திரவதை செய்து யூதர் முன்பு கொண்டு வந்து 'இதோ மனிதன்' என்று பிலாத்து சொன்னது இதோ பரிதாபத்திற்குரிய மனிதன் என்ற கருத்தில் மட்டுமல்ல, இதோ உண்மையான மனிதன், இதோ உத்தம மனிதன், இதோ இலட்சிய மனிதன் என்ற அபிமானத்தோடும் மதிப்போடும்தான்.

அதேவேளை இயேசு 'இறைமகன்' என்று கேள்விப்பட்டபோது அவன் அஞ்சினான், தடுமாறினான். 'நீ எங்கிருந்து வருகிறாய்? எனக்குச் சொல்' என்று அதட்டுகின்றான். ஆனால் இயேசுவோ மௌனம் கடைப்பிடிக்கின்றார். பிலாத்துவே அதற்கான பதிலைச் சொல்லட்டும் என்பதுபோல் மௌனம் சாதிக்கின்றார். அந்த மௌனம் பிலாத்துவை விசாரணைக் கூண்டில் நிறுத்துவது? உனது தீர்ப்பு என்ன? என்று தீர்ப்புச்சொல்பவனையே கேள்வி கேட்டுநின்றது.

இயேசுவைப் பற்றி எங்கள் தீர்ப்பு என்ன? என்று எங்கள் மனச்சாட்சியைக் கூண்டில் நிறுத்தித் தீர்ப்பு வழங்கச் சொல்கிறார் யோவான்.

எங்கள் தீர்ப்பு என்ன?

**சிலுவை அடியில் பெண்கள்**

'கடவுளைப் பழிப்பவன்' என்று சமயபீடம் கண்டனம் செய்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயவிரோதியின் சிலுவை அடியில் இந்தப் பெண்கள் நிற்கின்றார்கள். 'அரசவிரோதி' என்று உரோமை அரசு கண்டனம் செய்த ஓர் குற்றவாளியின் சிலுவை அடியில் இந்தப் பெண்கள் நிற்கின்றார்கள். இதற்கு எவ்வளவு துணிவுவேண்டும்.

சிலுவை அடியில் அவர்களின் பிரசன்னம் சமய ஆட்சி பீடத்தையும், அரச ஆட்சிப் பீடத்தையும் கேள்வி கேட்கும் பிரசன்னம். மௌனமாக அந்த ஆட்சிப் பீடங்களைக் கண்டனம் செய்யும் பிரசன்னம். அந்த ஆட்சிப் பீடங்களை உதாசீனம் செய்யும் பிரசன்னம்.

அவர்கள் நிற்பது குற்றம் சுமத்தியவர்கள் பக்கம் அல்ல. குற்றம் சுமத்தப்படவர்கள் பக்கம்.

நீதி எந்தப் பக்கம்? நாம் எந்தப் பக்கம்?

### வெற்றிமுழக்கம்

'எல்லாம் நிறைவேறிற்று' என்று இயேசு செய்யும் வெற்றி முழக்கம் யோவான் நற்செய்தியில் மட்டுமே வருகிறது.

யோவானைப் பொறுத்தமட்டில் வெற்றி சிலுவையில் அறைந்தவர்களுக்கு அல்ல, சிலுவையில் அறையப்பட்டவருக்கே.

யோவானைப் பொறுத்தமட்டில் இயேசுவின் உதடுகளில் உதிரும் கடைசி வார்த்தை வெற்றி வார்த்தையே!

சாவிலும் இயேசு வெற்றி வேந்தர்! இயேசு சாவை வென்ற வெற்றி வேந்தர்!

### இயேசு பஸ்கா ஆட்டுக்குட்டி

யோவானைப் பொறுத்தமட்டில் உலகின் பாவங்களைச் சுமக்கும் தேவ ஆட்டுக்குட்டி, பஸ்கா ஆட்டுக்குட்டி இயேசுவே.

இயேசு 'தாகமாயிருக்கிறேன்' என்று சொன்னாலும் ஈசோப்புத் தண்டில் கடற்பஞ்சைப் பொருத்தி புளித்த திராட்சை ரசம் தரப்பட்டதும் யோவானைப் பொறுத்தமட்டில் திருப்பாடல் 69:21, வி.ப.12:22 என்ற மனவாக்கின் நிறைவேற்றம்.

இயேசுவின் எலும்பு முறிக்கப்படாததும் யோவானைப் பொறுத்தமட்டில் பஸ்கா ஆட்டுக்குட்டியை நினைவுபடுத்துகிறது (எண்.9:12)

நம் விடுதலைக்காக, பாவப் பரிகாரத்திற்காகப் பலியாவனர் இயேசு. சிலுவை மரணத்தின் உலகிற்கான செய்தி இதுவே.

### இரத்தமும் தண்ணீரும்

இயேசுவின் பக்கவிலாவிலிருந்து இரத்தமும் தண்ணீரும் வெளியேறியது என்று யோவான் உரைக்கும் போது அது நமது மீட்பின் ஊற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதையே எமக்கு நினைவுபடுத்துகின்றார். திருமுழுக்கு, திருவிருந்து என்ற இரண்டு திருவருட் சாதனங்களை நமக்கு நினைவுபடுத்துகின்றார்.

**பிரார்த்தனை :** **பிளவுண்ட மலையே**
**புகலிடம் ஈயுமே**
**பக்கம் பட்ட காயமும்**
**பாய்ந்த செந்நீர் வெள்ளமும்**
**பாவதோஷம் யாவையும்**
**நீக்கும்படி அருளும்**

OOO

**மார்ச் - 30**

உரோமை 6:3 – 11
லூக் 24:1 – 12

# கல்லறையா? கருவறையா?

உயிர்த்தெழுதலுக்கு முன்பாக அநுபவம் கல்லறை அநுபவம். இயேசு அடக்கம் பண்ணப்பட்டார். நாம் அடக்கம் பண்ணவேண்டியவை எவை? இயேசுவின் சாவு, பாவத்தின் சாவு. நம் வாழ்வில் அந்தப் பாவத்தின் சாவு இடம்பெறவேண்டும். பாவம் அடக்கம் பண்ணப்பட வேண்டும். திருமுழுக்கின் போது நாம் தண்ணீருக்குள் மூழ்குவது சாவைக் குறிக்கிறது. தண்ணீரிலிருந்து வெளியில் வருவது உயிப்பைக் குறிக்கிறது. பழைய ஆதாம் அடக்கம் பண்ணப்பட்டாலே புதிய ஆதாம் எம்மில் உருவாக முடியும்.

இயேசு அடக்கம் செய்யப்பட்ட கல்லறை வெறும் கல்லறை அல்ல. அது ஒரு கருவறை. புது வாழ்வு உதயமாகும் கருவறை. எனவே கல்லறைக்குள் இயேசுவோடு செல்வோம். நாம் கல்லறைக்கு அஞ்ச வேண்டிய அவசியமில்லை. கல்லறை இருளின் ஒழுங்கின்மையின் சின்னம்.

ஆதியிலே 'மண்ணுலகு வெறுமையாக இருந்தது ஆழத்தின் மீது இருள் பரவியிருந்தது. நீர்த்திரளின் மேல் கடவுளின் ஆவி அசைந்தாடிக் கொண்டிருந்தது (தொ.நூ. 1:1-2).

இயேசு கல்லறையில் உறங்கினாலும் கடவுளின் ஆவி அவர்மீது அசைந்தாடிக்கொண்டிருந்தது. கடவுளின் "வார்த்தை" பேசப்பட்டபோது இயேசு உயிர்த்தெழுந்தார்.

கல்லறையில் வைக்கப்பட்ட லாசரு இயேசுவின் 'வார்த்தை' கேட்டு உயிரோடு வெளியில் வந்தார். ஆதாமின் கல்லறையில் ஓர் குரல் ஒலித்தது. 'ஆதாமே எழுந்து வா' கல்லறை அநுபவத்தின் மேல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவியின் அசைவாட்டம் உண்டு. கல்லறை அநுபவத்தின் மேல் கடவுளின் வார்த்தை ஒலிக்கும். உயிர்ப்பு என்ற அதிசயம் நிகழும்.

தொடக்கத்தில் செயற்பட்ட கடவுளின் வல்லமையும் இயேசுவின் கல்லறை மீது செயற்பட்ட கடவுளின் வல்லமையும் ஒன்றே! அந்த வல்லமை உறங்குவதுமில்லை இறந்துவிடுவதுமில்லை அது என்றும் உயிரோடியங்கும் வல்லமை.

"உயிரோடு இருப்பவரைக் கல்லறையில் தேடுவதேன்?" என்ற கடவுளின் தூதர்களின் வார்த்தைகள், கடைசி வார்த்தை கல்லறையினுடையதல்ல என்பதை உறுதிப்படுத்துகின்றது.

"சாவே கடைசிப் பகைவன்' (1கொரி 15:26). அந்தப் பகைவனை அழிக்கவே இயேசு கல்லறைக்குள் செல்கின்றார். அப்பகைவனை வென்று அவர் உயிரோடெழும்போது 'சாவே, உன் வெற்றி எங்கே? சாவே, உன் கொடுக்கு எங்கே?' என்று நாமும் அவரோடு ஆர்ப்பரிக்கலாம்.

கல்லறை மீது கேட்கும் ஒலி கடவுளின் சிரிப்பொலியே மரணத்தின், பாவத்தின் தோல்விகண்டு கடவுள் சிரிக்கும் சிரிப்பொலியே உயிர்ப்பு. அவரோடு நாமும் சேர்ந்து சிரிப்போம்.

**பிரார்த்தனை : ஆண்டவரே, நீர் கல்லறைக்குள் உள்ளிட்டதால் கல்லறைக்குள் உள்ளிட நான் தயங்கமாட்டேன். என்னோடு வாரும் உமது உயிர்ப்பில் எனக்குப் பங்குதாரும். ஆமென்.**

OOO

**மார்ச் - 31**

தி.ப 10:34, 37-43
கொலொ 3:1 - 4
யோவா 20:1 - 9

# பூட்டா? சாவியா?

விடியற்காலையில் இருள்நீங்கும் முன்பே ஓர் உருவம் கல்லறைக்குச் செல்கிறது. அவ் உருவம் இரவு முழுவதும் தூங்கவில்லை. இருள் கவ்விய மனதோடு இருட்டோடு அந்த உருவம் கல்லறை நோக்கி வருகிறது. ஆண் துணையுமின்றி அதிகாலை இருட்டோடே அந்த உருவம் கல்லறை நாடி வருவது இயேசு மீது அந்த உருவம் கொண்டிருந்த மாறா அன்பைப் புலப்படுத்துகின்றது. அந்த உருவம் வேறு யாருமல்ல அது மகதலேனா மரியாள். மகதலேனா மரியாளின் இந்த அன்புச் செய்கை எங்கள் உள்ளத்தை உருக்குகிறது.

மகதலேனா மரியாள் ஒரு விபச்சாரி, பாவத்தில் உழன்ற பெண் என்பதற்கு எந்த நேரடி சாட்சியமும் திருமறையில் கிடையாது. மகதலேனா மரியாளை ஆட்டிப்படைத்த ஏழு பேய்களின் பிடியிலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயேசு அவளுக்கு விடுதலை கொடுத்தார் என்பதே இருக்கும் ஒரே சாட்சியம் (லூக் 8:1-3).

ஏழு என்பது முழுமை எண். ஏழு பேய்கள் அவளைப் பிடித்திருந்தன என்னும் போது பேய்களின் சக்தி முழுமையாக அவளை ஆட்கொண்டிருந்தது என்பதைக் குறிக்கின்றது. அவள் அவளாக இருக்கவில்லை. அவள் நரகத்தில் வாழ்ந்துகொண்டிருந்தாள். இருள் மிகுந்த தனிச் சிறைக்குள் முடங்கிக் கிடந்தாள். அந்த நரகத்திலிருந்து, சிறையிலிருந்து, இருளிலிருந்து அவளை வெளிச்சத்திற்குக் கொண்டுவந்தவர் இயேசு. வாழ்வு தந்தவர் இயேசு. அதை எப்படி மகதலேனா மரியாள் மறக்க முடியும்? இயேசுவில் அவள் மாறா அன்புகொண்டிருந்தாள். மாறாப் பற்று வைத்திருந்தாள். அவளுக்கு வாழ்வு இயேசு ஒருவரே.

கல்லறையின் கல் அகற்றப்பட்டிருப்பதைக் கண்டு அவள் உள்ளம் திடுக்கிட்டது. பாறாங்கல்லாய் அவள் மனது கனத்தது. அவள் ஓட்டமாய் ஓடினாள். செய்தியை சீடரிடம் கூறினாள். கல்லறை நோக்கி பதைபதைத்து ஓட்டம் எடுத்தனர். பேதுருவும் யோவானும், அந்த ஓட்டத்திற்கு ஈடுகொடுக்க முடியாத மகதலேனா மரியாள் கல்லறை வந்து சேர்ந்த போது அவர்கள் இருவரும் போய்விட்டார்கள். இயேசு மீதான மரியாளின் அன்பு அழுகையில்தான் வெளிப்பட்டது. ஆறாத் துயரில் அவள் மூழ்கியிருந்தாள். 'மரியாள்' என்று ஓர் குரல் ஒலித்தது. 'ரபூனி' என்று மரியாளிடம் பதிற்குரல் வந்தது. தெய்வ அன்பும் மனித அன்பும் ஒன்றையொன்று சந்தித்தன. உயிர்த்த இயேசுவின் முதல் தரிசனம் மரியாளின் அன்பிற்குத்தான் கிடைத்தது. 'நான் ஆண்டவரைக் கண்டேன்' என்று சொல்லும் பேறு அந்தப் பெண்ணிற்குத்தான் முதன் முதலில் உரிமையானது.

இதற்கு முன்பு என்ன நடந்தது என்பதைப் பார்க்க நாம் பேதுருவுடனும் யோவனுடனும் இணைந்து கொள்கின்றோம். கல்லறைக்கு முதன் முதலில் ஓடிவந்தது யோவான். அவன் இளைஞன். பிந்தி வந்தது பேதுரு, அவர் முதியவர். முதலில் கல்லறைக்குள் நுழைந்தது பேதுரு. துணிகளையும் இயேசுவின் தலையை மூடியிருந்த துண்டையும் கண்டார். அத்துண்டு மற்றத் துண்டுகளோடு இல்லாமல் ஓரிடத்தில் தனியாகச் சுருட்டி வைக்கப்பட்டிருந்தது. துணிகளை எவரும் தொடாமலே மாயமாய் இயேசுவின் உடல் வெளியேறியது போல் அது காட்சி தந்தது. பேதுருவுக்கோ எதுவும் புரியவில்லை. யோவான் உள்ளே சென்றார்; கண்டார்; நம்பினார். முதன் முதலில் உயிர்ப்பை நம்பியது இயேசுவால் அன்பு செய்யப்பட்ட இயேசுவின் அந்த அன்பார்ந்த சீடன்தான்.

அன்பு உள்ளங்கள் தான் உயிர்த்த இயேசுவைக் காணமுடியும். நம்பமுடியும். அறிவு அல்ல அன்பு உள்ளமே அதை உணர்கிறது. அறிவிற்கு எட்டாத மறைபொருள் இதயத்திற்குக் கிட்டும். இதயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரியாமலே நம்பும். காணாமலே நம்பும். இதயக் கதவில் பூட்டும் தொங்கலாம், சாவியும் தொங்கலாம். உங்கள் இதயக்கதவில் தொங்குவது பூட்டா? சாவியா?

**பிரார்த்தனை : உயிர்த்த ஆண்டவரே! என் பெயர் சொல்லி அழைத்து என் இதயக்கதவைத் திறந்தருளும். ஆமென்.**

OOO



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்.ஜோன்ஸ் கல்லூரி (1823 - 2013)
# 190 ஆவது ஆண்டை நோக்கி...

சென்.ஜோன்ஸ் கல்லூரியை ஆரம்பித்து வைத்தவர் அருள்பணி ஜோசப் நைற் அடிகளார். அவர் 1823 ஆம் ஆண்டு எட்டு பாடசாலைகளில் இருந்து ஏழு மாணவர்களைத் தெரிந்து எடுத்து, அவர்களைத் தனது இல்லத்தில் 'நல்லூர் ஆங்கில செமினறி" என்ற பெயரில் குருகுலக் கல்வியைக் கொடுத்தார். 1841 இல் இக்கல்லூரி சுண்டுக்குளிக்கு மாற்றம் பெற்றது.

இக்கல்லூரியில் சாதனை படைத்தவர்கள் ஏராளம். இங்கு கல்வி பெற்ற வர்கள் உலகின் பல பாகங்களிலும் பல துறைகளில் சிறந்து விளங்குகின் றார்கள்.

கல்விப் பணியோடு சமூகப்பணியையும் முன்னெடுத்து வருகின்றது சென்.ஜோன்ஸ் கல்லூரி. 1983 இல் இடம்பெற்ற வன்செயல்களில் பாதிப் புற்ற மாணவர்களை அரவணைத்து கல்வியூட்டியது. 2009 இல் ஏற்பட்ட இறுதி யுத்தத்தில் பாதிப்புற்ற மாணவர்களையும் அரவணைத்து கல்வி யூட்டி வருகின்றது. இதற்கு அநேகர் கைகொடுத்து உதவுகின்றனர்.

தற்போதைய முதல்வர் என்.ஜே.ஞானப்பொன்ராஜா அடிகளாரின் வழிகாட்டலின் கீழ் பல கல்வியூட்டல் நிகழ்வுகள் அறிமுகம் செய்து வைக் கப்படுகின்றது. அதில் ஒன்றுதான் 'கிறிஸ்தவ கற்கை நெறி அலகு" இந்த அமைப்பு 2006 இல் ஆரம்பிக்கப்பட்டது. சென்.ஜோன்ஸ் கல்லூரியின் கீழ் இயங்கிவருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. இதன் நோக்கம் கிறிஸ்தவ ஆன்மீகத்தையும் அறிவையும் வளர்பபது ஆகும்.

சென்.ஜோன்ஸ் கல்லூரியின் வளர்ச்சிக்கு பணியாற்றிய, பணியாற்றிக் கொண்டு இருக்கின்ற ஒவ்வொருவரும் போற்றுதலுக்குரியவர்கள். இக்கல் லூரி இன்னும் பல நூற்றாண்டுகள் கடந்து பணிசெய்ய இறைவன் ஆசி வேண்டி வாழ்த்துகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயேசுவின் பாதம் பூசை செய்திடுவோம்

## பல்லவி

இயேசுவின் பாதம் பூசை செய்திடுவோம்
செப நறு மலராலே;
அர்ச்சனை செய்வோம் அன்பரின் நாமம்
பிரார்த்தனை முறையாலே.

## சரணங்கள்

நாற்பது நாளாய், நசரேயா வனத்தில்
நயந்து செபித்தாய் நீ –
தோற்கடித்த பேய் மேற்கொள்ளாதெம்மை
ஊற்றிடு உனதாவி – கிறிஸ்து

செப மொழி வாசகம் திருவாய் மலர்ந்த
தபகுரு கிறிஸ்தரசே;
துயருடன் வந்துன் அருள்முகம் கண்டோம்
தயவுடன் அழைப்பாயே – அன்பாய்

உலகம் பேய் மரணம் தோற்கடித்தாயே
நிலவிய செபத்தாலே;
கவலை கொள்ளாதீர் கருத்துடன் செபியும்
நிலையுற்ற சாந்தி பெற்றீர் – என்ற

**இயேசுசகாயம் ஜ.த.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org